Registered as a News Paper

விலை: 12.00

# ஈழநாதம்

பக்கம் – 16

வெள்ளிநாதம் Weekly

நாதம்-14 | வெள்ளி-09 | 25-01 -மே- 2003




## மூன்றாண்டு வெற்றிக்களிப்பில்...



## நன்றி... வெஸ்போர்க்...



## இடம் தேடும் ஜப்பான்...



## யாழ்ப்பாணத்து இளைஞர்கள்?

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 25.04.2003

# தமிழ் மக்கள் எதிர்பார்ப்பது அனுதாபத்தின்பாற்பட்ட சலுகைகளையல்ல அங்கீகாரத்துக்குள்ளான உரிமைகளையே...

சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடந்த ஓராண்டு காலமாக இடம் பெற்றுவந்த பேச்சு வார்த்தைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டுள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித் துள்ளார்கள்.

விடுதலைப்புலிகளின் இந்த அறிவிப்புக் குறித்த கடிதமானது அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களால் சிறிலங்காப் பிரதமர் ரணில்விக்கிரம சிங்கவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் தாய்லாந்தில் நடைபெறவிருந்த ஏழாவது சுற்றுப் பேச்சுவார்த்தையிலும் யூன்மாதம் நடைபெற விருந்த இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் ஜப்பான் மாநாட்டிலும் விடுதலைப் புலிகள் கலந்து கொள்ளப் போவதில்லை என்று தீர்மானித்துள்ளனர்.

இந்தக் கடிதத்தின் உள்ளடக்கம், சமாதான நடவடிக்கையில் இருந்து விடுதலைப்புலிகள்முற்றாக விலகிக் கொண்டு விட்டார்கள் என்பதையோ, மீண்டும் போரை ஆரம்பிக்கப்போகிறார்கள் என்பதையோ கொண்டதல்ல....

மாறாக, கடந்த ஓராண்டு காலப் பேச்சுவார்த்தைகள், போர் நிறுத்த உடன் பாட்டில் காணப்படும் விடயங்களிலும், பேச்சுவார்த்தைகளின் போது இணக்கம் காணப் பட்ட விடயங்களிலும் எந்த அளவுக்கு அரசு நியாயபூர்வமாகவும், விசுவாசத்துடனும் உண்மையான சமாதானத்திற்கான தேடல் முனைப்புடனும், அவற்றை அமுல் செய்வதில் ஆர்வம் காட்டியுள்ளது என்பதை அரசும், சமாதான ஏற்பாட்டாளர்களும் மதிப்பீடு செய்து கொள்வதற்கான சூழலை ஏற்படுத்துவதையே நோக்கமாகக்கொண்டது என்றே எண்ணத் தோன்றுகின்றது.

இக் கடிதம் குறித்த செய்தி வெளியானதும் பெரும் அதிர்ச்சி அடைந்ததாகக் கூறிய சந்திரிகா, ஏதோ நடக்கக் கூடாத, ஏற் கனவே தான் எதிர்பார்த்திருந்த ஒன்று நடந்து விட்டது போலவும் விடுதலைப்புலிகள் முற்றாகவே சமாதானப் பாதையில் இருந்து விலகிவிட்டது போலவும், சிங்கள மக்களுக்கும், உலகிற்கும் காட்ட அவசர அவசரமாக முப்படைத்தளபதிகள்,பொலிஸ்மா அதிபர், பாதுகாப்புத்துறை அதிகாரிகள் ஆகியோரை அழைத்து, தனது அருமையான ஆலோசகர் கதிர்காமர் சகிதம் பிரதமருடன் நாட்டின் பாதுகாப்பு நிலைகுறித்து ஆலோ சனை நடத்தி ஒரு நாடகமாடி இருக்கிறார்.

இது சந்திரிகாவின் வழமையான தந்திரம் தான்.

நாட்டின் பாதுகாப்பு விடயத்தில் சனாதிபதியுடன் சகல விதத்திலும் ஒத்து ழைக்கத் தயார் என ரணிலும் உறுதி மொழி வழங்கியுள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

இக்கடிதம் அனுப்புவதற்கு முன்னரே பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன, முப்படைகளையும் "உஷார்" நிலையில் இருக்கும் படியும் மூன்று மாதங்களுக்குத் தேவையான இராணுவ உபகரணங்கள் வெடிமருந்துகள் மற்றும் ஏனைய அத்தி யாவசியப் பொருட்கள் ஆகியவற்றை களஞ் சியப் படுத்தும்படியும் உத்தரவிட்டுள்ளதுடன், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இராணுவத்தேவை களுக்கான நிதி ஒதுக்கீடுகளையும் வழங்கு மாறு பணிப்புரையும் விடுத்துள்ளார்.

படைத்தரப்பினரை பலப்படுத்தும் சகல நடவடிக்கைகளும் தீவிரமாக மேற்கொள் ளப்பட்டு வருகிறது.

சந்திரிகாவின் அபிலாசைகளுக் கேற்ப சமாதான முயற்சிகளை குழப்பும் நடவடிக்கைகளை காத்திருந்து செய்து வரும் அவரது மூன்றாண்டு காலப் 'பதவிநீடிப்பு' ஆசீர்வாதத்தைப் பெற்ற கடற்படைத்தளபதி தாயாசந்தகிரியின் கீழ் இயங்கும் கடற்படை அமெரிக்க போர்க்கப்பல்கள் மூலம் வலு வேற்றப்படுகின்றது.

சமாதானத்தை குழப்புவதில் ஆரம்பம் முதலே குறியாக இயங்கும் 'சவப் பெட்டி மிரட்டல்' புகழ் விசேட அதிரடிப்படைக்கு இத்தாலியப் பயிற்சி வழங்கப்படுகிறது.

அமெரிக்க, பிரிட்டிஷ், இந்திய, பாகிஸ்தானிய, பங்களா தேஷிய இரா ணுவ,கடற்படை மற்றும் விமானப்படை அதிகாரி களின் தொடர் விடயங்களும், ஆலோச னைகளும், சமாதானத்தை விடவும் முப்படை களை வலுப்படுத்துவதில் அரசு கொண்டுள்ள ஆழ்ந்த ஆர்வமிகு அக்கறையின் பிரதி பலிப்புகளாகவே உள்ளன.

அண்மைக்காலமாக, பேராசிரியர் பீரிஸ், அமைச்சர் மிலிந்த மொறகொட போன்றவர்களின் பேச்சுக்களில் காணப்படும் சமாதான வரட்சித்தனமும், விடுதலைப் புலிகளை மறைமுகமாக எச்சரிப்பது அல்லது பயமுறுத்துவது போன்ற அறிக்கைகளும் பேச்சும், இனப்பிரச்சினைக்கான நிரந்தரமான உறுதியான அரசியல் தீர்வொன்றை காணப் போவதாக ஆரம்பத்தில் அவர்கள் பிரகடனம் 'செய்த' உத்தரவாதங்களில் இருந்து 'சறுகி'வருகிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

பௌத்த பிக்குகளையும், அவர்களின் மதவாத அணுகுமுறைகளையும், பேரினவாத சிங்கள தீவிரவாதிகளையும் திருப்திப்படுத்தும் அதேசமயம் சமாதானத்தை நியாயபூர்வமாக 'இவர்கள்' முன்னெடுப்பார்களா என்ற சந்தேகம் வலுப்பெறத்தொடங்கியுள்ளது.

அமெரிக்காவையும் இந்தி யாவையும் காட்டி விடுதலைப்புலிகளையும், ஒட்டு மொத்தமாக தமிழினத்தையும் மிரட்டிவிடலாம் எனப் பீரிஸ் நினைக்கிறார். அதனால்தான் மீண்டும் விடுதலைப் புலிகள் போரை ஆரம்பித்தால் அமெரிக்காவும், இந்தியாவும் சிறிலங்காவுக்கு உதவும் என மூன்றாந்தரமான அரசியல் மிரட்டல் ஒன்றை அவரால் விடுக்க முடிந்துள்ளது.

விடுதலைப்புலிகளே சமாதா னத்திற்கான சமிக்ஞையை முதன் முதலாக இந்த அரசுக்கு காட்டியவர்கள்.

அவர்களே முதன் முதலாக ஒருதலைப்பட்சமாக போர் நிறுத்தத்தை மேற்கொண்டு இன்றைய சிறிலங்காவின் அமைதி நிலைக்கு வித்திட்டவர்கள்.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திட்டு, சமாதானத்தீர்வு ஒன்றை ஏற்படுத்துவதில் தமக்கிருக்கும் பற்றார்வத்தை விடுதலைப் புலிகளே உறுதிப்படுத்தினார்கள்.

இவையாவும் போரின் எழுச்சி நிலையில் இருந்து கொண்டு ஆக்கிரமிப் புக்குள்ளான தமது தாயகப்பகுதிகளை வெற்றிகரமாக மீட்டு யுத்தத்தில் தொடர் வெற்றிகளைப் பெற்று கம்பீரமாக நிமிர்ந்து நின்ற நிலையில் - சிறிலங்கா தன் பாது காப்புக்காக அயல்நாடுகளிடமும், உலக நாடுகளிடமும் உதவிகோரிக் கையேந்தும் நிலையில் இருந்தபோதே போர் நிறுத்தத்தைப் பிரகடனம் செய்தார்கள்.

இது சர்வதேசத்திற்கும் புரியும்.

அறுதிப் பெரும்பான்மைப் பலமற்ற ரணிலின் அரசிற்கு பொருளாதார ஸ்திரத் தன்மையற்ற ரணிலின் ஆட்சிக்கு பலத்தையும், பொருளாதார ஸ்திரத்தன்மையையும் இன்று விடுதலைப் புலிகளின் உளமார்ந்த ஒத்துழைப் புடன் கூடிய சமாதான நகர்வுகளே, வழங்கி யுள்ளது என்பதும் எல்லோருக்கும் தெரியும்.

இந்த நிலையில் 'செப்ரெம்பர் 11'இன் பின்னான பயங்கரவாதத்திற்கு எதிரான சர்வதேச நிலைப்பாடு - குறிப்பாக அமெரிக்காவின் நிலைப்பாடு - மற்றும் சர்வதேச அழுத்தம் ஆகியவைதான் விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு வர வைத்தது என பீரிசும், மொறகொடவும் பிதற்றி வருவது சமாதானம், அமைதி, அரசியற்தீர்வு ஆகியவற்றில் விடுதலைப்புலிகளும் தமிழ் மக்களும் ஏனைய உண்மையான சமாதான ஆர்வலர்களும் கொண்டுள்ள எதிர்பார்ப்புடனும் நம்பிக்கையுடனும் கூடிய அர்ப்பணிப்பு மிக்க ஈடுபாட்டை கொச்சைப்படுத்தும் செயற்பாடே யாகும்.

சிறிலங்காவின் அரசுகள் சமாதா னத்தை கடந்தகாலத்தில் எப்படியெல்லாம் அர்த்தப்படுத்தி வந்துள்ளன என்பதை விளக்கிக் கூறவேண்டியதில்லை.

விட்டுக்கொடுப்புகளை, புரிந்து ணர்வுடன் கூடிய செயற்பாடுகளை நீதியான தீர்வு குறித்த நம்பிக்கைகளை, அந்த அரசுகள் மேலாதிக்க சக்திகளின் ஆதரவு பலப் பின்னணியில் நின்று கொண்டு 'இளிச்ச வாய்த்'தனமாக எண்ணியதன் விளைவே சிறிலங்காவின் இன்றைய சீரழிவு நிலைக்குக் காரணம் என்பதை பேரினவாத உணர்வு கொண்டோர் புரிந்து கொள்வதேயில்லை.

இத்தனை பேரழிவுகளுக்கும் இழப்புகளுக்கும் பின்பும் கூட சிறிலங்காவின் ஆட்சியாளர்கள் சமாதான நடவடிக்கைகளில் தமது சுய அரசியல் அபிலாசைகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து வருவதுடன் சமாதானத்தின் பங்காளிகளாகச் செயற்படும் தமிழ் மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்றவே முனைகிறார்கள் என்பதுதான் வேதனமான விடயம்.

புரிந்துணர்வு உடன்பாட்டின் அம்சங் களை அது கைச்சாத்திடப்பட்டு ஓராண்டுக்கு மேலாகியும் கூட அமுல் செய்வதில் இழுத்தடிப்புச் செய்யும் அரசு காலம் கடத்தி தனக்கான அரசியல் அநுகூலங்களை மட்டும் சமாதானநகர்வுகளின் போது இலக்காகக் கொண்டியங்கும் அரசு, இறுதியில் ஒரு நியாயமான, நீதியான, உறுதியான அரசியல் தீர்வொன்றை முன்வைக்கும் திராணி கொண்டதாக இருக்கும் என எவ்வாறு நம்புவது?

சமாதான சூழல் தென்பகுதி மக்களை மகிழ்ச்சியாகவும், உயர்ச்சியாகவும், பாதுகாப்பாகவும் வைத்திருக்கும் அளவுக்கு போரினால் முற்றாக தமது இருப்பையே இழந்து போன தமிழ் மக்களை வைத்திருக்க அரசு என்ன செய்துள்ளது?

A9 பாதை திறப்பும், பொருளாதாரத் தடை நீக்கமும் மட்டும்தான் தமிழ் மக்களுக்கான சமாதானத்தின் பரிசா? இவை இரண்டும் கூட தென்பகுதியின் பொருளா தாரத்தை மேம்படுத்தி, வடக்கு கிழக்கின் எஞ்சிய பொருளாதார வளத்தை சகலவழிகளி லும் மேலும் சுரண்டிச் செல்லவே வழிவகுத் துள்ளது என்பதே யதார்த்தம்.

மக்களின் இயல்பு வாழ்க்கையை அவர்கள் 'அ' னாவிலிருந்து ஆரம்பிக்கவே, இவ்வளவு நெருக்கடி, தடை, அச்சுறுத்தல், அவமானம் ஆகியவற்றை எதிர்கொண்டு அல்லாட வேண்டியுள்ளதென்றால் இந்தப் புரிந்துணர்வு உடன்பாடு சாமானிய தமிழ் மக்களுக்கு எதனை வழங்கியுள்ளது?

பிரதமரின் நடவடிக்கையை எதிர்க்கும் சனாதிபதி.

சனாதிபதியின் புறக்கணிப்புகளை எதிர்க்கும் திராணியற்ற பிரதமர்.

சமாதானத்தை ஆதரிப்பதாகக் கூறிக் கொண்டே அதனை முற்று முழுதாகவே நிராகரிக்கும் சனாதிபதி....

சமாதானம் பற்றிப் பேசிக்கொண்டே அதில் குறித்த உடன்பாட்டின் அம்சங்களை நிறைவேற்ற பின்னடிக்கும் பிரதமர்.

சிறிலங்காவின் இரட்டை ஆட்சி அதிகாரவர்க்கத்தினரின் கால்களுக்கு சமாதானம் உதை- பந்தாக சிக்கித் திணறு கிறது.

சமாதான முயற்சிகளை பகிரங்க மாகவே எதிர்க்கும் ஜே.வி.பி யினரையும் ஏனைய பேரினவாதசக்திகளையும் வாயை மூடவைக்கும் திராணி அரசுக்கு இல்லை என்பது வெளிப்ப டையான விடயமாகும்.

சமாதான நகர்வுகளுள் சனாதிபதியின் பங்காதரவினை பெறுவதிலும் அது தோல்வி கண்டுள்ளது.

இந்த நிலையில் சமாதான விரோத சக்திகள் சனாதிபதியின் பின்னால் அணிதிரளும் சூழலை அரசே இயல்பாக உருவாக்கிவிட்டுள் ளதாகவே கருத இடமுண்டு.

இந்த ஆபத்தான அரசியல் சூழல், பலவீனமான பெரும்பான்மை கொண்ட தனது அரசாட்சிக்கு எந்த நேரத்திலும் ஆபத்தாக அமையலாம் என்ற அச்சம் ரணிலுக்கு... சமாதானம் தொடர்பான தமிழ்மக்களின் எதிர் பார்ப்புகளை, புரிந்துணர்வு ஒப்பந்த உடன் பாட்டின் அடிப்படையில்- அதில் குறிப்பிடப் பட்டுள்ள அம்சங்களை நிறைவேற்றி வைப் பதன் மூலம் உறுதிப்படுத்த தனது எதிர்கால அரசியல் குறித்த அச்சத்தின் பாற்பட்ட பேரினவாத சிந்தனை ரணிலை அனுமதிப் பதாகவும் இல்லை.

ஆனால் சர்வதேசத்தின் நிதிப் பிச்சையை பெறுவதற்கு மட்டும் சமாதானம் பற்றிபேசிக்கொண்டும், அது தொடர்பாக ஏதாவது செய்து கொண்டிருப்பது போன்று பாசாங்கு செய்து காலத்தைக் கடத்தவும் வேண்டும்.

பார்க்கப் போனால் அரசின் சமாதான நகர்வு தொடர்பான மூலோபாயம் மேற்குறித்த விடயத்தை மையங்கொண்டுள்ளதாகவே தெரிகிறது.

சமாதான நடைமுறைகளின் எந்த வொரு அம்சத்தையும் அரசு தனக்கும், தனது சமூகத்திற்கும் சாதகமாகவே சிந்திக்க முனை கிறது. ஆனால் விடுதலைப்புலிகள் மட்டும் தமது சமூகத்திற்கும், தமது மண்ணுக்கும் சாதகமாக-நியாயமாக எதனையும் சிந்திக்கக் கூடாதென்று விருப்புவதாகவும் உள்ளது.

கடந்த ஆறுகட்டப் பேச்சுக்களும், வெற்றிகரமாக, நம்பிக்கையூட்டும் விதத்தில், அமைந்ததாக பிரச்சாரத் தன்மையுடன் சர்வதேச அளவில் பிரச்சாரம் செய்யும் அரசு, தமிழ் மக்களின் அடிப்படை, இயல்பு வாழ்க்கை குறித்த விடயங்களையே இராணுவ நலன்களுக்கமைய அணுகுவது, தமிழ் மக்களை தொடர்ந்தும் ஆக்கிரமிக்கப்பட்ட மக்களாக வைத்திருக்க விரும்புகின்றது என்ப தையே உணர்த்துகிறது.

புரிந்துணர்வு உடன்பாட்டின் அடிப்படையையே மீறும் செயல் இதுவாகும்.

தமிழ் மக்கள் எதிர்பார்ப்பது, ஆக்கிரமிப்புக்கும், அடக்குமுறைக்கும் உள்ளான சலுகைகளையல்ல....

அங்கீகாரத்துடன் கூடிய உரிமைகளையே.....

இதனை அரசும் சர்வதேச சமூகமும் புரிந்து கொள்ளவேண்டும்.

சமாதானம் அமைதி என்ற விடயங்களில்-அது தொடர்பான விடயங்களில் - சம்பந்தப்பட்ட இருதரப்பினரையும் சமநிலையில் வைத்துப்பார்க்கும் தன்மை சர்வ தேச சமூகத்திற்கு அவசியம்.

இல்லையேல் சமாதானம் 'ஒருகை ஓசை'யாகிவிடும்.

அமுலாக்கம் பெறாத, தீர்மானங்களை மட்டுமே உருவாக்கும் பேச்சுக்கள் எந்த விதமான அர்த்தத்தையும் கொண்டவையாக இருக்காது. மாறாக, ஒருபக்கச்சார்பான நலன்களைப் பாதுகாக்கும் இலக்கினைக் கொண்டதாகவே இருக்கும்.

தற்போதைய பேச்சுக்களின்இலக்கு அத்தன்மை கொண்டதாகவே உள்ளது. இது உடனடியாக மாற்றப்பட வேண்டும்.

இராணுவ நலன் பேணும் சமாதானம் என்று எதுவுமே கிடையாது. சமாதானம் மக்கள் நலன் சம்பந்தப்பட்ட விடயம் மட்டுமேயாகும்.

இந்த அடிப்படையில் சமாதானத்தின் எதிர்காலம் பற்றிய, பேச்சுவார்த்தைகள் குறித்த வரைபுகள் மீளாய்வு செய்யப்பட்டு, இராணுவ நோக்கற்ற, மக்களின் இயல்பு வாழ்வினை சுதந்திரமான முறையில் தங்கள் மண்ணில்தாங்கள் வாழும் உரிமையை அங்கீகரித்து நடைமுறைப்படுத்தும் அம்சங் களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படல் வேண் டும்.

சமாதானத்திற்கு சவால்விடும் மிரட்டல்தனமான அறிக்கைகள் விடும் சிறி லங்கா சனாதிபதியுடன் சமாதான நகர்வு தொடர் பாக ஒரு புரிந்துணர்வுக்கு ரணில் வரவேண்டும். இந்த புரிந்துணர்வுக்கும் சர்வதேச சமூகம் அனுசரணையாளராக இருந்து உத்தரவாதப் படுத்த வேண்டும்.

சமாதானத்திற்கு எதிரான ஜே.வி.பி போன்ற பேரினவாத சகல சக்திகளும், தொடர்பூடகங்களும் சட்டரீதியில் ஒடுக்கப்பட வேண்டும்.

இல்லையேல் சமாதானத்தின் எதிர் காலம் அர்த்தமற்ற பேச்சுக்களின் 'அலட் டல்'களாகவே இருக்கும்.

இந்த வகையில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் பிரதமர் ரணி லுக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் காணப்படும் அம்சங்களை அரசு கவனத்தில் கொள்ள வேண்டியதும், அதுகுறித்து பேசி முடிவெடுக்க வேண்டியதும் மிக அவசியமானதாகும்.

அது சமாதானப் பேச்சு வார்த்தை களில் அரசு கொண்டிருக்கும் ஆத்மார்த்தமான பிடிப்பையும்- அதனை தொடர்வதிலும் பிரச் சினைக்கு உறுதியானதும் நியாயமானதுமான தீர்வொன்றை எட்டுவதிலும் அரசுக்கு இருக்கும் ஆர்வத்தையும் வெளிப்படுத்துவதாக அமையும்

அர்த்தமற்ற பேச்சுக்களைவிடவும் அர்த்தமுள்ள மௌனம் ஆயிரம் விடயங்களை உணர்த்தும் வலிமைமிக்கது.

சட்டம் தடை செய்யாததையும் தன்னடக்கம் தடை செய்து விடுகிறது. - ஸெனெகா.

# நன்றி....வெஸ்போர்க் சென்று வருக



**இது** நடந்தது வவுனியாவில். சுமார் 14 மாதங்களுக்கு முன்பு.

அன்று புரிந்துணர்வு உடன்படிக்கைகைச் சாத்தாகிய நாள். வவுனியாவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புரிந்துணர்வு உடன்படிக்கையில் உத்தியோக பூர்வமாகக் கைச்சாத்திட்டார். இதன் போது அவரருகே நோர்வேயின் முந்நாள் தூதுவர் ஜோன்வெஸ்போர்க் இருந்தார்.

ரணிலைப் பொறுத்தவரை



அது மிகவும் உணர்ச்சிகரமான ஒரு தருணம்.

அவருடைய எழுச்சிக்கான தளத்தை அமைத்துக் கொடுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடும் போது அவர் பலவிதமான உணர்ச்சிகளின் கலவையாகக் காணப்பட்டார்.

கிளர்ச்சி, பதட்டம்,சாகசம், உற்சாகம் என்பவற்றின் கலவையாக அவர் அமைதியின்றிக் காணப்பட்டார்.

வெஸ்போர்க் அருகே அமைதியாக அமர்ந்திருந்தார்.

உடன்படிக்கையில் கையெழுத்துப் போட்ட ரணில் எழுந்து நின்று அதை வெஸ்போர்க்கிடம் கையளித்த கையோடு முகத்தை கமராக்களை நோக்கித் திருப்பி வெற்றிப் பெருமிதத்துடன் சிரிக்கலானார். தன்னை நோக்கி குலுக்குவதற்காகக் கையைநீட்டிய வெஸ்போர்க்கை அவர் கவனிக்கவேயில்லை.

ஆட்சிக்கு வந்த உடனேயே பெற்ற முதல் வெற்றி அது என்ற பெருமிதத்தால் கையெழுத்துப் போட்ட ஆவணங்களை கைமாறும் போது உரியவருடன் கைகுலுக்கவேண்டும் என்ற ராஜிய வழமையை அவர் மறந்து விட்டார் போலும்.....

இலங்கைத்தீவின் தலைவிதியைத் தீர்மானிக்க வல்ல தருணங்களில் ஒன்று அது. அதில் நடுவரோடு கைகுலுக்க மறந்து சிரித்துக் கொண்டு நின்ற பிரதமரும்..... குலுக்கப்படாத தனது கையை நீட்டிக்கொண்டு நின்ற வெஸ்போர்க்கும்........

அன்றிலிருந்து தொடங்கி இம்மாதம் தனது சேவைக்காலம் முடிந்து நாடுதிரும்பும் வரையிலும் வெஸ்போர்க் இலங்கைத்தீவின் அரசியலில் மிகவும் சர்ச்சைக்குரியவராக மாறினார்.

இலங்கைத்தீவின் நவீன வரலாற்றில் அதிகம் கதைக்கப்பட்ட அதிகம் துருத்திக்கொண்டு தெரிந்த இரு வெளிநாட்டுத் தூதுவர்களில் அவரும் ஒருவர்.


நோர்வீஜிய கிறிஸ்தவ மிஷனறி ஒன்றின் உறுப்பினராய் இருந்த பெற்றோருக்கு ஜோன் வெஸ்போர்க் பிறந்தார்.

வடகிழக்கு இந்தியாவின் அசாம் மாநிலத்தில் போடோ பழங்குடிகளின் மத்தியில் அவர் வளர்ந்தார். அங்கேதான் அவருடைய பெற்றோர் மிஷன் வேலைகளைச் செய்து வந்தார்கள்.

ஏனையமேற்கத்தேய மிஷன்களைப் போலல்ல, நோர்வீஜிய மிஷன்கள் மெய்யாகவே தொண்டு செய்யத்தான் வந்தன. பீரங்கியும் பைபிளுமாக சுதேசிகளை மதம் மாற்ற வந்தவை அல்ல.

இந்தப் பின்னணி - அதாவது கீழைத்தேசத்து பழங்குடியொன்றின் மத்தியில் மெய்யாகவே ஊழியஞ்செய்ய வந்த பெற்றோரின் பிள்ளையாக வளர்ந்தமை என்பது வெஸ்போர்க்கை பல விதங்களிலும் உருவாக்கியது.

இலங்கைக்கும் அவருக்



குமான உறவு இங்கேஅவர் நோர்வேத்தூதுவராக வருவதற்கு இருதசாப்தங்களுக்கு முன்னரே தொடங்கிவிட்டது.

நோர்வீஜிய சிறுவர்பாதுகாப்பு நிதியம் என்ற தொண்டு நிறுவனத்தின் வதிவிடப்பிரதிநிதியாக இங்குவந்த வெஸ்போர்க் அம்பாந்தோட்டையில் பல ஆண்டுகளாகத் தங்கியிருந்ததாகக் கூறப்படுகிறது.

அந்நாட்களில் அவர் கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் வந்து போய் இருக்கக் கூடும் என்று நம்புமளவுக்கு அவருக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள விசுவமடு, பரந்தன் போன்ற பகுதிகளைப் பற்றிய நுட்பவிபரங்கள் எல்லாம் தெரியுமாம்.

அம்பாந்தோட்டையில் - அதாவது சிங்கள இனத்துவத்தின் அடிஆழப் பிரதேசம் ஒன்றில் பல ஆண்டுகள் பணிபுரிந்தவர் என்பதால் தமிழர்களைக் குறித்த சிங்களவரின் மனோபாவத்தில் எங்கே பிசகியது என்பதை ஓரளவுக்கேனும் தெரிந்து வைத்திருக்கும் வாய்ப்புக்கள் அவருக்கு அதிகமிருந்தன.

சில சமயம் அப்பொழுது அவர் அப்படியேதையும் கண்டு பிடிக்கத் தவறியிருந்தாலும் கூட இப்பொழுது நிச்சயமாக ஒரு சரியான சித்திரம் அவரிடம் இருக்கும் என்று நம்பலாம்.

ஏனெனில் அண்மைக் காலங்களில் சிங்களவர்களால் எல்லாமட்டத்திலும் அதாவது அரசியல்வாதிகள், புத்திஜீவிகள் ,பிக்குகள், வெகுசனங்கள், மீடியாக்கள் என்று எல்லாத்தரப்பினராலும் மிகக் கீழ்த்தரமாக நிந்திக்கப்பட்ட ஒரு வெளிநாட்டவராக அவர்காணப்படுகிறார்.

லக்ஷ்மன் கதிர்காமருக்கு அவர்மிகவும் நெருக்கமானவர் என்றொரு தகவல் உண்டு. இருவருடைய வசிப்பிடங்களும் கொழும்பில் அருகருகேதான் அமைந்துள்ளனவாம்.

ஆனால் இது எதுவும் சிங்களவர்கள் அவரைப் படுகேவலமாகத் திட்டித்தீர்ப்பதற்குத் தடையாக இருக்கவில்லை.

தமிழர்களைப் பொறுத்தவரை - அவருடன் குறிப்பிடத்தக்க அளவு பழகிய ஒரு மூத்த தமிழர் சொன்னார்....... வெஸ்போர்க் ஒரு கொடாக்கண்டன் விடாக்கண்ட்ன் வகை ஆள் என்று. சிரித்து சிரித்துக்கதைத்து காய்களை நகர்த்துவதில் அவர் கெட்டிக்காரர் என்றும், தன்னுடன் கதைத்துக் கொண்டிருப்பவரிடமிருந்து "இல்லை" என்ற பதில் வந்துவிடாத படி கதையைக் கொண்டுபோகும் சாமர்த்தியம் அதிகம் வாய்க்கப் பெற்றவர் அவர் என்றும் கூறப்படுகிறது.

அண்மையில் சனாதிபதி சந்திரிகா அவருக்கு வைத்த பிரியாவிடை வைபவத்தின் போது சந்திரிகா மகிழ்ச்சியாகக் காணப்பட்ட ஒரு தருணத்தில் வெஸ்போர்க் அவரிடம் ஒரு விசயத்தைக் கேட்டிருக்கிறார். அதாவது நோர்வேயின் நோபல் பரிசுக்குழுவின் முன் உரையாற்றும்படி முன்பு நோர்வே அரசாங்கம் சந்திரிகாவைக் கேட்டிருந்தது. அப்பொழுது அந்த அழைப்பை சந்திரிகா நிராகரித்து விட்டிருந்தார்.

அன்றைய சந்திப்பில் சந்தோசமான மூடில் இருந்த சந்திரிகா வெஸ்போர்க் அதைப் பற்றிக் கதைத்தவிதத்தாலோ என்னமோ அந்த அழைப்பு இப்பொழுதும் செல்லுபடியாகும் என்றால் தான் அதை ஏற்றுக்கொள்ளத் தயார் என்று கூறினாராம்.........

ஆனாலும் சிங்கள எதிர்க்கட்சிகள் மட்டத்திலும் மீடியாக்கள் மட்டத்திலும் , வெகுசன மட்டத்திலும் வெஸ்போர்க் இப்பொழுதும் வெறுக்கப்படும் ஒரு தூதுவர்தான்.

சுதந்திரத்துக்குப பின்னான கொழும்புமைய அரசியலில் அதிகம் சர்ச்சைக்குள்ளாகிய இரண்டு வெளிநாட்டுத் தூதுவர்களில் அவருமொருவர்.

மற்றவர் டிக்சிற்

இருவருமே ஈழப்போரில் "சமாதானம்" செய்ய முயன்றவர்கள். முடிவில் ஏதோ ஒரு தரப்பின் வெறுப்புக்கிலக்காகியவர்கள்.

ஈழப்போரில் சமாதானம் செய்யவரும் எவரையுமே ஒரு கட்டத்தில் தமிழருக்கு எதிராகத் திருப்பிவிடும் தந்திரத்தில் சிங்கள அரசியல்வாதிகள் எவ்வளவு தேர்ச்சி பெற்றவர்கள் என்ற மிகக் கசப்பான பாடம் இந்த இரண்டு தூதுவர்களுக்கும் உண்டு.

இதில் ஜெயவர்த்தனவின் பொறிக்குள் சிக்கி தமிழர்களைப் பகைத்தவர் டிக்சிற்.

மாறாக இயன்றவரை நடுநிலை பேணமுயன்று முடிவில் சிங்களவர்களின் கடும் வெறுப்பைச் சம்பாதித்தவர் வெஸ்போர்க்.

**நிலாந்தன்**

இதற்குக் காரணம் நோர்வே இப்பிராந்தியத்தில் தனக்கென்று தனிப்பட்ட நேரடி நலன்கள் எதுவுமற்ற ஒரு நாடு என்பதால் அவர்கள் ஒப்பீட்டளவில் மெய்யாகவே விசுவாசமாகவே இங்கு சமாதானம் செய்ய வந்தார்கள் என்பதுதான்.

மாறாக, இந்தியா இப்பிராந்தியத்தின் பேரரசுஎன்ப தால் அதற்கென்று நிலையான நலன்களும் வியூகங்களும் உண்டு.

இதனால் டிக்சிற் ஏறக்குறைய ஒரு வைஸ்றோய் போலவே நடந்து கொண்டார். வெஸ்போர்க்கிடமிருந்த மென்மையோ சாதுரியமோ டிக்சிற்றிடம் இருக்கவில்லை. ஒரு பேரரசின் பிரதிநிதி என்ற கர்வம் காரணமாக டிக்சிற் அநேகமாக இறுகிய முகத்தோடேயே காணப்பட்டார்.

எல்லாம் தெரிந்த தோரணையும் இறுமாப்பும் அவரை இறுதியில் எல்லாவற்றையும் போட்டுடைப்பதில் கொண்டு போய் விட்டன.

இந்தியாவுக்கும் ஈழத் தமிழர்களுக்கும் இடையிலிருந்து வந்த மிகப்புராதனமான பிணைப்புக்கள் உடைந்தன. இது தவிர்க்கவியலாதபடி ஈழப்போரை அதன் இந்தியச் சாய்விலிருந்தும் இந்தியப் பின்புலத்திலிருந்தும் பிடுங்கி எடுத்து மேற்கத்தேய மையங்களை நோக்கித் திருப்பியது.

இப்படி மேற்கத்தேய மயப்பட்டதன் ஒருகட்ட முதிர்ச்சியாகவே இப்பொழுது நிலவும் சமாதானத்தைப் பார்க்க வேண்டும்.

மேற்குநாடுகளின் தூதுவா போல நோர்வே இம்முறை சமாதானத்தின் அனுசரணையாளராகக் காணப்படுகிறது.

இதில் வெஸ்போர்க் ஒரு கருவிதான்.

ஆனாலும் இலங்கைத்தீவின் சமாதானத்தைப் பொறுத்தவரை மிகவும் அசாதாரணமான ஒரு காலகட்டத்தில் அவருடைய பாத்திரம் ஒரு வெளிநாட்டுத் தூதுவர் என்பதற்கும் அப்பாலானதாக இருந்தது.

டிக்சிற்றின் பாத்திரமும் இத்தகையதே. அவர் ஈழப்போர் இந்தியப் பின்னணியில் நிகழ்ந்த ஒரு காலகட்டத்தை பிரதிநிதித்துவம் செய்தவர்.

வெஸ்போர்க், ஈழப்போர் மேற்கத்தேயப் பின்னணிக்குச் சென்று விட்ட ஒரு புதிய காலத்தை பிரதிநிதித்துவம் செய்கிறார்.

ஆனால் ஒரு பிராந்தியப் பேரரசின் வைஸ்றோய்போல நடந்து கொண்ட டிக்சிற்றுக்கும், சமாதானத்தை அதிகபட்சம் விஞ்ஞான பூர்வமாகச் செய்ய முயலும் ஒரு மேற்கத்தேய ஒழுக்கத்தின் பிரதிநிதியாகக் காணப்படும் வெஸ்போர்க்குக்கும் இடையில் சுபாவத்திலும் நடையுடைபாவனைகளிலும் ஏராளம் வேறுபாடுகள் உண்டு.

டிக்சிற் சேவைக்காலம் முடிந்து வெளியேறிய போது அவருடைய கைகளில் தமிழரின் ரத்தம் மட்டுமல்ல சிங்களவர்களின் ரத்தமும் ஒட்டிக்கொண்டிருந்தது.

அதாவது ஐ.பி.கே.எப். இன் பிரசன்னத்தை எதிர்த்து ஜே.வி.பி. தனது இரண்டாவது கிளர்ச்சியை ஆரம்பித்து விட்டிருந்தது அப்போது.

ஆனால் வெஸ்போர்க் இம்மாதம் தனது சேவைக்காலம் முடிந்து இலங்கைத்தீவை விட்டுப் போனபோது யுத்தநிறுத்தத்துக்கு 14 மாதங்கள் வயதாகியிருந்தது.

இலங்கைத்தீவுக்கு மிகவும் அசாதாரணமான மிகநீண்ட கால யுத்தநிறுத்தம் ஒன்றைத் தந்து விட்டு அவர் போகிறார்.

இலங்கைத்தீவின் ராணுவ வரலாற்றிலேயே அதிகளவு படையினர் அதாவது சுமார் பத்தாயிரம் பேர் லீவில் போனமை என்பது இம்முறை புதுவருசத்தில் மட்டும்தானாம். வழமையாக ஆகக்கூடியது 3000பேர்களுக்கு மட்டும்தான் லீவு தரப்படுவதுண்டாம்.

இதெல்லாம் இப்பொழுது நிலவும் யுத்தநிறுத்தத்தாலேயே சாத்தியமாகியது.

இப்படிப் பார்த்தால் யுத்தகளத்துக்குத் தமது பிள்ளைகளை அனுப்பிய எல்லாத் தாய்மாரின் ஆசீர்வாதங்களும் வாழ்த்துக்களும் வெஸ்போர்க்கிற்கும்தான்.

இந்த யதார்த்தத்தைப் புறக்கணித்து விட்டு யாராவது அவரைத் திட்டுவார்களாயிருந்தால் ஒன்றில் அவர்கள் யுத்தவியாபாரிகளின் நண்பர்களாய் இருக்க வேண்டும். அல்லது சவப்பெட்டிக்கடைக்காரர்களாய் இருக்க வேண்டும். அல்லது சாத்தானின் ஊழியர்களாய் இருக்கவேண்டும்.

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உய்த்து விடும். - திருவள்ளுவர்.

# நறுக்கென...

## அச்சமூட்டும் வகையிலான அரசியல் உறவுகள்



'எனக்கும் ரணில் விக்கிரம சிங்காவுக்கும் இடையிலான உறவு நிலை அச்சமூட்டும் வகையில் அமைந்துள்ளது' - இவ்வாறு கூறியிருப்பவர் வேறு யாருமல்ல சிறிலங்காவின் அதிகாரபீடத்தலைவியான சனாதிபதி சந்திரிகாவேதான்.

அம்மணி வெகுகாலத்திற்கு பிறகு ஓர் உண்மையைக் கூறியுள்ளார். அவர் அச்சமூட்டும் வகையிலான உறவாக தங்களுக்கு இடையிலான சனாதிபதி - பிரதமர் என்ற பதவிகளின் அடிப்படையிலான தொடர்புகள் இருப்பதையே குறிப்பிட்டிருக்கிறார் என்பது தெளிவான விடயமாகும்.

இதில் யாருடைய உறவு யாருக்கு அச்சமூட்டும் வகையில் அமைந்துள்ளது என்பதே கேள்வியாகும்.

நேரடியாக நோக்கில், சந்திரிகாவின் நிறைவேற்று அதிகார பலம், ரணில் பிரதமராக பதவியேற்ற நாள் முதலே அவருக்கு வெரும் அச்சுறுத்தலாக இருந்துவந்துள்ளது. தொடர்ந்தும் இருந்து வருகின்றது என்பது அனைவருக்கும் தெளிவான ஒன்றாகும். அதுவும் ரணிலின் ஓராண்டு கால பிரதமர் பதவியிலான அவரது தந்திரோய ரீதியிலான ஆட்சியின் காலகட்டம் முடிந்தது முதலே, அவரது ஆட்சியை ஏதாவது ஒரு காரணத்தை முன்வைத்து கலைக்கும் அதிகாரக் கத்தி ரணிலின் தலைக்குமேல் சந்திரிகாவினால் தொங்கவிடப்பட்டுள்ளது.

இது ரணிலுக்கு அச்சமூட்டும் நிலைதான்.

அந்தக்கத்தியை உடனடியாக பயன்படுத்தி ரணிலின் பதவித் 'தலை'மையை அறுத்துவிடுமான சந்திரிகாவின் புதிய 'செந்தோழர்'களாக உருவெடுத்து வரும் ஜே.வி.பி.யினர் நிர்ப்பந்தித்து வருகின்றனர்.

இந்தநிலையில் ரணிலின் பதவிக்கு அச்சமூட்டும் வகையிலான ஆபத்து எந்த நிமிடமும் எந்தக் கணமும் இருப்பது உண்மையேயாகும்.

ஆனால் ரணிலின் மூலோபாயம் வேறு. இலக்குடன் கூடிய வியூகமொன்றினை மிக நுட்பமாக வகுத்துக் கொண்டுள்ளதாகவே உள்ளது.

அது சமாதானம் என்ற மந்திரவார்த்தைஎ்ய அடிப்படையாகக் கொண்டதாகும். அந்த மந்திரச்சொல்லின் மூலமாக பெற்றுக்கொண்டுள்ள சர்வதேச சமூகத்தின் - குறிப்பாக அமெரிக்கா தலைமையான அதன் ஆதரவு நாடுகளினதும் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த நாடுகளினதும் பரந்த அளவிலான ஆதரவுப் பின்னணியின் 'வலு' என்பது சந்திரிகாவை எந்த நடவடிக்கையையும் தனது அதிகார வலுவைப் பயன்படுத்தி ரணிலின் ஆட்சியை. கலைக்கும் வகையில் மேற்கொள்ள முடியாத ஒரு நிலையை அவருக்கு ஏற்படுத்தியுள்ளது.

அப்படியானதொரு ஆட்சி நீக்க நடவடிக்கை சர்வதேச ரீதியில் சந்திரிகாவுக்கு பல நெருக்கடிகளையும் அழுத்தங்களையும் சந்திக்கும் நிலையை ஏற்படுத்திவிடும்.

இது சந்திரிகாவுக்கு அச்சமூட்டும் விடயமாகும்

இந்த நிலையில் சந்திரிகா தனக்கும் ரணிலுக்குமான உறவு அச்சமூட்டும் வகையில் அமைந்துள்ளதாக கூறியது இருதரப்புக்கும் இடையிலான ராஜதந்திர காய்நகர்த்தல்களின் அடிப்படையில் அமைந்த ஒன்றேயாகும்.

இருவருமே ஒருவருக்கு ஒருவர் அஞ்சுகிறார்கள். அதேபோல் ஒருவரையொருவர் அச்சமூட்டவும் முனைகிறார்கள். அவ்வளவுதான்.

## அமைச்சர் பீரிஸ்ஜயாவுக்கு...



அண்மைக்காலங்களில் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அவர்களின் உரைகளும், அறிக்கைகளும் அவருடைய வழமையான 'பாணி'யில் இருந்து வேறுபட்டதாகவும் ஒரு விதமான மிரட்டல் தன்மை கொண்டதாகவும் அமைந்து வருவதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

சர்வதேச அழுத்தங்களின் பின்னணியில் தான் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைக்கு வந்துள்ளார்கள் என்றார் அண்மையில் ஒரு கூட்டத்தில்....

மற்றொரு கூட்டத்தில், பௌத்த குருமாருக்கு சமாதான முயற்சிகள் பற்றி விளக்கமளிக்கையில், 'தன்னிச்சையாக விடுதலைப் புலிகள் போரை ஆரம்பித்தால் இந்தியா, அமெரிக்கா உட்பட சர்வதேச நாடுகள் சிறிலங்கா அரசுக்கு உதவும்' என்று உத்தரவாதம் அளித்துள்ளார்... அல்லது அவர்களைத் திருப்திப்படுத்த முனைந்துள்ளார்.

அண்மையில் தான்பேசும் கூட்டங்களில் 'விலாங்கு'த்தனமாக சந்தர்ப்பவாதத்தன்மை கொண்ட பேச்சுக்களை பேசும் பீரிஸ், பேரினவாதிகளை கண்டு அஞ்சுகிறார் என்பது தெளிவு. அவர்களை சமாதானப்படுத்த 'விடுதலைப்புலிகளை' சீண்டும் அல்லது மிரட்டும் பாணியிலான பேச்சுக்களை அவர் பேசிவருவது அவரது 'அரசியல்' ரீதியிலான பலவீனத்தையே காட்டுகிறது.

பேச்சுவார்த்தை மேசைகளில் புன்னகைத்து கைகுலுக்கி சர்வதேசத்தை கவரமுனையும் அவர் அதேசர்வதேசத்தை வைத்தே தமிழ்மக்களை மிரட்டவும், சிங்கள மக்களை திருப்திப்படுத்தவும் முனைகின்றார் போலத்தெரிகிறது.

விடுதலைப்புலிகள் தான் தன்னிச்சையாகப் போர்நிறுத்தத்தை அறிவித்து சமாதானத்திற்கான 'சமிக்ஞை'யை முதலில் தெரிவித்தவர்கள். போரில் தொடர் வெற்றிகளைப் பெற்ற நிலையில் அந்த யுத்தநிறுத்த பிரகடனத்தை செய்திருந்தவர்கள். அதன் பிரதிபலிப்பாகவே - தொடர் நிகழ்வாகவே சிறிலங்கா அரசின் 'வங்குரோத்து' நிலையில் இருந்த பொருளாதார நிலை இன்று நம்பிக்கையூட்டும் வகையில் மூச்சு விட்டுவருகிறது.

விடுதலைப்புலிகளின் சமாதானம் மீதான பற்றுறுதியே இன்று ரணிலின் ஆட்சியை சந்திரிகாவினால் வீழ்த்தபடாமல் இருப்பதற்கு காரணம் என்பதையும் பீரிஸ் அவர்கள் புரிந்துகொள்வது நல்லது.

அமெரிக்காவையும், இந்தியாவையும் காரணம் காட்டி,அவர்கள் உதவுவார்கள் என்பதை உறுதிப்படுத்தி சிங்கள மக்களையும் பேரினவாத பௌத்த குருமாரையும் உற்சாகப்படுத்த பீரிஸ் முனையலாம். ஆனால் இந்தவகையிலான அச்சுறுத்தல் பேச்சுக்களே சமாதானத்திற்கு குந்தகம் ஏற்படுத்தும் செயற்பாடுகளின் ஆரம்பமாகி விடும் என்பதையும் அவர் புரிந்து கொள்ளவேண்டும்.

இந்தியாவும் அமெரிக்காவும் மட்டுமல்ல இன்னும் எத்தனையோ நாடுகள் ஏற்கனவே தமிழ் மக்களுக்கு எதிராக போரை நடத்துவதற்கு கடந்த காலங்களில் சிறிலங்காவில் அடுத்தடுத்து ஆட்சிபீடம் ஏறி அதிகாரம் பண்ணிய இனவெறி அரசுகளுக்கு எப்படியெல்லாம் உதவியது தமிழ்மக்கள் அறியாத ஒன்றல்ல. இந்தப் போர்நிறுத்த சமாதான காலத்திலும் சிறிலங்காவின் ஆயுதப்படையினருக்கு இந்தநாடுகள் வழங்கிவரும் ஆயுத தளபாட உதவிகளையும் பயிற்சி வசதிகளையும் கூட அனைவரும் அறிவர்.

'இதனைச் சிங்கள அரசின் ஒருபோர்' பிரகடனத்திற்கான முதற்தயாரிப்பாகவே தமிழ்மக்கள் பார்க்கின்றார்கள் என்பதையும் அமைச்சர் பீரிஸ் அறிவது நல்லது.

## தொடரும் அநுராவின் கோமாளித்தனங்கள்...



'சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பி.யினருக்கும் இடையே புரிந்துணர்வு உடன்பாடு ஏற்படுவதில் அமெரிக்காவுக்கு இஷ்டமில்லையாம்....'

இதனை அண்மையில் விடைபெற்றுப் போகும் அமெரிக்கத்தூதுவர் ஆஷ்லிவில்ஸ், விடைபெறும் நோக்கில் அநுரா பண்டாரநாயக்கவைச் சந்தித்தபோது இந்தஉடன்பாடு தொடர்பான தனது அதிருப்தியை வெளிப்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

அதற்கு அநுரா என்ன பதிலை சொன்னாரோ தெரியவில்லை. ஆனால் பத்திரிகைச்செய்திகளின் பிரகாரம் அநுராவின் அந்த உடன்பாடு அரசியல் ரீதியிலானது என்றும் முற்போக்கு சக்திகளுடன் இணைந்து செயற்படுவது தங்களது கட்சியின் கோட்பாடு என்றும் கூறியதாகவும் தெரிவித்திருக்கின்றன.

'இதனை விட ஜே.வி.பி.யின் வாக்கு வங்கி பலமானது என்றும் மற்றொரு பேட்டியில் தெரிவித்துள்ள அநுரா சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வாக்குகளும் ஜே.வி.பி.யின் வாக்குகளும் சேர்ந்தால் ஆட்சியைப் பிடித்து விடமுடியும்' என நம்பிக்கையும்தெரிவித்துள்ளாராம்.

அதெல்லாம் சரிதான், இவர் தெரிவித்துள்ள இன்னொரு விடயம்தான் இங்கு முக்கியத்துவம் பெறுவதாக உள்ளது.

அதாவது 'சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு ஆள்வலு உள்ளது. ஆனால் ஆளுமை வலு இல்லை .... அமைப்பு ரீதியாக ஒன்றைக் கட்டமைத்து வழிநடத்தும் திறன் ஜே.வி.பி.யிடம் தான் உள்ளது. ஆகவே தான் அவர்களுடைய கூட்டு அவசியமாக உள்ளது' என்று அவர் கூறியுள்ளதைப் பார்த்தால். சந்திரிகாவும், ஏனைய சிரேஷ்ட சி.ல.சு.கட்சி தலைவர்களும் ஏன் தானுமே ஆளுமைத்திறன் அற்றவர்கள் என்பதை பகிரங்கமாகவே ஒப்புக்கொண்டுள்ளார் என்றே கூறத்தோன்றுகின்றது.

ஜே.வி.பி.யுடனான உடன்பாடு சி.ல.சு.கட்சியைப் புனரமைப் பதற்கான நடவடிக்கையாகத்தான் அநுரா கருதுகிறார்போலும். அப்படியானால் பொ.ஐ.முன்னணியினதும் அதிலுள்ள ஏனைய இடதுசாரிப் பாரம்பரியக்கட்சிகளினதும் எதிர்காலம் குறித்து என்ன சொல்லப்போகிறார். அநுரா....?

அதை விமல் வீரவன்சவோ, டில்வின் சில்வாவோ அல்லது லண்டனில் இருக்கும் ஜே.வி.பி.யின் தலைமறைவுத் தலைவரான சோமவன்ச அமரசிங்கவோ தான் தீர்மானிக்க வேண்டும் என்று சொன்னாலும் சொல்லக்கூடும்.

கூட்டுக்குள் இணையுமுன்னரே தங்களுக்கு 16 பாராளுமன்ற இடம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என நிபந்தனை விதிக்கும் ஜே.வி.பி, கூட்டணி அமைத்து தேர்தலில் வென்றால் 10 அமைச்சர் பதவியைக் கூடக்கேட்கலாம்.

அநுரா, அதனை வழங்கினால் நல்லது தான் என சந்திரிகாவுக்கும் ஆலோசனை கூறலாம்.

ஆக ஜே.வி.பி.யின் நுழைவு பொ.ஐ.முன்னணியின் உடைவுக்கு வழிவகுக்கும் என்பது உறுதியானது.

ஜே.வி.பிக்கான 'இட ஒதுக்கீடு' இறுதியில் ஒட்டகத்துக்கு இடம் கொடுத்த கதையாக மாறிவிடக்கூடும் என்ற அச்சம் சந்திரிகாவுக்கு.

ஜே.வி.பி., சி.ல.சு.கட்சி கூட்டு ஆட்சியானது இந்தியாவின் அரசியல் அபிலாசைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தால் அமெரிக்காவின் 'இலங்கையூடான' அபிலாசைகள் பாதிக்கப்படும் என்பது ஆஷ்லி வில்ஸின் அச்சம்.

இவற்றிற்கு மத்தியில் தனது எதிர்கால அரசியலுக்கு தங்களை நம்பி நிற்கும் அநுராவின் தன்னம்பிக்கையின்மையை பயன்படுத்தி கலங்கிய குட்டையில் மீன்பிடிக்கமுனையும் ஜே.வி.பி.

இதனிடையே தனது சனாதிபதிக் கதிரைக்கனவில் மிதக்கும் அநுராவின் கோமாளித்தனம்.....

பாவம் சிறிலங்கா....!

**செங்குட்டுவன்**

# யாழ்ப்பாணத்து இளைஞர்களின் கழவாளம் யார் கையில்?

சிறி. இந்திரகுமார்

**தமிழ்மக்களின்** கலாச்சார தலைப்பட்டினமான யாழ்ப்பாணத்து இளைஞர்கள் இப்போது எங்கே போகிறார்கள்?

தறிகெட்டோடும் வயதைக் கொண்ட இந்த இளைஞர் பட்டாளத்தின் கடிவாளம் இப்போது யார்கையில் இருக்கிறது?

பெற்றோரும் சமூகமும் இந்த இளைஞர்களின் கதையில் கையறு நிலையிலேயே உள்ளார்கள்.

நாட்டின் நாளையத் தலைவர்கள் எனவும் நாளைய செல்வங்கள் எனவும் சொல்லவேண்டியவர்கள் அதோகதியாகி விட்டார்களா?

உண்மையில் சொல்லப் போனால் இப்போது யாழ்ப்பாணத்து இளைஞர்கள் யாழ்ப்பாணத்துக்கே உரியஇளைஞர்களாய் இல்லை.

இதன் விளைவே இப்போது யாழ்ப்பாணத்திலிருந்து ஒலிக்கும் அதிக குரல்கள் இளைஞர்களைப் பற்றி முழக்கமெழுகின்றன.

யாழ்ப்பாணத்து பெற்றோர்கள் எல்லாம் தமது பிள்ளைகளைப்பற்றி அதிகம் கவலைப்படத் தொடங்கி விட்டார்கள்.

யாழ்ப்பாணத்து சமூகமே இப்போது இளைஞர்களைப்பற்றி அதிகம் பேசவும் விவாதிக்கவும் தொடங்கிவிட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகள் 'இளம் சமுதாயம் தறிகெட்டு அலைகிறதா...?' என தலைப்பிடும் அளவிற்கு நிலைமை மோசமாகிவிட்டது.

இந்த மோசமான விளைவு எப்போது விதைக்கப்பட்டது எனப் பார்த்தால் நிச்சயமாக அது 1995 இன் பின்னான காலப்பகுதியாகவே இருக்கும்.

அதாவது சூரியக் கதிர் இராணுவ நடவடிக்கையின் மூலம் யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டதன் பின்பு இந்த நிலை திட்டமிட்ட வகையில் தோற்றுவிக்கப்பட்டது.

அதாவது புலிகளின் கைகளிலிருந்த யாழ்ப்பாணத்தின் கட்டுப்பாடு இராணுவத்தின் கைகளுக்கு மாறியதன் பின்பே இந்த நிலை தோற்றுவிக்கப்பட்டது.

இதனை அரசு -புலிகளிற்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டதன் விளைவாக யாழ்ப்பாணத்திற்கான பாதைதிறக்கப்பட்டு புலிகளின் முதலாவது அரசியற்குழு யாழ்ப்பாணத்திற்குள் பிரவேசித்த அன்றே இதனைப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

வன்னியிலிருந்து சென்ற ஊடகவியலாளன் என்ற வகையில் அன்று யாழ்ப்பாணத்தில் நான் சந்தித்த அதிகமான பெற்றோர்களும், பல்கலைக்கழக மாணவர்களும் மதத்தலைவர்களும், பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் கேட்டதெல்லாம் புலிகள் முதலில் சமுதாயச் சீர்கேடுகளை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதாகவே இருந்தது.

இதனை நான் ஒரு பல்கலைக்கழக மாணவியிடம் யாழ்ப்பாணத்து இளைஞர்களின் நிலை எப்படியிருக்கிறது எனக் கேட்டபோது;

"இப்போது யாழ்ப்பாணத்தில் உள்ள இளைஞர்களின் மண்டைக்குள் எல்லாம் நச்சு விதைகள் விதைக்கப்பட்டுள்ளன. அவை முளைவிட்டு கிளைபரப்ப முதல் அவற்றை கிள்ளி எறிந்து விட வேண்டும் எனத் தெரிவித்தார்."

யாழ்ப்பாணத்தைக்கைப்பற்ற அரசினால் எவ்வளவு முன்னாயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டனவோ அதே அளவு முன்னாயத்தங்கள் யாழ்ப்பாணத்து இளைஞர்களின் சமூக நடத்தையினை சீரழிக்கவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்பதையே அது காட்டியது.

இந்த விவகாரம் ஒரு நிகழ்ச்சித் திட்டத்திற்கு அமையவே மேற்கொள்ளப் பட்டுள்ளது போலத் தெரிகிறது.

யாழ்ப்பாணத்து ஒட்டு மொத்தமான தமிழ் மக்களின் மீது ஒரு ஆயுதம் தாங்கிய கொடூரப்போரைத் திணித்து விட்ட அதேவேளை யாழ்ப்பாணத்து இளைஞர்கள் மீது ஒரு நுண்ணிய கலாச்சாரப் போரும் திணிக்கப் பட்டுள்ளது.



**"இப்போது யாழ்ப்பாணத்தில் உள்ள இளைஞர்களின் மண்டைக்குள் எல்லாம் நச்சு விதைகள் விதைக்கப்பட்டுள்ளன. அவை முளைவிட்டு கிளைபரப்ப முதல் அவற்றை கிள்ளி எறிந்து விடவேண்டும் எனத் தெரிவித்தார்."**

அன்று விதைக்கப்பட்ட இந்த நச்சு விதைகளின் அறுவடைதான் இப்போது யாழ்ப்பாணத்தில் நடக்கும் சமூகச் சீரழிவுகளாகும்.

இந்த மோசமான பாதகத்தின் பின்னணியில் அரசும் அரசின் இராணுவ இயந்திரமுமே உள்ளது.



இப்போது யாழ்ப்பாணத்தில் உள்ள அறிவுசார்ந்த சமூகத்தின் முன் உள்ள பாரிய பிரச்சினை எதுவென்றால் அது யாழ்ப்பாணத்தை பழைய யாழ்ப்பாணமாகவே கட்டியெழுப்பவேண்டிய தேவையேயாகும்.

இது நடைமுறையில் ஒன்றும் சாத்தியமற்றுப் போகக்கூடிய காரியம் அன்று.

ஒட்டுமொத்த யாழ்ப்பாணத்து சமூக விழிப்புணர்ச்சி மூலம் இதனை யாழ்ப்பாணத்தில் சாதித்துக் காட்ட முடியும்.

இதுவொரு முடியாத காரியம் என முடிவெடுத்துக் கொண்டால் இது ஒரு முடியாத காரியமாகவே போகும். மாறாக முடியும் என நினைத்தால் இது முடியும்.

ஏனென்றால் யாழ்ப்பாணத்து மக்கள் பாரிய கல்வி பாரம்பரியத்தையும் தெளிவான பகுத்தறிவையும் கொண்ட கல்வி சார்பின் புலத்தைக் கொண்ட ஒரு சமூகம்.

ஆகவே சமூக மட்டத்தில் கொண்டு வரப்படும் சமூகவிழிப்பு வேகமாக முழு சமூகத்திற்கும் பற்றிக் கொள்ளும்.

எனவே யாழ்ப்பாணத்தில் இந்தக் கொடிய புற்றுநோயை வேரறுக்கத் தேவைப்படுவதெல்லாம் யாழ்ப்பாணத்து மக்களின் உழைப்பும் விழிப்புமேயாகும்.

அத்தோடு இந்த சமுதாய சீரழிவிற்கு பின்புலமாக இருக்கின்ற சக்திகள் வெளிச்சத்திற்கு கொண்டுவரப்பட வேண்டிய காலமும் இதுவேயாகும்.

இந்தச் சமூகச் சீரழிவுகள் அதிகம் கொழும்பிலிருந்தே யாழ்ப்பாணத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

இந்த இறக்குமதிகள் யாழ்ப்பாணத்தின் சூழலிற்கு ஒத்துக்கொள்ளாததால் அது ஒவ்வாமை நோயாக தன் பிரதிபலிப்புக்களை வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டது.

இந்த ஒவ்வாமை இப்போ இனங் காணப்பட்டது ஆறுதலடையக்கூடிய விடயம் தான். ஏனெனில் இவ்விவகாரம் குறிப்பிட்ட இலக்கையடைய முதலே இனங்கண்டு கொள்ளப்பட்டுள்ளது.

இதன் மூலம் யாழ்ப்பாணத்து சமூகம் பாதுகாத்துக்கொள்ளக்கூடிய சாத்தியக் கூறுகள் அதிகமாகவே உள்ளது.

இது ஒரு தொற்று நோயாக மாறாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணத்து இளைஞர்களின் மனநிலையில் இப்போது கல்விக்காக செலவிடப்படும் நேரத்தைவிட அதிகம் அரட்டைக்காகவும் அசிங்கத்திற்காகவும் செலவிடப்படும் நேரமே அதிகமாகி விட்டது.

அவர்கள் ஆக்கத்திற்காகச் செலவிடப்படும் பணத்தின் பெறுமதியை விட மதுபாணத்திற்கும் புகைபிடிப்பதற்கும் செலவிடப்படும் தொகையே அதிகமாக இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் கலாச்சார பாரம்பரியங்கள் எல்லாம் இப்போது ஈராக்கின் அருங்காட்சியங்களிலிருந்து களவாடப்படும் பண்டைய மொசப்பத்தேமிய நாகரீகங்களிற்கே உரித்தான கலைப்பொக்கிசங்கள் போலாகிவிடக் கூடாது.

**யாழ்ப்பாணத்தில் கலாச்சார பாரம்பரியங்கள் எல்லாம் இப்போது ஈராக்கின் அருங்காட்சியங்களிலிருந்து களவாடப்படும் பண்டைய மொசப்பத்தேமிய நாகரீகங்களிற்கே உரித்தான கலைப்பொக்கிசங்கள் போலாகிவிடக் கூடாது.**

ஆக்கிரமிப்பு எண்ணம் கொண்ட இராணுவமும் அரசும் அதன் நீண்டகால இலாபங்களிற்காக கலாச்சார பாரம்பரியங்களை சிதைப்பதில் அசிங்கங்களை விதைப்பதிலுமே கவனம் செலுத்தும் என்பது ஒன்றும் புதியவிடயமல்ல.

இதேவேளை இளைஞர்களின் இத்தகைய நிலைக்கு ஊடகங்களின் பங்கும் அதிகமாகவே உள்ளது. அதிகம் தென்னிந்திய ஊடகங்கள் இந்த விடயத்துக்கு அதிகம் கவனத்தைச் செலுத்துகின்றன.

தென்னிந்திய சினிமாக்களில் ஒரு காலத்தில் கதைக்கும் இசைக்கும் என தரமான கலைப்படைப்பொன்றிற்கும் முக்கியத்துவம் கொடுத்த காலம் போய் இப்போது பிரமாண்டமான தொழில் நுட்பத்திற்கும் போலிக்கும் முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கிவிட்டன.

அதிலும் பார்ப்பனியப் பத்திரிகைகள் தழிழையும் தழிழரையும் வீழ்த்த வேண்டும் என்பது போலவே கருத்துக்களை விதைக்க முயல்கின்றன.

இதனை இங்கு வெளிவரும் சில தமிழ் ஊடகங்கள் அப்படியே மீள் பிரசுரம் செய்வதும்அந்தசாயலைப் பின்பற்றி ஆக்கங்களை வெளியிடுவதிலும் கவனத்தை செலுத்துகின்றன

இதன் விளைவுகளே யாழ்ப்பாணத்து இளைஞர்கள் உருவாக்கிய தீனா குழுவும், ரெட்குழுவுமாகும்.

இவையெல்லாம் ஒன்று சேர்ந்து யாழ்ப்பாணத்தை இந்த நவநாகரீக உலகிலிருந்து கற்கால உலகிற்கு கொண்டுபோக முயலுகின்றன.

இப்போது யாழ்ப்பாணம் விழிப்பிற்கும் சிலிப்பிற்கும் உள்ளாகி தன்னை பாதுகாத்துக் கொள்ளவேண்டும். இதன் மூலமே சமுதாய புரள்விலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும்.

சமுதாய சீரழிவு நோயானது யாழ்ப்பாணத்து இளைஞர்களை ஒரு இயல்பிழப்பு நோயாக மாற்றிவிட்டது. இளைஞர்கள் இயல்பு இழந்து போய் நிற்கிறார்கள்.


ஆகவே யாழ்ப்பாணத்தை யாழ்ப்பாணமாகவும் இளைஞர்களை இளைஞர்களாகவும் கொண்டுவர இப்போது யாழ்ப்பாணத்து இளைஞர்களின் கடிவாளத்தை சமுதாயம் இறுகப்பற்றிக்கொள்ளவேண்டும்.



# உலக அரங்கில் இடம் தேடும் ஜப்பான்

**கலாநிதி க.சோமாஸ்கந்தன்**

**உலக** அரங்கில் பல்வேறு ஏற்றத்தாழ்வுகளைச் சந்தித்தவொரு நாடாக ஜப்பான் விளங்குகின்றது. 1905 இல் ருஷ்ய இராணுவத்தைஅந்த வருடம் முடிவுற்ற ரஷ்ய-ஜப்பான் போரில் தோற்கடித்த ஜப்பான் மிக விரைவில் உலகின் ஐம்பெரும் வல்லரசுகளில் ஒன்றாகத் தரமுயர்ந்தது. 1914இல் தொடங்கிய முதலாம் உலகப் போரில் அது பிரித்தானியா, அமெரிக்கா தலைமையிலான நேசநாடுகள் அணியில் இடம்பிடித்தது. இதன் காரணமாக பெரும் செல்வாக்கையும்,வர்த்தக -வாய்ப்புக்களையும், தூரகிழக்கு மற்றும்




தென்பசுபிக் பிராந்தியத்தில் பல குடியேற்ற நாடுகளையும் ஜப்பான் பெற்றுக்கொண்டது.

இத்தனை இருந்தும் அகலக்கால்பரப்பும் அரசியல் மற்றும் இராசதந்திரக்கொள்கை காரணமாக ஆரம்பவெற்றிகளையும் இறுதிக்கட்ட வீழ்ச்சியையும் ஜப்பான் சந்தித்தது. ஐ.நா.வின் முன்னோடி அமைப்பான சர்வதேச சங்கத்தின் அங்குரார்ப்பண நாடுகளில் ஒன்றான ஜப்பான் அந்த அமைப்பின் துரித வீழ்ச்சிக்கு வித்திட்ட அவப்பெயரைத் தட்டிக் கொண்டது. 1931 இல் சீனாவின் வடபால் அமைந்த மன்சூரியா மீது ஜப்பான் தாக்குதல் தொடுத்தது. இதைத்தடுக்கவோ பிற நிவாரணம் வழங்கவோ இயலாத காரணத்தால் தனது இயலாத்தன்மையை சர்வதேச சங்கம் வெளிப்படுத்தியது. அதனுடைய முடிவுக்கு இந்த இயலாமை வழி வகுத்தது.

சர்வதேச சங்கத்தின் இயலாமையை உணர்ந்த பிற உலக நாடுகள் ஜப்பானின் முன்னுதாரணத்தைப் பின்பற்றத்தொடங்கின. இதனால் இந்த அமைப்பு செயலற்று நிர்க்கதியானது. இரண்டாம் உலகப் போர் தோன்றுவதைத்தடுக்கும் வலுவை சர்வதேச சங்கம் இழந்தது. இதற்கிடையில் ஜப்பானின் பேராசை எல்லை கடந்து, கட்டுக் கடங்காத நிலைக்குச்சென்றது. ஜேர்மனியுடன் இணைந்து உலகைப் பங்கிடும் கனவுடன் அது செயற்பட்டது. 1939 இல் இரண்டாம் உலகப் போர்தொடங்கியபோது அமெரிக்கா, பிரான்சு, பிரித்தானியா ஆகிய நாடுகளின் நேசநாட்டு அணிக்கு எதிராக ஜேர்மனி, இத்தாலியுடன் ஜப்பான் இணைந்து செயற்பட்டது.

டிசம்பர் 07,1941, ஜப்பான் வரலாற்றில் திருப்புமுனைத் திகதியாகக் கருதப்படுகின்றது. அமெரிக்காவுக்குச் சொந்தமான ஹாவாய்த்தீவு இராணுவத்தளத்தின் மீது அன்று ஜப்பான் தாக்குதல் நடத்தியது. உலகநியமங்களை மீறி ஒரு பிரகடனப்படுத்தப்படாத தாக்குதலை நடத்தியதால் ஜப்பான் வரலாற்றின் கண்டனத்தைப் பெறுகின்றது. இத் தாக்குதல் காரணமாக இதுவரையில் ஜப்பான் மீது தாக்குதல் தொடுக்காத அமெரிக்கா, ஜப்பான் மீது போர்ப் பிரகடனம் செய்ததோடு முழு அளவு தாக்குதல்களை மேற்கொள்ளத் தொடங்கியது. ஈற்றில் மிகப் பெரியதொரு பேரழிவைச் சந்திக்கவேண்டிய நிலைக்கு ஜப்பான் தள்ளப்பட்டதற்கு அது ஹாவாய் தீவுமீது நடத்திய தாக்குதல் காரணமாகின்றது.

1945மே, 07 ஆம் நாள் தோல்வியை ஒத்துக்கொண்ட ஜேர்மனி நேசநாட்டுப்படைகளிடம் நிபந்தனையற்ற சரணாகதி அடைந்தது. ஜப்பான் தொடர்ந்து போராடியபடி மானம் பறிபோகாமல் சரண்புகும் வழிவகைகளைத் தேடியது. இதை நன்கு அறிந்திருந்தும் ஜப்பான்மீது அணு குண்டுத் தாக்குதல் நடத்துவதற்கு அமெரிக்க அதிபர் ட்ருமன் உத்தரவிட்டார். ஹிரோஷிமா நாகசாக்கி நகரங்கள்மீது போடப்பட்ட இரு அணுகுண்டுகள் காரணமாக இரு இலட்சம் வரையிலான ஜப்பானியப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். ஹாவாய் தீவு தாக்குதலில் 2,000 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டதற்குப் பதிலடியாக இரண்டு இலட்சம் ஜப்பானியர்கள் கொல்லப்பட்டதாக வரலாறு கூறுகின்றது.

செப்ரம்பர் 02,1945 இல், அணுகுண்டுத் தாக்குதலின் நேரடி விளைவாக ஜப்பான் நிபந்தனையற்ற சரணாகதி அடைந்தது. அதன் பின் ஜப்பானியத் தீவுகளின் ஆட்சி, அமெரிக்கத் தளபதி மெக் ஆர்தரின் கைகளுக்கு மாறியது. ஜப்பானில் அமெரிக்க ஆட்சி ஆறு வருடங்களுக்கு மேலாக நிலைத்தது. 1952 இல் ஜப்பானுக்கு விடுதலை வழங்கப்பட்டது. இதன் காரணமாக அது தனது இறைமையை மீளப் பெற்றுக் கொண்டது. 1956 இல் ஜப்பான் ஐ.நாவின் அங்கத்துவ நாடாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1964 இல் சர்வதேச ஒலிம்பிக் விளையாட்டுக் போட்டிகளை ஜப்பான் தனது நாட்டில் நடத்தியது. இது அதற்கு கிடைத்த மிகப்பெரியதொரு அங்கீகாரமாகக் கருதப்படுகின்றது.

தெற்கு ஆசியாவில், இரண்டாம் உலகப் போரின்போது ஜப்பான் நடத்திய தாக்குதல்கள் இலங்கையையும் பாதித்துள்ளது. மே 1942 இல் ஜப்பானியத் தரைப் படைகள் பர்மா ஊடாக இந்திய எல்லைவரை வந்துள்ளன. இந்தியாவைக் கைப்பற்றுவது அவர்களுடைய இலக்காக இருந்தது. இதைத் தொடர்ந்து ஜப்பானியக் கடற்படைகள் கொழும்பு நகர்மீது குண்டுத்தாக்குதல் நடத்தின. ஜப்பானிய விமானப்படைகள் கொழும்பு மற்றும் திரு கோணமலை மீது குண்டு வீச்சு நடத்தின. சீனன் குடா எண்ணைத் தாங்கிகளில் ஒன்று பாரியளவில் சேதமடைந்தது.

ஜப்பானுக்கு விடுதலை வழங்குவது சம்பந்தமாக அமெரிக்காவின் சான்பிறான்சிஸ்கோ நகரில் நடந்த சர்வதேச மாநாட்டில் இலங்கையின் பிரதிநிதியாக அப்போதைய நிதிஅமைச்சர் ஜே.ஆர். ஜெயவர்த்தனா சென்றார். 'பகைவனுக்கு அருளல்' என்ற பொருள்பட அவர் மிகவும் உருக்கமானதொரு உரையை இந்த மாநாட்டில் நிகழ்த்தினார். இதன் காரணமாக காக்கை இருக்கப் பனம்பழம் வீழ்ந்தது போல் ஜப்பானுக்கு விடுதலை வழங்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஜெவர்த்தனா தங்களுக்கு விடுதலை பெற்றுக் கொடுத்ததாக ஜப்பானிய மக்கள் இன்றுவரை நம்புகின்றனர். சிறிலங்காவுக்கு மிகக் கூடுதலான உதவிகளை வழங்கும் நாடாக ஜப்பான் விளங்குவதற்கு இது காரணமாக அமைகின்றது. ஜப்பான் தலைநகரில் ஜெயவர்த்தனாவின் சிலை வைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டது. ஏனோ அது நிறைவேறவில்லை.

அமெரிக்க ஆட்சியாளர்கள் ஜப்பானுக்குள் பாராளுமன்ற ஆட்சிமுறையையும் கட்சி அரசியலையும் புகுத்தினர். நவம்பர் 1946 இல் அமெரிக்கர்கள் உருவாக்கிய 99 சரத்துக்கள் கொண்ட அரசியல் சாசனம் ஜப்பானுக்கு வழங்கப்பட்டது. இச்சாசனம் ஜப்பானின் அடிப்படைச் சட்டமாக இன்றும் நிலவுகின்றது. 'அமைதிச்சாசனம்' என்ற பெயர் அதற்கு கொடுக்கப்படுவதற்கு சரத்து 9 காரணமாக அமைகின்றது. போருக்குச் செல்லக் கூடாது, அதற்கான ஆயத்தங்களைச் செய்யக்கூடாது, அமைதி வழியிலான வெளியுறவுக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று சரத்து 9 வலியுறுத்துகின்றது. ஜப்பான் நாட்டின் போர் குணத்திற்கு இடப்பட்ட கைவிலங்காக இச்சரத்து கருதப்படுகின்றது.



1952 இல் அமெரிக்க ஜப்பானிய அமைதி உடன்படிக்கை நிறைவேற்றப்பட்ட பின்பு ஜப்பானுக்கு விடுதலை வழங்கப் பட்டது. ஆனால் அதற்கு முன்பாகவே செப்ரம்பர் 1951 இல் ஜப்பானின்பாதுகாப்பை ஒரு வலுவான உடன்படிக்கை மூலம் அமெரிக்கா உறுதிப்படுத்தியது. ஜப்பானின் பாதுகாப்புத் தேவைகளைத் தன்னால் உறுதிப்படுத்த முடியும் என்ற உத்தரவாதத்தை அமெரிக்கா இதன்மூலம் ஜப்பானுக்கு வழங்கியது. ஆனால் காலப்போக்கில் இதில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. ஆசிய-பசுபிக் பாதுகாப்பில் ஜப்பான் தனது பங்களிப்பைச் செய்யவேண்டும் என்று அமெரிக்கா எதிர்பார்க்கத் தொடங்கியது. இதற்கு 1990-1991 இல் நடைபெற்ற முதலாம் வளைகுடாப் போர் உடனடிக் காரணியாக இடம் பெறுகின்றது. ஈராக்கிற்கு எதிரான அப்போதைய போரில் திருப்திகரமான பங்களிப்பை ஜப்பான் நாட்டால் செய்ய இயலாமல் போய்விட்டது.

அமெரிக்க டாலர் 13 பில்லியன் பெறுமதியான காசோலையை, போர்ச் செலவின் ஒரு பகுதியை ஈடுசெய்வதற்கு ஜப்பான் அமெரிக்காவுக்கு வழங்கியது. 'காசோலை இராசதந்திரம்' என்று வர்ணிக்கப்படும் இச்செயல் நகைப்புக்கு இடமளித்தது. ஆயுதம் தரியாத, போரில் ஈடுபடும் நோக்கம் அற்ற ஒரு சிறு அணியை ஈராக்கிற்கு அனுப்ப அப்போதைய ஜப்பானிய பிரதமர் தொஷிக்கிகைபூ முயற்சி செய்தார். ஆனால் அதற்கான தீர்மானம் ஜப்பானியப் பாராளுமன்றத்தால் நிறைவேறாமல் தடுக்கப்பட்டது. 1950, 1960 காலப் பகுதிகளில் மேற்குநாடுகளுடன் தனது இராசதந்திர உறவுகளை ஜப்பான் புதுப்பித்துக்கொண்டது. அதிபர் நிக்சனின் சீனாப் பயணத்தைப் பின்பற்றி சீனாவுடனான உறவுகளையும் அது சரி செய்து கொண்டது. பிறநாடுகளுடன் சம நிலையில் நோக்கப்பட வேண்டுமாயின் ஆயுதபலம் அவசியம் என்பதை ஜப்பான் உணரத் தலைப்பட்டது. ஆயுதம் என்பது வலுவின் சின்னம் என்பது அரசியலின் அடிப்படைச் சித்தாந்தம்.

ஏப்ரல் 27, 1999 இல் 'டயற்' என்று ஜப்பானிய மொழியில் அழைக்கப்படும் பாராளுமன்றம் ஜப்பான்-அமெரிக்கா பாதுகாப்பு வழிமுறைகள் சம்பந்தமான மூன்று சட்டங்களை நிறைவேற்றியது. இவை 'இராணுவ நிலையை உயர்த்துவதற்கும் தனது கேந்திர நலனை விரிவாக்குவதற்கும்' அத்தியாவசியம் என்று ஜப்பான் திட்டமிடல் அதிகாரிகள் குறிப்புணர்த்துகின்றனர். மூன்று சட்டங்களும் கூட்டாக ஜப்பானின் வெளியுறவுக் கொள்கையின் வளர்ச்சிப் போக்கை எடுத்துக் காட்டுகின்றன. அமெரிக்காவுடன் இணைந்து ஜப்பான் தனது இராணுவ மற்றும் அரசியல் வலுவை வெளிக்காட்ட விரும்புகின்றது. ஜப்பானின் தேசிய நலனுக்கு இது அதியுச்ச முக்கியத்துவம் வாய்ந்தது என்பதில் சிறிதளவேணும் சந்தேகமில்லை.


ஜப்பான்-அமெரிக்கா கூட்டு இராசதந்திரம் ஆசிய- பசுபிக் பிராந்தியத்தில் மையம் கொண்டுள்ளது. ஆனால் அது அந்தளவோடு நிற்கப் போவதில்லை. அது உலகப் பரப்பளவைத் தனது செயற்பாட்டுப் பிராந்தியமாகக் கொண்டுள்ளது. நேற்றோ அமைப்பு ஐரோப்பாவை மையப்படுத்துவது போல ஜப்பான்-அமெரிக்கா கூட்டுறவு ஆசியா-பசுபிக் பிராந்தியத்தில் மையம் கொண்டிருக்கும் பாரிய வித்தியாசத்தை அவதானிக்க வேண்டும். ஜப்பான்-அமெரிக்க கூட்டுறவு உலகை வலம்வரும். ஜப்பானிய இராசதந்திரத்தின் கவனம் ஆசியாக் கண்டத்தின்மீது படிந்துள்ளது. படிப்படியாக அது விரிவடையும். இந்த நடவடிக்கை அமைதிச் சாசனத்தின் சரத்து 9 ற்கு முரணானது என்றாலும் அது வெளிப்படையாகத் தெரியவில்லை. சாசனம் அப்படியே இருக்க முரணான போக்கு ஆரம்பித்து விட்டது எனலாம்.

ஜப்பானைத் தனது பங்காளியாக அமெரிக்கா நோக்குகின்றது. உலக ஆதிக்கத்திற்கு ஜப்பான் போன்ற நாட்டின் துணை தனக்குத் தேவை என்று அமெரிக்கா உணருகின்றது. தான் வழங்கிய அரசியல் சாசனத்தின் மூலம் இராணுவ வளர்ச்சிக்கு தடை விதித்த அதே அமெரிக்கா இன்று ஜப்பானின் இராணுவவளர்ச்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் வழங்குகின்றது. இதன் காரணமாக ஆசியாவின் இராணுவ பலம் மிக்க நாடுகளில் ஒன்றாக ஜப்பான் வளர்ச்சி கண்டுள்ளது. இராணுவச் செலவைப் பொறுத்தளவில் ஜப்பான் உலகின் நான்காவது பெரும் செலவாளியாக இடம்பெறுகின்றது. ஜப்பான் இராணுவம் அதியுயர் தொழில்நுட்ப வசதிகளைக் பெற்றுள்ளது. இராணுவம் சம்பந்தமான ஆராய்ச்சி களுக்கு மிகப் பெரியளவு நிதியை ஜப்பானிய அரசு ஒவ்வொரு வருடமும் ஒதுக்கீடு செய்கின்றது.

அமைதிச் சாசனத்தை கிடப்பில் போடாமல் அதற்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்கும் அரசு தனது ஆயுதப் படைகளை தற்பாதுகாப்புப் படைகள் என்று அழைக்கின்றது. ஜப்பான் இராணுவம் 'எஸ்.டி.எவ்' என்று அழைக்கப் படுகின்றது. அதாவது அது 'செல்ப் டிபென்ஸ் போர்ஸ்' என்று அர்த்தம் 150,000 முன்னணித் துருப்புக்கள், 480 போர் விமானங்கள், 140 போர்க் கப்பல்கள் ஜப்பானின் தற்பாதுகாப்பு இராணுவத்திடம் உண்டு. சீனா, வடகோரியா ஆகியவற்றின் இராணுவங்களுடன் ஒப்பிடும் போது இவை எண்ணிக்கையில் குறைவுதான். ஆனால் தயார் நிலை, அதியுச்ச தொழில்நுட்ப உபகரணங்கள், போர்திறன் என்ப வற்றை நோக்கும் போது ஜப்பானைக் குறைத்து மதிப்பிட இயலாது.

ஜப்பானின் இராணுவ மறுமலர்ச்சிக்கு உடனடிக் காரணங்கள் உண்டு. 1998 ஆகஸ்து மாதத்தில் வடகோரியாவின் பரீட்சார்த்த ஏவுகணை ஜப்பானியத் தீவுகளுக்கு மேலாற்சென்று பசு பிக் மாகடலில் வீழ்ந்தது.

(15ம் பக்கம் பார்க்க...)



தொடர்கதை

அத்தியாயம்-6

# இடம் பெயர்ந்தவன்

'இன்று எப்படி... சோட்லியின் உடம்பு பரவாயில்லையா?' என திருமதி. மக்கின்ரயர் கேட்டாள். திருமதி. சோட்லி அதைப்பற்றி நினைத்துக் கொண்டிருந்த போதுதான் இக்கேள்வி கேட்கப்பட்டது. கடந்த இரண்டு நாட்களாக நோயினால் தாக்கப் பட்டு சோட்லி படுத்தபடுக்கையாகக் கிடந்தான். இதனால் இப்போது திருகௌசக்கே தனது வேலைகளுடன் பாற்பண்ணை வேலைகளையும் செய்யவேண்டியிருந்தது. 'அவருக்கு எதுவுமில்லை மேலதிக அலைச்சலால் துன்பப் படுவதாக டொக்டர் கூறினார்' என்றாள் திருமதி. சோட்லி.

'பக்கத்தில் வேறு வேலை ஒன்றும் இருப்பதால் தான் அவருக்கு மேலதிக அலைச்சல் ஏற்பட்டிருக்க வேண்டும்' பால்பாத்திரத்தின் அடிப்பாகத்தை சோதனையிடும் போது எப்படி கண்களை கிட்டத்தட்ட மூடிய நிலையில் அதனைப் பார்ப்பாளோ, அதேபோல் திருமதி. சோட்லியை திருமதி. மக்கின்ரயர் பார்த்தாள். திருமதி. சோட்லி ஒரு வார்த்தையும் கூறவில்லை. ஆனால் அவளுக்கு ஏதாவது ஒரு கெடுதிவந்துவிடுமோ என்ற சந்தேகம், இடிமுழக்கத்தை ஏற்படுத்தும் ஒரு கறுத்த முகில் வருவது போல் உண்டாகியது. சோட்லி இரண்டாவது வேலையொன்றும் செய்து வந்தான் இந்தச் சுதந்திர நாட்டில் திருமதி. மக்கின்ரயர் அவ்விசயத்தில் எவ்வகையிலும் தலையிட முடியாது. திருசோட்லி விஸ்கிவடித்து வந்தான் இது திருமதி. மக்கின்ரயருக்கு சொந்தமான இடமாக இருந்தும் கூட, பயிர் செய்யப் படாமல் எவருக்கும் பயன்படாத ஒரு சிறிய அமைதியான இடத்தில் அது நடந்தது. இதை எந்த வித பயமும் இன்றி திரு. சோட்லி செய்து வந்தான். அவன் காலையில் நான்கு மணிக்கு எழுந்து பால்கறக்கும் வேலைகளை மத்தியானத்துக்குள் முடித்துவிட்டு, தனக்கு ஓய்வு பெறுவதற்காக ஒதுக்கப்பட்ட நேரத்தில் தனது வடிசாலையில் இருப்பான். அப்படி வேலை செய்ய எல்லா மனிதர்களாலும் முடியாது. அவனது வடிசாலைபற்றி நீகிரோக்களுக்குத் தெரியும். அவர்களது பற்றி அவனுக்கும் தெரியும். அதனால் ஒருபோதும் அவர்களிடையே கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டதில்லை. எல்லாவற்றையும் துருவித் துருவிப் பார்க்கும் புரிந்துணர்வற்ற வெளிநாட்டவர்களும் இப்போது இங்குள்ளனர். எப்போதும் சண்டைகள் பிடித்துக் கொண்டு அதேசமயம் ஒரு சீர்திருத்தமற்ற சமயத்தை கைக்கொண்டிருக்கும் ஒரு நாட்டிலிருந்து வந்திருக்கும் இவர்களை எப்போதும் கண்காணித்துக் கொண்டிருக்க வேண்டியுள்ளது. அவர்களுக் கெதிராக ஏதாவது சட்டங்கள் கொண்டு வரப்படவேண்டும். இவர்கள் ஏன் சண்டைகளாலும் வதைபாடுகளாலும் அங்கு இறந்து கொண்டிருப்பவர்களின் இடங்களை நிரப்பியபடி அங்கேயே ஏன் இருக்கக் கூடாது

எல்லாவற்றுக்கும் மேலாக என ஆரம்பித்து, தனது காசு



சேர்ந்தவுடன் பழைய கார் ஒன்றை வாங்கப் போவதாகவும் தாங்கள் உடனே இங்கிருந்து போய் விடுவார்கள் எனவும் கௌசக்கின் மகள் கூறியதாக திருமதி. சோட்லி சடுதியாகக் கூறினாள்.

'அவர்கள் காசு சேமிக்கும் அளவுக்கு என்னால் அவர்களுக்குப் பணம் கொடுக்க முடியாது' என திருமதி. மக்கின்ரயர் சொன்னாள். 'அவர்கள் போவதைப் பற்றியும் நான் கவலைப்படவில்லை. திரு. சோட்லி வேலை செய்ய சக்தியற்றுப்போகும் பட்சத்தில் பண்ணை வேலைகளுக்கும் கௌசக்கை உபயோகிக்க வேண்டிவரும். அப்போது அவனுக்கு அதிகபணம் கொடுப்பதைத் தவிர வேறுவழியில்லை 'அவன்புகைப் பிடிப்பதும் இல்லை' இதை அவள் ஐந்தாவது முறையாக அந்த வாரத்தில் கூறியிருந்தாள்.

'சரியான கிறிஸ்தவனாக நடந்து கொள்வதற்கோ மாடுகளை இலகுவாகக் கையாளுவதற்கோ, கடுமையாக உழைப்பதற்கோ சான்சியைப் போன்ற ஒருவனை காண முடியாது'. என திருமதி. சோட்லி கைகளைக் கட்டியபடி தனது பார்வையைத் தூரத்தே ஊடுருவிப் பார்த்தபடி கூறினாள். புல் வெட்டியினதும் உழவியந்திரத்தினதும் சத்தம்அதிகரித்தது. கௌசக் புல் தரைகளின் மற்றப் பக்கமாகச் சுற்றி வருவது தெரிந்தது அப்படிக்கூறமுடியாது என வாய்க்குள் முணுமுணுத்தாள் "வடிசாலையை பொலிஸ்காரன் பார்த்திருப்பானோ'' என எண்ணினாள். அப்படியிருந்தாள் அது என்ன என்று அவனுக்குப் புரிந்திருக்கும். இவர்களில் உள்ள கஸ்ரம் என்னவென்றால், இவர்களுக்கு என்னவெல்லாம் தெரியுமென அறியமுடியாமல் உள்ளது. கௌசக் சிரிக்கும் போது அதில் திகிலும் தீவினையும் நிரம்பிய பிசாசின் பரிசோதனைச் சாலையைப் போல் ஐரோப்பா, வாய்பிழந்து நிற்பது போன்ற கற்பனை அவளுக்கு உண்டாவது வழக்கம்.

ரக்ரர், கட்டர், வாகன் மூன்றும்

**தமிழில்**
**சு.மகேந்திரன்**

இணைந்த தொகுதிஉருளும் ஓசையுடன் இடிப்பது போன்ற சத்தத்துடன் சென்று கொண்டிருந்தது. 'இந்தவேலையை மனிதர்களும் கோவேறுகழுதைகளும் செய்தால் எத்தனை நாட்களாகும். இந்த வேகத்தில் போனால் எல்லாவற்றையும் இரண்டு, மூன்று நாட்களில் வெட்டி முடித்துவிடலாம் என்றாள் திருமதி. மக்கின்ரயர்.

'இருக்கலாம் ஏதாவது மிகப் பெரிய விபத்து ஏற்படாவிட்டால்' என திருமதி. சோட்லி முணுமுணுத்தாள். அவள் "ரக்ரர் எப்படி கோவேறுகழுதைகளை பயனற்றவையாகச் செய்துவிட்டது" என யோசித்தாள். 'இக்காலத்தில் கோவேறுகழுதைகளை விற்க முடியாது. ஆகவே இங்கிருந்து போகப்போகின்றவர்கள் நீகிரோக்கள் தான்' (தொடரும்...... )

# தாலாட்டுப்பாடல்கள்

வம்பு வரத்தல்ல
வரத்துமாடு ஈன்றதல்ல
பட்டியிலே நின்ற
பருங்கொம்பன் ஈன்ற கன்று

இங்கு பாடப்படும் தாலாட்டுப் பாடலில் சொல்லமைதியை விட கருத்தமைதி சிறப்பாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

பறவைகள், மிருகங்கள் முதலிய கருப்பொருட்களின் செயல்களில் இருந்து கொள்ளும் பொருளை இறைச்சிப்பொருள் என்பர்.

இதில் இடம்பெறும் "வம்பு வரத்தல்ல" "வரத்துமாடு ஈன்றதல்ல" என்ற சொற்றொடர்களின் மூலம் பிறந்த குழந்தை முறை தவறிப் பிறக்கவில்லை என்பதை எடுத்துக் கூறுவதாகவும் உள்ளது.

இதே போன்று பேரப் பிள்ளையைத் தாலாட்டும் ஒரு பேரனை "மாற்றுயர்ந்த பொன்னே" என விழித்துப் பாடுகின்றாள். மாற்றுயர்ந்த பொன் என்றால் எவ்வித கலப்பும் இல்லாத சுத்தமான தங்கத்தைக் குறிக்கும்.

மாற்றுயர்ந்த பொன்னே இந்த
மண்டலத்து அதிபதியே
பூத்து புது மலரே என்
பொக்கிஷமே கண்வளராய்
கொட்டி வைத்த முத்தே
குவித்த நவரத்தினமே
கட்டிப் பசும் பொன்னே
கண்மணியே நித்திரை செய்

இப்பாடலில் மேலும் "நாடாளும் மன்னனே'' என்றும் வாழ்த்துவது போல் "மண்டலத்து அதிபதியே'' என்றும் புகழ்ந்து பெருமை பேசுவதையும் காணலாம்.

ஒரு வயதுக்கும் மூன்று வயதுக்குமிடைப்பட்ட குழந்தைகளை கால்களுக்கிடையில் வைத்து ஊஞ்சல் போல் ஆட்டிக் கொண்டே "சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு" என்ற பாடலைப் பாடுவார்கள். இப்பாடலைக் கேட்டபடியே குழந்தைகள் நித்திரையாகிவிடும்.

சாய்தாடம்மா சாய்ந்தாடு-என்
தாமரைப்பூவே சாய்ந்தாடு
குத்துவிளக்கே சாய்ந்தாடு-என்
கோவில் புறாவே சாய்ந்தாடு
பச்சைக்கிளியே சாய்ந்தாடு-என்
பவளக் கொடியே சாய்ந்தாடு
சோலைக் குயிலே சாய்ந்தாடு-என்
தோகை மயிலே சாய்ந்தாடு-என்
கண்ணே மணியே சாய்ந்தாடு


கற்பகத் தருவே சாய்ந்தாடு
கண்டே தேனே சாய்ந்தாடு
கனியே பாலே சாய்ந்தாடு

இப்பாடலைப் பாடிக் காட்டியவர் யாழ்ப்பாணம் ந. சிவசண்முக மூர்த்தி

தாயின் தாலாட்டுப் பாடலினூடாக, குழந்தைகள் சில அங்க அசைவுகளை வெளிப்படுத்திக் கொண்டிருப்பதால் குழந்தைகளின் தசைகள் வலுப்பெறவும், குருதிக் சுற்றோட்டம் சீராகஓடவும் உதவுகின்றன.

இத்தகைய பெருமையும் சிறப்பும் வாய்ந்த நாட்டார் வழக்கில் இருந்து வந்த தாலாட்டுப் பாடல்களில் பல இன்று வடபுல பிரதேசத்தில் வழக்கிழந்து கவனிப் பாரற்றுப் போய்விட்டன. இன்று, இத்தகைய தாலாட்டுப் பாடல்கள் வடக்கில் வழக்கிழந்து போனமைக்குப் பின்வருவனவற்றைக் காரணங்களாகக் குறிப்பிடலாம்.

01) வடக்கில் கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக நடந்து கொண்டிருக்கும் போர்ச்சூழலில், ஒரு தாயினால் மனஅமைதியுடன் இருந்து இத்தகைய பாடல்களைப் பாட முடியாது போனமை.



02)பொருளாதாரச் சூழல், வேலை வாய்ப்புக்கள், இடப்பெயர்வுகள், என்பவற்றின் காரணமாக சந்ததி இடைவெளி ஏற்படுத்தப்பட்டுள்ளதால் வாய்மொழியாகப் பாடப்பட்டு வரும் தாலாட்டுப்பாடல் களை இன்றைய இளம் தாய்மார்கள் அறிந்து இரசித்துப்பாடும் வாய்ப்புக்கள் அருகிப் போனமை.

03) நாட்டாரிலக்கிய வழக்கில் இருந்து வரும் தாலாட்டுப் பாடல்களை பாடும் மரபு, அடித்தள மக்களின் இலக்கியம் என்று கருதியமையால் அதனைப் பின்பற்றுவது தமக்கு கௌரவக் குறைவு என்று பல பெண்கள் தாலாட்டுப் பாடல்களைப் பாடும் மரபைப் பின்பற்றாது விட்டமை.

04)அன்றைய சமுதாயத்தில் கூட்டுக் குடும்ப வாழ்வு முறையில் ஒரே வீட்டில் இரண்டுக்கு மேற்பட்ட தலைமுறையினர் வாழ்ந்து வந்தமையினால் பாரம்பரிய நாட்டாரிலக்கியங்களை தலைமுறை வழியாகப் பின்பற்றும் போக்கு காணப்பட்டது. ஆனால் இன்று குடும்பங்களிடையே அன்னியோன்னிய உறவு பேணும் கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறை பேணப்படாத நிலையில், நாட்டாரிலக்கிய பண்புகளும், இரசனையும் இன்றைய பெண்களில் வழக்கிழந்து போய்விட்டமை.

5) அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாகவும், அன்னிய நாட்டுப் பண்பாட்டுக் கலப்பின் காரணமாகவும் நகரகிராமப்புற வேறுபாடுகள் குறைந்து வந்தமையினாலும் இதனால் கிராமப்புறத்திற்கே உரித்தான நாட்டாரிலக்கியப் பண்புகள் குறைந்துவிட்டமை.


06) நவீன இலத்திரனியல், தொழில் நுட்ப சாதனங்களின் பாவனைகள், கிராமத்து மக்களின் இயற்கை நெறிசார்ந்த சூழலைக் குழப்பியமை. வானொலிப்பாடல்களையும், பதிவு செய்யப்பட்ட ஒலி நாடாக்களையும் இயங்கச் செய்வதால், கிராமியச் சூழலில் எழுந்த நாட்டார் இலக்கியங்கள் வழக்கிழந்து போய் விட்டமை.

இந்த நிலையில், இன்றைய தாய்மார்கள், தமக்கு எதிரே குழந்தைகள் தொடர்ச்சியாக அழுது அடம்பிடிக்கும் பொழுது, அர்த்தமும் பொருட் செறிவும், ஓசை நயமும் மிகுந்ததாலாட்டுப்பாடல்களைப் பாடுவதில்லை.அழுது கொண்டிருக்கின்ற குழந்தைகளின் வாயில் இரப்பர் சூப்பிகளை வைத்துத் தூங்கச் செய்தல், அல்லது "உர்... உர்...ர்" என்றும், "த்சோ.. த்சோ..." என்றும் பல்வேறு ஒலிகளை எழுப்பி பயமுறுத்திக் குழந்தைகளைத் தூங்கச் செய்தலையே இன்று பெருமளவு குடும்பங்களில் காண முடிகின்றது.

**வல்வை ந.அனந்தராஜ்**

தன்னம்பிக்கையே, வெற்றியின் அடிப்படை இரகசியம். - ரால்ஃப் வால்டோ எமெர்ஸன்

## சிறுகதை



# பயணம்

**சி.மாதுளா**

**காதல்** இந்தச் சொல்லின் மந்திரத்தில் தானே உலக இயக்கமே நடைபெறுகிறது. பெண்ணில் காதல்: மண்ணில் காதல்: அறிவியலில் காதல்: பணியில் காதல் இப்படியே அடுக்கிக் கொண்டே போகலாம்.

இக்கதையின் கதாநாயகனைச் சுற்றியும் காதல் கதை பின்னப்படுகிறது. காதலின் பிரிவு: அவனை இன்னொன்றைக் காதலிக்கச் செய்கிறது. பட்ட மரங்களைத் துளிர்க்கப் பண்ணுவதை விட துளிர்த்த மரங்களை செழிக்கப்பண்ண அவன் எண்ணுகிறான்: விரும்புகிறான். இந்தக் காதல் அவனது வாழ்வில் கூடாது விடினும் சாவிலாவது கூடவேண்டும், என்ற நம்பிக்கையுடன் எதிர்பார்ப்புடன், இறைஞ்சலுடன் எங்களால் முடிந்ததை செய்வோம் என்ற எண்ணத்துடன் வாசியுங்கள்.

அவனது புதிய பெயர் பழனிச்சாமி பெயருக்கேற்ற வயதல்ல இளமையை எட்டிப்பிடித்த களைப்பின் வயது, அவன் உயரத்தைப் போல் வாழ்வின் இலட்சியமும் உயரமானது. கண்ணின் ஒளியைப் போல் பாதை தெளிவானது.

அவனது பழைய பெயரிலேயே பழசுகளின்ர பெயர் வாசம் வீசுகிறது. என தன் அப்பா அம்மாவுடன் கோழிச்சண்டை பிடித்துக் கொள்ளும் அவன் இன்று பழனிச்சாமி என்ற பெயரை விருப்புடனேயே வைத்திருக்கிறான் பாடசாலை நண்பி கார்த்திகா பம்பலாக 'பாணிச்சாமி' என்று அழைப்பதன் மறுவடிவமாகவே பழனிச்சாமி எனும் பெயரைத் தேர்ந்தெடுத்தது. அவனுக்கு மட்டுமே தெரிந்த இரகசியங்களில் ஒன்று.கார்த்திகா, கார்த்திகை மாதம் காணாமல் போனதில் அவன் நெய்யாய் உருகுவதற்குப் பதிலாய்: தன்னை புதிதாக நெய்து கொண்டான் அவன் மனப்பரப்பு செம்மணி வெட்டையைப் போல் மயான அமைதியுடன் சமர சம் செய்யாது கடல் அலைபோல் எழுந்ததன் விளைவே இன்றைய பயணம்.

பலமாதங்களாய் தன்னை தயார் செய்து வரைபடத்தில் மட்டுமே கண்டறிந்த ஊருக்கு முதற்பயணம். வாழ்க்கை கூட ஒரு பயணம் தானே என்றால் இப் பயணத்தை அவன் வாழ்வின் பயணம் என்று கூடச் சொல்லலாம்.

“கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தைச் சென்றடையும் புகையிரதம் இன்னும் 15 நிமிடத்தில் வந்தடையும்” புகையிரத வருகைக்கான அறிவித்தலினை புலம்புவது போல் மூன்று மொழிகளிலும் புலம்பி விட்டு ஒலி பெருக்கி மௌனமாகிறது.

“அழகான பனைமரங்களை, பனைமரம் போன்ற மனிதர்களை கடல்வீசி எறியும் காற்றில் வாசமலர் பரப்பும் சுகந்தத்தை, குருதியில் குளித்த புழுதி மண்ணை பாடசாலை நாட்களை நினைவு கூரும் முகமாக இன்னும் பட்டுப் போகாமல் நிற்கும் முருகேசு வீட்டு விளாமரத்தை, காதல் தந்த கவிதையை எழுதிவிட்டு அழித்த மணற்பரப்பை மண்வீடு என்றாலும் கரைந்து போகாத வாழ்வைத் தந்த அப்பாவை, அம்மாவை, ஆசையண்ணா என நூறுதரம் விழிக்கும் ஆசைத்தங்கையைப் பிரிந்து நீண்ட தூரம் பயணிக்க இன்னும் 15 நிமிடங்கள் தான்.” துயரங்கள் வானவில்லைப் போல் அவன் மனவானில் இமைகள் கண்ணை அழுத்திய போது அவன் இமைகள் ஈரமாகின்றன.

தன்னை நிலைப்படுத்தியவன்: திருட்டு முழி முழிக்கும் ஆந்தைப் பார்வையை வெகு இயல்பாக மாற்றிவிட்டு, ஒரு அப்பாவி பிராணியின் பார்வையை நாலாபுறமும் வீசிவிட்டு தனிமையைப் போக்க மீண்டும் அன்றைய ஆங்கிலச் செய்தித்தாளில் மூழ்கிறான்: அதன் பக்கங்களைப் புரட்டிப் புரட்டிப் படித்தவன் இடையிடையே திரும்பும் போதெல்லாம், அந்த 18 வயது மதிக்கத்தக்க கறுப்பான, எடுப்பான பெண் தன்னைப் பார்த்து விட்டுத் தலையைத் திருப்பிக் கொள்வதை பல தடவைகள் கண்களுள் சிறைப் படுத்திக் கொண்டவன்: மீண்டும் ஒருதடவை அழகாகப் பார்க்கிறான்.

அவன் அருகில் நூலைப் போல் சேலையென இருப்பவள் அவளது தாய். கொழும்பு யாழ் ஸ்டைல் கலந்த உடை அலங்காரம். நெற்றியில் பொட்டில்லை, இரண்டு பெரிய சூட்கேஸ்கள், இவைகள் நீண்ட தூரப் பிரயாணிகள் என்பதைச் சொல்லி நிற்க, அவளின் மொழி கண்டறியும் ஆவல் அவனுள் குடிகொள்ளத்தொடங்கிற்று.

“சே.....ஏதாவது ஒரு காரணத்தைத் தேடி எப்படியாவது கதைக்கவேணும்... ரெயின் வர இன்னும் ஐந்து நிமிடம் தான் இருக்கு அதற்கிடையில் பழக்கத்தை ஏற்படுத்தி ஒரே பெட்டியில ஏறிட வேணும். அவனின் எண்ணத்துக்கு எடுத்த பெஸ்கிளாஸ் ரிக்கற்றும் சாதகமாய்ப் போயிற்று.

கூ....ஊ....ஊ ஒரு கிழயானையின் பிளிறல் ஒலியை அனுப்பியவாறே வெளிவரும் கரும் புகையை முந்திக் கொண்டு வேகமாய் வந்த புகையிரதம் தன்னை நிலை நிறுத்த மிகவும் கஸ்ரப்படுவதை, இரும்புகள் தேய்த்துக் கொள்ள எழும் ஒலியே உணர்த்துகிறது.எங்கயாவது தூரப் பயணம் போகவேண்டும் என்றால் பூவில் அல்லது மனிசற்ற முகத்தில் விழிக்கவேணும் என்பது ஊர் வழக்கு (சம்பிரதாயம்) கழிவுகளை அகற்றும் தும்புத்தடி விளக்கு மாற்றில் விழித்தாலே வாழ்நாளில் ஒரு நாளை வீட்டுக்குள் முடக்கியே இல்லாமல் செய்யும் எங்கள் வழக்கில் இந்தப் புகையிரதத்தின் அலறலினையும் முகத்தையும் பார்த்த பின்னும் நீண்ட பயணத்துக்கு உடன்படும் விந்தை, அவனுக்கு முன்னே.

“பந்தியில் நின்றாலும் முந்திநிற்க விரும்பும் சமுதாயத்தில் தான் நாம் எல்லோரும் பிறந்தோம் என்று நினைக்கத்தோன்றுமாப் போல் எல்லோரும் முண்டியடித்து ஏற விதிவிலக்காக நிற்காமல் ஸ்பெஸல் ரிக்கற் எடுத்த அவனும் செக்கண் கிளாஸ் பெட்டியில் முண்டியடித்து ஏறுகிறான் (காரணம் 18 வயதிடம் மொழியறிய என்பதை நீங்கள் ஊகித்திருப்பது சரிதான்)

புகையிரதம் அவனுக்கு புது அனுபவம். எப்போதோ ஒரு தடவை அரச அலுவலாய் அப்பாவுடன் பயணப்பட்டது. பாடசாலையில் சுக்குப்.....பக்கு.... என ரெயில் விட்டது. இதைத்தவிர புகையிரதப்பயண அனுபவமில்லை. இன்று நிஜப்புகையிரதம் கற்பனைப்புகையிரதத்துடன் எல்லாவற்றிலுமே முரண்படும் தோற்றம்.

“பிலீஸ்சீற்” உதடுகள் விரியாத ஒரு புன்னகைக்குரல் 18 வயதுடையதேதான். அவனும் இதையேதான் எதிர்பார்த்தான். “இந்தப் பொதுமொழி (ஆங்கிலம்) காரியத்தைக் கெடுத்துப் போட்டுது” மனதுக்குள் திட்டியவாறே எதிர் இருக்கையில் மௌனமாக பௌவியமாக அமர்கிறான்.

“என்னை ஒரு தமிழன் என்று காட்டாது அவள் எந்த மொழியாள் என்று கண்டுபிடிக்க வேண்டும். மொழி சரிவந்தாலும் மதம்....? யார் முதலில் கதைப்பது...?” “ஆய்ந்தாய்ந்து கொள்ளாததன் கேண்மை கடைமுறை தான்சாம் துயரம் தரும்” வள்ளுவனே நேரில் வந்து சொல்லுவது போல் ஓர் உள்ளுணர்வு. அவனது தற்துணிவை சோதனை செய்கிறது.

“டேய் இன்னும் இப்படி எத்தனையைச் சமாழிக்க வேண்டி வரும். எல்லாவற்றுக்கும் ஆயத்தமாகத்தானே புறப்பட்டாய். சின்ன விடயத்திலேயே தழும்பினால் எதைச்சாதிக்கப் போகின்றாய்? அவனுக்குள் எழுந்த கேள்வியே விடையையும் கொடுக்கிறது.

சிலமணிநேரத்துக்குள்ளேயே ஆய்ந்தாய்ந்து கொள்ளவேண்டிய நட்பு நிச்சயமாக சினிமா ஸ்ரையிலில் இல்லாமல் இயற்கையாக இருக்க வேண்டும்.

“ஆ யூ சிங்கலிஸ்” எந்த அலங்காரச் சொற்களும் இன்றி அவன் நேரடியாகவே கேட்டு விட்டான். “நோ....நோ....வீ ஆ ரமில்ஸ்” சட்டெனக் கிடைத்த தொலைபேசிப் பதில் புரிந்து ணர்வு ஒப்பந்தம் போல் அவனுள் அமைதியை ஏற்படுத்த அவனே தொடர்ந்தான்.

“உங்கட பெயரை அறியலாமா?

'என்பெயரா? பூமிகா.... அருகிலிருப்பது அம்மா' கேட்டதற்கும் கேட்கப்போவதற்கும் தெளிவான தமிழ் நடையுடன் பதில் வெளிவர புரிந்துணர்வுச்சிரிப்புடன் அவளது தாய் ஆமோதிக்கிறாள்.

“பாலைவனத்தில் நீரூற்றுக் கிடைச்சது மாதிரி எவ்வளவு மகிழ்ச்சியாய் இருக்குது. நான் உங்களைச் சிங்களப் பெண் என்று நினைச்சிட்டன்” ஓ... எவ்வளவு பொருத்தம், நீங்கள் தனியாப் பயணப் பட்டதைப்பார்க்க உங்களை சிங்கள ஆமியெண்டு நினைச்சிட்டன் ஆயிரம் வோள்ட் மின்சாரம் அவனுள் பாய்ந்து விட்டுச் செல்கிறது, இயற்கைக்கு மாறான தவறு நிகழ்ந்து விட்டதை உணர்கிறான்.



“உங்கட பெயர்?” கன்னம் வளியே தவழத் துடிக்கும் தலைமுடியை ஒதுக்கி விட்டவாறே அமைதியை அவளே குலைக்கிறாள்.

“பழனிச்சாமி”

“நீங்கள் கொழும்புக்கு...?”

“தங்கச்சி அக்கா எண்டு கூப்பிடாதீங்கோ பெயரைச் சொல்லிக் கூப்பிடுங்கோ” கார்த்திகா அவனுள் விழிக்க அவன் கண்களை மூடி மெல்லிதாய்ச் சிரிக்க பெருமூச்சொன்று வெளியேறுகிறது.

“முகத்தைத் தேடி, முகவரியைத் தேடி, தவறவிட்ட விடப்பட்ட அம்மாஅப்பாவைத்தேடி பூமிகா.... சின்னவயதிலேயே அம்மா அப்பாவைத் தவற விட்டிட்டன் பூமிகா” ஒரே மூச்சில் சொல்லி முடித்தவன் வழிந்தோடும் கண்ணீரைத் துடைத்தவாறே சாளரம் வழியே வெளியே எட்டிப்பார்க்கிறான்.

மேனியின் குளிரைப் பூசிய காற்று சாளரம் வழியே வழிந்தோடியது. மேகத்தில் வந்து மலை முகட்டை முட்டும் முகிற் கூட்டம் மலையின் வெப்பத்தில் உருகிச் செல்ல விருப்பமின்றி மெல்லக் கலைந்தோடுகின்றன.

“நட்பு என்பது திடீரெனத் தோன்றி படிப்படியாக மலருமா? அல்லது படிப்படியாத் தோன்றி மலருமா? என்ற தலைப்பிலான பட்டிமன்றத்தில் படிப்படியாகத் தோன்றி நட்பாக மலரும் என்பதற்காய் வாதாடிய நினைவுகள் கற்பாறையிலும் வேர்பரப்பி நிற்கும் மரங்களைப் போல் தன்னுள் வேர்பரப்பி நிற்பதை உணர்கிறான்.

“83 கலவரத்தில் என்ர உயிரை மட்டுமாவது காப்பாற்றும் கடைசி விருப்பில் தவறக்கூடாது என்பதற்காய் தவறவிடப்பட்டவன் பூமிகா”

“உங்களுக்கு அவையலை நினைவிருக்கா?

அவசரமாய் 'பாக்கினுள்' கையை நுழைத்தவன் புகைப்படம் ஒன்றை எடுத்து நீட்டுகிறான். ' இதுதான் அம்மா, அப்பா.... அம்மாதூக்கி வைச்சிருக்கிறது என்னைத்தான். கீழே நிற்பது அண்ணா. இன்னுமொரு தங்கச்சியும் இருக்காம் இந்தப் போட்டோ எடுக்கேக்கை அவள் பிறக்க வில்லையாம்” அவர்களின் முகத்தில் மெல்லியதோர் சிரிப்பு இழையோடியதை கண்களில் படம் பிடித்துக்கொண்ட அவனே தொடர்ந்தான்.

“எப்படியும் அம்மா அப்பாவைச்சந்திக்க வேணும் இல்லையெண்டா அவர்களைத் தேடித் தேடியே செத்துப் போகவேண்டும்..... அம்மா அப்பா இல்லாத வாழ்க்கையை இனி என்னால் நினைச்சுப் பார்க்கவே முடியாது. பட்டது போதும் பூமிகா” மறக்காது வேண்டியெடுத்த தண்ணீர்ப் போத்தலை எடுத்து இரண்டு மிடறு மண்டிவிட்டு அருகில் வைக்கிறான் தண்ணீர்ப் போத்தல் அவனையே பார்ப்பது போல் உள்ளுணர்வு அவனுள்

“கவலைப்படாதேங்கோ நாங்கள் கொழும்பில நிரந்தரமாய் இருக்கிறம். எங்களால் முடிந்ததைச் செய்வம். என்ரை அண்ணா கூட வெளிநாட்டுக்குப் போனதில அவற்ற றூம் கூட பிறியாய்த்தான் இருக்கு. நீங்கள் அதில இருந்து கூட உங்கட அம்மா அப்பாவைத் தேடலாம்.” பூமிகாவின் வார்த்தைகளை “நாங்கள் ஏன் உங்கள் அம்மா அப்பாவாக இருக்கக்கூடாது” என்ற ஆறுதல் வார்த்தையினூடாக அவளது தாய் முடித்துவைக்க கடைசி முடிச்சையும் அவிட்ட திருப்தி அவன் முகத்தில் தெறித்தது.

“சிறுதவறும் உன்னையும் உன்சார்ந்தவர்களையும் அழித்து விடும். அவன் படித்த வேதமந்திரத்தை மீண்டும் ஒருதரம் உச்சரித்துக் கொள்கிறான் கூட்ட வேண்டியதைக் கூட்டி கழிக்க வேண்டியதைக் கழித்து கொடுத்து விட்ட தொலைபேசி எண்ணை சரிபார்த்துக் கொள்கிறான். கோட்டைப் புகையிரத நிலையத்தில் இரங்கியதும் முகம் தெரியாத 'ஒருவர்' அவனை அடையாளப்படுத்திக் கொள்வதற்காக குடித்துவிட்டு மிகுதித் தண்ணீரில் முகம் கழுவி வெறும் போத்தலினை எறியவென அவன் வாங்கி வைத்திருந்த தண்ணீர்ப் போத்தல் அநாதையாய்க் கிடக்க....

“எனக்காய்க் காத்திருக்கும் வீடு என்னொருவருக்காய்க் காத்திருக்கட்டும்” நிலையாய் நின்றும் ஓடும் மரங்களைப் போல் அவனுள் நினைவுகள் ஓட புகையிரதம் கோட்டை நிலையத்தை வந்தடைகிறது. இறங்குவதிலும் ஓர் அவசரம்..... எல்லாமே அவனுக்காகக் காத்திருப்பது போல் ஒரு வேகம்.

பூமிகாவினதும் அவள் தாயினதும் 'சூட்கேஸ்'களை வேண்டி தலையில் வைத்தவன் புதிய உறவுகளுடன் புதிய மண்ணில் நடக்கத்தொடங்கினான்.

☞ பிறரை அழித்ததனால், தன்னாலே தானும் அழிந்தான் - அலெக்சாண்டர் போப்.

உணர்ச்சிக்கவிஞர்: காசிஆனந்தனின்...



# கவிஞனும் அறிவும்

நான் ஒரு பெரிய உண்மையைக் கண்டு பிடித்திருக்கிறேன்.

உலகம் பொய் சொல்கிறது என்பதே அந்த உண்மையாகும்.

''அறிவால் மனிதன் உயர்ந்தவன்'' என்று இவர்கள் எவ்வளவு பகிரங்கமாகப் பொய் பேசுகிறார்கள்.

"விலங்கைவிட மனிதன் உயர்ந்தவனாக இருக்கிறான். ஏனென்றால் அவன் பகுத்தறிவு பெற்றிருக்கிறான்" என்று மேடைகளில் பேசப்படுகிறது.

மனிதர்கள் என்ற பொய்யர்களுக்காக ஒரு சில உண்மைகளைவெளியிட நான் முன் வருகிறேன்.

விலங்கைவிட நீங்கள் எந்தவகையில் உயர்ந்திருக்கிறீர்கள் என்பது எனக்குப் புரியவில்லை.

ஒரு சில நடத்தைகளில் நீங்கள் மிருகங்களைப் போலவே இருக்கிறீர்கள். நரியைப் போல ஏமாற்றுவதற்கும் நாகத்தைப் போல நஞ்சு வைப்பதற்கும் உங்களுக்குத் தெரிந்திருக்கிறது.

இன்னும் ஆழமான ஓர் உண்மையை இப்பொழுது நான் சொல்லப் போகிறேன். உங்களைத் தெருவுக்கு இழுக்க வேண்டும் என்பதே எனது மனமார்ந்த ஆசையாகும்!

பசுமாடு தண்ணீர் கலந்த பாலைக் கன்றுக்குக் கொடுத்ததில்லை. ஆனால் பாவிகளே! நீங்கள் பாலில் தண்ணீர் கலந்து பாதகம் செய்தீர்கள்.

பூனை இருக்கிறதே... அது தன்னுடைய சமுதாயத்தை முதலாளி வர்க்கம் தொழிலாளி வர்க்கம் என்று கூறு போட்டதில்லை. ஆனால் நீங்களோ வீதிக்கொரு மன்றம் வைத்து உங்களுக்குள்ளே மோதிக் கொண்டீர்கள்.

கழுதை சத்தம் போட நான் இரண்டு காதுகளாலும் கேட்டிருக்கிறேன். ஆனால் அது யாரையும் திட்டி சத்தம் போட்டதை இதுவரை நான் கேட்டதில்லை.

மனிதர்களே! மனிதர்களே! நாய் என்கிற மிருகத்தைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? உங்களைப்போல் கன்னம் வைத்துத் திருடும் தீய பழக்கம் அந்த மிருகத்திடமில்லை. பதிலாக நீங்கள் எங்கு திருடினாலும் உங்களைக் காட்டிக் கொடுக்கும் அளவுக்கு இன்று அந்த மிருகம் தன்னுடைய தகுதியை உயர்த்திக் கொண்டிருக்கிறது.

புலியைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? 'கொடிய விலங்கு' என்று அந்த மிருகத்த நீங்கள் அழைக்கலாமா? அறிவாளிகளே! உங்களைப் போல் அந்த மிருகம் தன்னுடைய சகோதரர்களின் மீது எந்தக் காலத்திலும் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில்லை. கழுகு என்பது பொல்லாத பறவையாக இருக்கலாம். ஆனால் அது அணுகுண்டுகளைத் தூக்கிக்கொண்டு பறந்ததை நீங்கள் எந்த வானத்திலாவது பார்த்திருக்கிறீர்களா?

மனிதர்களே! "விலங்குகளையும் பறவைகளையும் விட அறிவால் உயர்ந்து விட்டோம்" என்று இன்னொரு தடவை சொல்லாதீர்கள். நீங்கள் பொய் சொல்வதாக நான் தெய்வத்தின் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வேன்.

உங்கள் சார்பாக வாதாட வருகின்ற வழக்கறிஞன் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் என்னுடைய சாட்சிகளிடமிருந்தே நல்ல பதில்களை நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள்.

"மனிதர்கள் தெய்வத்துக்குத் கோவில் கட்டியிருக்கிறார்கள். அறிவுதான் அதற்குக் காரணம்" என்று உங்கள் வழக்கறிஞன் தெய்வத்தை வசப்படுத்த முற்படுவான். அப்பொழுது முயல் குட்டி ஒன்று தெய்வத்தைப் பார்த்து 'நாங்கள் தெய்வத்துக்குக் கோயில் கட்டியதில்லை என்பது உண்மைதான்... அதே நேரத்தில் நாங்கள் நாத்திகம் பேசியதும் இல்லை' என்று கொஞ்சங்கூட அச்சம் இல்லாமல் பதில் சொல்லப் போகிறது.

"அறிவு இருந்த காரணத்தினால்தான் 'மருந்து' என்ற அற்புதமான பொருளை மனிதன் கண்டு பிடித்தான்" என்று உங்கள் வழக்கறிஞன் மூலமாக நீங்கள் பேசுவீர்கள்.

அப்போது, 'ஐயா! மருந்து என்பது ஒரு பெரிய கண்டு பிடிப்பு என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் இதோ பாருங்கள் மருத்துவிச்சி இல்லாமலே நான் பதினாறு குட்டிகளைப் பெற்றிருக்கிறேன்" என்று காட்டுப் பன்றி சாட்சி சொல்வதையும் நீங்கள் காணப்போகிறீர்கள்.

மனிதர்களே! மனிதர்களே!

உண்மைக்கும் உங்களுக்கும் எந்தக் காலத்திலும் ஒத்துப் போனதில்லை என்பதை நான் அறிவேன். என்றாலும் உங்களைக் கெஞ்சுதலாக கேட்டுக் கொள்கிறேன்... 'பெரிய பொய்களை யாவது' இனிமேல் பேசாதிருப்பீர்களாக!

உங்களிடம் அறிவு இருக்கிறது என்று சொல்லுங்கள். அதை நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் "அறிவுதான் மனிதனை உயர்த்தியது" என்று மட்டும் வாதம் செய்யவராதீர்கள். ஏனென்றால் 'பொய்யை' எந்தக் காலத்திலுமே என்னுடைய உள்ளம் ஜீரணித்ததில்லை.

(14.02.2003 வெள்ளிநாதத்தில் வெளிவந்த "மரணித்தவர்களை அகௌரவப்படுத்துதல் என்ற கட்டுரையின் எதிரொலியாக...)

## சிறிலங்காவிலிருந்து ஒரு கவிதை



## அழு

இறுதியாக ,
உண்மை வெளியாகிவிட்டது
அல்லவா?
இந்தக் கடுந்துயரான உணர்வு
எங்களை விட்டு நீங்குமென
இந்த வலியுணர்வு
இல்லாமல் போகுமென
துன்பம் நிறைந்த மௌனத்தோடு
நாங்கள் காத்திருக்கிறோம்
போரின் பயங்கரங்களில்
இதுவும் ஒரு பகுதி தான்
இன்னும் அழமுடியாத அளவுக்கு
பயங்கரமானது
தூங்கப் போகுமுன்
நாங்கள் செய்கின்ற
எண்ணற்ற.... பயனற்ற
பிரார்த்தனைகளை எண்ணு
கையில்....

இது தான்.... இதுதான் ஆட்சி
முறையா?
இந்த முறையில் தான்
ஆட்சி செய்யப்பட வேண்டுமா?
எங்கள் கண்களுக்கு மூடல்களிட்டு
எங்கள் பிள்ளைகளை கருவி
களாக்கி...
ஆறுதலாக
ஒரு வார்த்தையும் கூறவில்லை
எந்தக் கலசத்திலும்
எங்கள் வீரர்களின்
அஸ்திகள் வரவில்லை.
துயர் கொண்ட தந்தையர் மீது
இரக்கமே காட்டவில்லை
நம்பிக்கையோடிருக்கும்
அன்னையர் மீது அக்கறை
யில்லை

கிளர்ச்சி ஏதும் வருமென
நீ பயந்தாயா?
உண்மைகள்
எங்கள் உளவுரனை சிதைத்திருக்குமா?
வேறு வழி ஏதும்
இருக்கவே இல்லையா?
உண்மையாகவே
நான் அறிய வேண்டும்

அதிகார பேராசையில்
"போர்!" என்று
ஆரவாரிக்கும்.....
வெறியோடு பிதற்றும்.....
எல்லோருக்குமே
உறுதியாகச் சொல்லுகிறோம்.
களத்தில் முன்செல்ல
நீங்களே தயாராகுங்கள்
விரைந்து மறந்து போகும்
நாட்டுக்கென...
அழ மறந்து போன
இனத்துக்கென...
சாவதற்காய்
எங்கள் புதல்வர்களை
இனியும் தரப்போவதில்லை.

ஆங்கிலத்தில்: றோஸ் ஆசீரப்பா,
தமிழில்: வின்சென்ற் புளோறன்ஸ்

# படித்ததில் பிடித்தது



## கல்லின் காயம்

சமாதியில் உன் நடுகல்லைப் பார்க்கிறேன்.
உன் பெயர். கீழே இரண்டு எண்கள்.
பிறந்த ஆண்டு; இறந்த ஆண்டு.
நடுவே ஒரு கோடு.
இது தானா உன் முகவரி? இவ்வளவுதானா
உன் சரித்திரம்? இவைதாமா உன்
சாதனைகள்?
உன் பெயர்- நீ சம்பாதித்ததா?
உன் பிறப்பும் இறப்பும் உன் சாதனைகளா?
இந்த ஆண்டுகள்-வெறும் உளிக்கீறல்கள்
அல்லவா?
உன் பிறந்த ஆண்டு புன்னகையால்
செதுக்கப்பட்டதா?
உன் இறந்த ஆண்டு கண்ணீரால்
வரையப்பட்டதா?
கல் வெட்டா இது? இல்லை: கல்லின் காயம்.

இடையில் இந்தக் கோடு என்ன
அர்த்தம் இதற்கு?
நீ வெறும் கோடுதானா?
வெற்றிடத்தை நீ நிரப்பவில்லையா?
அல்லது நீ நிரம்பவில்லையா?
இல்லை, இது கழித்தல் குறியா?
பிறப்பிலிருந்து இறப்பைக் கழித்தால்
வரும் விடைதானா நீ?
கழித்தலாக மட்டும்தான் இருந்தாயா?
கூட்டலாக, பெருக்கலாக, வகுத்தலாக
நீ இருந்ததில்லையா?
நீ எண்களால் மட்டும் ஆனவனா?
உனக்கென எழுத்துக்கள் இல்லையா?
நீ எழுதப்படவே இல்லையா?
இந்தக் கல் மட்டும்தான் உன்னை நினைக்கிறதா? எந்த
இதயத்திலாவது
உன்னை எழுதிக் கொண்டதில்லையா?
இந்த மண்ணில் மட்டும் தான் அடக்கமாகி
இருக்கிறாயா? எந்தப் புத்தகத்திலும்
நீ பொருளடக்கம் ஆனதில்லையா?
உன் மூச்சுகள் மரணத்தை நோக்கி
எடுத்துவைத்த அடிகள் மட்டும்தானா?
நீ பிறருக்குச் சுவாசமாக இருந்ததில்லையா?
மனிதன் ஆரம்பத்திலும் இல்லை முடிவிலும்
இல்லை. நடுவில் இருக்கிறான்.
நீ உன்னைப் பெற்றெடுக்கவே இல்லையா?
அல்லது கண்டுபிடிக்கவே முடியாதபடி
உன்னைத் தொலைத்து விட்டாயா?
மக்கள் தொகைக் கணக்கில் மட்டும்தான்
இருந்தாயா? வேற எந்தக் கணக்கிலும்
நீ தொகையாக இருந்ததில்லையா?
வரவாகக் கூட வேண்டாம் பற்றாகக் கூட
இருந்ததில்லையா?

கவிக்கோ.அப்துல் ரகுமான்

## நீ வருவாய் என...

பாதைகள் யாவுமே
முட்கள்
ஆனாலும்...... இனி
பூக்கள் பொழிந்திருக்கும் என
பூரிப்பாய் நடக்கிறோம்.
எங்குமே எரிமலைகள்
இருந்தாலும் போகிறோம்
நீ
எப்படியும் எமை
தொடுவாயென...
நம்பிக்கை முடிச்சுகள்
அவிழ்கின்றன
ஆனபோதும் ....
இப்போதும் நினைக்கிறோம்
நீ வருவாய் என...

—யோ.புரட்சி—

தற் செருக்கு, தன்னழிவுக்கு வழி காட்டும். - ஈஸாப்.



# இளையநாதம்

நானு என்றொரு நரி இருந்தது. அது ஒரு சிறிய காடு, அதுவும் மக்கள் நடமாட்டம் அதிக முள்ள கிராமத்துக்கு மிகஅரு காமையில் இருந்தது. அந்தக் குட்டிக்காடு. அங்கு கொடிய மிருகங்கள் இல்லை சிறிய சிறிய மிருகங்கள் தான் அதிகம். தந்திரம் மிகுந்த குள்ள நரி நானு "இன்று சாப்பிட என்ன வழி?" என்று தீவிர மாக யோசித்துக் கொண்டிருந்தது. அப்போது நரி முன் ஒரு எலி துள்ளிக்குதித்துச் சென்றது. பசி வயிற்றைக் கிள்ளியது. எலியை பிடிக்கலாமா என்று முதலில் யோசித்த நரி "சே..சே...அவ்வளவு கீழ்த்தரமாகச் செயற்பட்டால் நம்ம கௌரவம் என்ன ஆகிறது?" என்று தனக்குத் தானே கேட்டது. மீண்டும் தரையில் கால்களை நீட்டி யபடி படுத்து நான்கு திசைகளி லும் பார்வையைச் செலுத்தியது நானு நரி.

## கடவுள் வந்திருக்கேன்

பசி கண்களை மூடச் செய்தது. நானு நரி இலேசாக தூங்கி விட்டது. சிறிது நேரம் தூங்கி விட்டு கண்களைத் திறந்த போது பெரிய எருமை ஒன்று புல் தின்று கொண்டிருந்தது. அது பாடு பறவாயில்லை அதுக்குப் புல் கிடைத்தாலே போதும் எருமை புல் தின்னும் காட்சியைச் சோகமாகக் கவனித்தபடி மீண்டும் கண்களை மூடியது. சாப்பிட சிறிய மிருகங்கள் எதுவும் அகப்படவில்லையே! இன்று யார் முகத்தில் விழித்தேன் என்று யோசி த்தபடி மீண்டும் தூங்கியது நானு நரி. நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்த நானு நரி எதையோ கேட்டுக் கண் விழித்த போது சற்றுத் தொலைவில் ஒரு முயல் நிற்ப தைக்கண்டு திடுக்கிட்டது.

நரி அசையாமல் படுத்து இருந்தது "அந்த முயல் கிடைத் தால் இரண்டு நாளைக்குச் சாப் பாடே வேண்டாம்" நரியின் வாயில் எச்சில் ஊறியது. மீண்டும் தூங்கு வது போல் படுத்திருந்து முயலைக் கண் காணித்தது நானு நரி. எக்காரணத்தைக் கொண்டும் முயல் தப்பி விடக்கூடாது என்பதில் படு கவனமாக இருந்தது. முயல் செடி கொடிகளைத் தின்று மெதுவாக நகர்ந்து நரி அருகே சென்றது நரி ஓரக்கண்ணால் கவனித்துக் கொண்டே இருந்தது. மிக அருகா மையில் வந்த முயலை 'லபக்' என்று பாய்ந்து பிடித்தது. முயல் தப்பி ஓட முயன்றும் பயனில்லை. "அண்ணே நான் பாவம் அண்ணே என்னை விட்டுடுங்க" அப்பா, அம்மா காத்திருப்பாங்க என்று கெஞ்சிய முயலை ஆசையுடன் பார்த்தது நரி "விடவா சொல் கிறாய்...நான் சாப்பிட்டு ரெண்டு நாளாச்சு உன்னை விட்டால் நான் பசியால் செத்து விடுவேன் அத னால் விடவே மாட்டேன். என்று கூறிய போது நரியின் வாயி லிருந்து எச்சில் ஒழுகியது.

நரியிடம் இருந்து தப்பிக்க வேண்டும் என்றால் தந்திரமாகச் செயற்பட வேண்டும். எப்படியாவது நரியை ஏமாற்றி விட வேண்டும். என்று முடிவு செய்தது முயல். "அண்ணே கிராமத்து மக்கள் நரி களைக் கடவுளாக நினைத்து வணங்குகிறார்கள். நரிகளுக்குக் கோழிகளைப் பரிசளித்துச் சந்தோ சப்படுகிறார்களாம்!" நான் செத்துப் போனால் இந்த தகவல் எப்படி உங்கள் காதுக்கு வரும் என்று நான் கவலைப்பட்டேன். இனி என் கவலை தீர்ந்தது என்று முயல் சொன்ன போது நரி யோசித் தது(முயல் கூறுவது உண்மை என் றால் எவ்வளவு நன்றாக இருக்கும் "அது சரி அந்தக் கிராமம் எங்கிருக் கிறது? வா.. என்னுடன் புறப்படு " என்று ஆவலுடன் கூறியது நானு நரி. இருவரும் புறப்பட்டனர் "அண்ணே கிராமத்துக்குச் சென்ற தும் ஒவ்வொரு வீடாகச் சென்று வீட்டு வாசலில் படுக்க வேண்டும். பிறகு "கடவுள் வந்திருக்கேன்... காணிக்கை கொண்டுவா... கோழி களைக் கொண்டுவா.."என்று கூறி விட்டு கண்களை மூடிப் படுத்துக் கொள்ள வேண்டும் என்றது. முயல். கிராமத்துக்குள் நுழைந்து முதலில் கண்ட வீட்டுக்குச் சென்று வாசலில் படுத்து "கடவுள் வந்திருக்கிறேன்.. காணிக்கை கொண்டுவா...? என்று கூறிவிட்டுக் கண்களை மூடிப் படுத்துக் கொண்டது நானு நரி. இதைக் கவனித்த வீட்டுக்காரன் மெதுவாக நடந்து பெரிய தடி ஒன்றை எடுத்து வந்து ஓசை படாமல் நகர்ந்து நரி அருகே வந்தான். பிறகு ஓங்கி அடித்தான். அடிபட்ட நரி அதிர்ச்சி அடைந்து தரையில் விழுந்தது. உடல் முழுவதும் அடிவிழுந்தது. நரி உயிரிழந்து செயலற்றுத் தரை யில் விழுவதைக் கண்டு நிம்மதி யாகக் காட்டுக்குத் திரும்பியது முயல். நண்பர்களே நரிக்கதை நிறை யப்படித்ததுண்டு. இந்த நானுநரியின் கதையைப் படித் ததில் என்ன புரிகிறது? எப் படிப்பட்ட ஆபத்து வந்தாலும் சற்றும் கலங்கக்கூடாது. தைரி யத்துடன் மூளையை உப யோகியுங்கள். தப்பிக்க நிச் சயம் வழிகிடைக்கும.

அ.ராஜ்குமார்,

## வாரம் ஒரு குறள்




நம்மைத் தாங்கும் நிலத்தை நாம் தோண்டும் போதும அது அதுவாகவே இருக்கிறது. நம்மை வீழ்ந்து போகாமல் தாங்கிக் கொள்கிறது. எமக்குத் தேவையான உணவைத்தரு கிறது. எமக்குத்தேவையான நீரைத் தருகிறது. நாங்கள் என்ன செய்தாலும் அவற்றையெல்லாம் கருதாது எமக்கு நன்மையே செய்கின்ற நிலமகளைப் போல, எமக்குத் துன்பம் செய்பவர்களை நாம் பொறுத்துக்கொள்வது நல்ல செயலாகும். பொறுத்துக் கொள்வது மட்டுமல்லாது அவர்களைத் திருத்த முயற்சிப்பது இன்னும் மேலான செயலாகும். இந்தக் கருத்தை வலியுறுத்த வந்த வள்ளுவர்.

**"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை."**

என்று தனது குறளில் விளக்கியுள்ளார்

## பாட்டு

வள்ளம் ஒன்று கடலிலே....
கரையை வந்து அடைந்தது.
மீனவர்கள் படகிலே
மீன்பிடித்து வந்தனர்.



கொண்டு வந்த மீன்களை
விற்கக் கொண்டு சென்றனர்.
விற்றுப் பெற்ற பணத்தினை
வீடு கொண்டு சென்றனர்.

பணம் முடிந்த பின்பு தான்
கடற்கரைக்கு வந்தனர்.
மீண்டும் படகில் ஏறினர்
மீன் பிடிக்க சென்றனர்.

அன்று மட்டும் அதிஸ்டமாய்
பெரிய மீன்கள் மாட்டின.
அன்று தொடக்கம் மீன்களை
தொடர்ந்து பிடிக்க சென்றனர்.

பு. சஜீவன்,
C.C.T.M.S.
வவுனியா.

## குறுக்கெழுத்துப் போட்டி 17

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | | | | ■ |
| 07 | | 09 | ■ | 11 | |
| | | 15 | | | |
| | ■ | 21 | | | ■ |
| ■ | 26 | ■ | 28 | | |
| 31 | | | | | ■ |

**இடமிருந்து வலம்**

01. நகை.
07. ஓர்பறவை.
11. தந்தை.
15. மாலையில் மலரும் பூ
21. வாகனம் ஓட்டுபவன்.
28. கப்பலை நிறுத்தி வைக்க உதவுவது.
31. பறை.

**மேலிருந்து கீழ்**

01. உணவு.
02. இரவிற்கு எதிரானவை.
09. நடு இரவு தலைகீழாக உள்ளது.
26. இளைய சகோதரி இறுதி எழுத்தை இழந்துள்ளது

## இரண்டு நண்பர்கள்



சென்ற காலங்களில் செய்ததவறுகளை
சினத்துடன் மறக்கவில்லை விட்டுவிடுவோம்
சிந்தித்து நாம் இனிமேல் செய்திடுவோம் சமாதானம்
மிக்க சண்டை நாம் செய்தால்
மிச்சம் இரார் எம்மக்கள்
நட்ப்பென்னும் படகில் ஏறி
நாம் உலகைச் சுற்றிவந்து
நல்லுலகில் சமாதானம்
நாட்டிவைப்போம்.

கண்ணன்.ஜனாத்தனன்,
மு/யோ.ம.வி.மல்லாவி.

## சமாதானப் புத்தாண்டே!



மண்ணின் மைந்தர்களின்
மகத்தான சாதனையால்
தமிழ்த் தாயின் துயர்தீர்க்க
தரணியில் வந்துதிக்கும்
சமாதானப் புத்தாண்டே
உன்னை நாம் ஈழமதில் நின்று
இன்முகத்துடன் வரவேற்கின்றோம்.

இ. ராஜ்குமார்,

## கண்டுபிடியுங்கள்



இவ்விருபடங்களில் 5 வித்தியாசங்கள் உள்ளன. அற்றைக் கண்டு பிடியுங்கள்! முடியாவிட்டால் விடைகள் இதே பக்கத்தில் உள்ளன.

பூ. நிறஞ்சன்.

விடைகள்
01. முயலின் கால்.
02. கரடியின் மூக்கு.
03. மரத்தின் பூ
04. மாட்டின் கொம்பு.
05. மாட்டின் மடி.

## நகைச்சுவை

**மகன் :-**
**போங்கப்பா... உங்களால் தான் இண்டைக்கு பாத்து எழுதி வாத்திட்ட மாட்டிற்ரன்**

**தகப்பன் :-**
**என்னடா உளர்றா... நான் ஏன் உன்னைப் பாத்து எழுதச் சொல்றன்.**

**மகன் :-**
**பரீட்சைக்கு போற நேரம் நீங்கள் தானே ஜாக்கிரதையா பார்த்து எழுது எண்டு சொன்னீங்க!**

வா. பிருந்தன்

## குறுக்கெழுத்துப்போட்டி இல.15 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**
01. அபசகுனம்.
07. கதிரவன்.
14. விக்கினம்.
19. பாரதம்.
28. கள்வன்.

**மேலிருந்து கீழ்**
01. அகம் பாவம்.
02. பதிவிரதை.
16. கிரகம்.
18. வம்சம்.
21. தத்தை

**குறுக்கெழுத்துப்போட்டி இல.15 இன் பரிசுக்குரியவர்**

**கி.சரிதா,**
**கொ.அ.த.க பாடசாலை,**
**புதுக்குடியிருப்பு,**

**குறுக்கெழுத்துப்போட்டி இல.15இன் பாராட்டுக்குரியவர்கள்.**

ஸ.கமரிஸ்ரெலா,
தமிழகன் தையல் நிலையம்,
கிளிநொச்சி.

இ.ஜனத்,
தரம் -3
கிளி/இராமநாதபுரம் மேற்கு
அ.த.க. பாடசாலை.
வட்டக்கச்சி.

இளையவர்களே! மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி இல.17
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

**என் தகுதியின் நிறைவே, என் தகுதியின் குறைகளை நான் உணர்வது தான். - புனிதர் அகஸ்டின்**

# அறிவியல்

— சசி

## கண்ணடிப்பது தவறா?



சில மனிதர்கள் கண்ணடிப்பது தவறு என்கிறார்கள். அவர்கள் கண்ணடித்து கன்ளம் பழுத்த பாவிகளாகத் தான் இருக்க வேண்டும். கண்ணடித்தலில் இரு வகை ஒற்றைக் கண் அடித்தல், இரட்டைக் கண்ணடித்தல் - கண்ண டித்தல் என ஒரு கிண்ட லுக்காக விழித்தேன். கண் இமைத்தல் என்பதே பொருத்தமாகும்.

கண் எமது உடல் உறுப்புக்களில் மிகவும் முக்கியமானது. இமை அதன் விசுவாசமான காவலன். இதனால் ஒரு பொருளை மிக முக்கியமாகப் பாதுகாக்க வேண்டுமென்றால் 'கண்ணை இமை காப்பது போல்' எனக்கூறுவர். கண்ணை அதன் இமை ஓய்வின்றி பாதுகாக்கிறது.

இமைகள் இமைக்காவிடில் கண்ணில் தூசிகள் பட்டு சில வேளைகளில் கண்பார்வை இழந்து போகும். பார்வை இழந்தவனுக்கு இருட்டும் நிலவும் ஒன்று தான் இமைகள் இமைப்பதால் கண்ணினுள் புகும் தூசிகள் அகற்றப்படுகின்றன. இமைகளின் அசைவினால் வரும் சிறு காற்றினால் தூசிகள் அகற்றப்படுகின்றன. இவ்வாறிருந்தும் சிலவேளைகளில் கண்ணினுள் உட்புகும் தூசிகளை கண்ணீர் சுரந்து அகற்றிவிடுகிறது.

கண் இமைப்பது தவறு என்று கூறுபவர்களே ஒற்றைக் கண்ணிமைத்து கன்னத்தைப் பழுதாக்காதீர்கள். வெட்கப் படாமல் இருகண்ணிமைகளையும் இமை யுங்கள். இமைப்பதாக யாரும் சொன்னால் இதைப்படிக்கக் கொடுத்து உங்களைப் பாதுகாத்துவிடுங்கள்.

## சூரியகாந்தியார் பரிதியைக் காதலிக்கிறாரா?




சூரியகாந்திப்பூ எப்பொழுதும் சூரியனையே பார்த்தவண்ணமிருக்கும். ஏக்கத்துடன் பார்க்கிறாரா அல்லது காதலினால் பார்க்கிறாரா. இதே போல் மனிதர்களும் உளர்.

சூரியகாந்திப்பூ காலையில் சூரியன் உதிக்கும் போது கிழக்கு நோக்கியும் பின்னர் சூரிய நிலைக்கேற்றவாறு அசைந்து மாலையில் மறையும் போது மேற்கு நோக்கியும் காணப்படும். இதனால் புலவர்கள் சூரியனின் காதலி எனவும் வர்ணித்துள்ளனர்.

இது சாய்வதற்குக் காரணம் பூக்காம்பில் ஏற்படும் சில வேதிச் செயல்களின் மாற்றங்களேயாகும். பூக்காம்பில் சூரிய ஒளிபடும் பகுதியைவிட எதிர்த்திசையிலுள்ள கலங்களில் ஆக்சின்( Auocin) எனும் பொருள் அதிகளவு சுரக்கும். இது வளர்ச்சியை அதிகளவு தூண்டுவதால் காம்பு நீள்ச்சியடைகிறது. சூரிய ஒளிபடும் பகுதியில் குறைவாகச் சுரப்பதால் வளர்ச்சியை குறைவாகத்தூண்டுவதால் குறைவான நீள்ச்சி ஏற்படும்.இதனால் பூக்காம்பு ஒளிபடும் பக்கமாக வளைகிறது. பூவும் சூரியனை நோக்குகிறது. தொடர்ந்து இச் செயற்பாடு நடைபெறுவதால் சூரிய காந்தி பரிதியையே பார்த்தவண்ணமுள்ளது. ஆனால் நீங்கள் உங்களுடைய காதலை ஒரு தலைக்காதலாக்கிவிடாதீர்கள்.

## மைதானத்தில் மயக்கமா?



**மயக்கமடைவதைப்** பெரும்பாலானவர்கள் எதிர்பாராத இடையூறாகக் கருதுகிறார்கள் ஆபத்து என்றும் எண்ணுகிறார்கள் இது எதிர்பாராத இடையூறுமன்று. ஆபத்துமன்று.

பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டியின் போது வெயிலில் கூடிய நேரம் நிற்பதால் சில பிள்ளைகள் மயக்கமடைகிறார்கள். ஏனெனில் அவர்களின் மூளைக்குப் போதியளவு இரத்தம் பாயவில்லை என்பதால் தான்.

வெயிலில் நிற்கும் போது இதயம் மூளைக்குப் போதியளவு குருதியை வழங்கத் தவறி விடுகிறது. இதனால் மயக்கம் ஏற்படுகிறது மயக்கமடைபவரை உடனடியாக நிழலான இடத்திலே அமைதியாகப் படுக்க வைத்தால் இரத்தம் மீண்டும் மூளைக்குப் பாய்ந்து சமநிலையடையும் அப்போது மயக்கம் தெளிந்து உற்சாகமடைவர்.

பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளுக்குத்திறமையிருந்தும் ''பிள்ளை வெயிலில் நின்றால் மயங்குவான் என்ற பயத்தை விட்டு விளையாடவிடுங்கள் இது வொன்றும் நோயன்று.

## எதை மாற்றுவது?



**மூடநம்பிக்கைகள்** இருந்த காலச் . சூழலில் "பேய் பிடித்து விட்டது" என்ற கதை பரவியிருந்தது. அதே நேரம் "கூடு விட்டுக் கூடு பாயும் ஆவி" என்ற கருத்தும் நிலவியிருந்தது. இதனைக் கண்ணதாசன் கூடத் தன் பாடல் வரிகளில் புகுத்தி உள்ளாரே. அதாவது, மனிதனின் சுவாசப்பை (நுரையீரல்) கொண்டிருக்கும் காற்றைத்தான் ஆவி என்பர். ஆவி பிரிந்ததும் உயிர் பிரிந்ததென்றும் மூச்சுப்போனால் ஆளும் மேலே போய்விட்டாரென்றும் கருதுவதுண்டு.

சகல மனித உடலுக்குள்ளும் இந் நிலை இருப்பதால் இறந்த மனிதனின் ஆவி பிறந்த குழந்தைகளில் இருக்கும் என்பது மூடக்கொள்கையே. பிறக்கின்ற குழந்தைகளில் இரத்த உறவுச்சாயல் தென்படுவதால் இம்மூடநம்பிக்கை பரவக் காரணமாயிற்று. இதனை மையமாகக் கொண்டே சிலர் பிரிவுத்துயரால் வாடி நிற்கும் போதும் இழப்புக்களைத் தாங்க முடியாத அதிர்ச்சியின் போதும் "பேய் பிடித்து விட்டது" என்ற கருத்தைப் பரப்பியிருந்தனர். இது பின் நாளில் "பேய் பிடிக்கும்" என்று சிறுவர்களைப் பயமுறுத்தப் பயன்பட்டது.

அந்நியச் சூழலில் அல்லது தனிமையான நிலையில் சிலருக்கு அதிர்ச்சி ஏற்பட்டிருக்கலாம். இவ்வதிர்ச்சியின் பாதிப்பைக் காட்டியும் இப்படிக் கூறுவர். அதிர்ச்சிக்கான சூழ்நிலையைத் தோற்றுவிக்காது உறவுகளின் அன்பான அணைப்பின் மூலம் பாதிப்புற்றவர்களை இவ்வதிர்ச்சியிலிருந்து விடுவித்துக் கொள்ளலாம். பிறிதொரு வழியாக "பேய்கலைக்கும்" சுத்துமாத்து ஒன்று கிராமப்புறங்களில் நிகழ்கிறது. நகர்ப்புறங்களில் இல்லாமைக்குக் காரணம் மூடநம்பிக்கைளைப் பின்பற்றுவோர் குறைவு என்பதாகும். கள்ளச்சாமிமாருக்கு வருமானம் கொடுக்கும் இந்தச் சுத்துமாத்தில் பெரிதாக ஒன்றுமில்லை. மேலே நான் குறிப்பிட்டது போன்று குறித்த நபருக்கான அதிர்ச்சியின் தன்மையறிந்து, காளி உட்புகுந்தாள், வைரவர் வாட்டியது, பேய், முனி பிடித்தது, பில்லி, சூனியம் எனப் பல காரணங்காட்டி அதற்குப் பிரதியீடாக ஏதாவது ஒன்றைச் செய்யச் சொல்லிச் செய்து காட்டுவது கள்ளச் சாமிமாரின் தந்திரமாகும். இவர்களின் மந்திரம் என்ன? பாதிப்புற்றவரின் மனத்திலிருந்து லாவகமாக பயப்பீதியை அகற்றுகின்றனர். பொதுவாகச் சொன்னால் அதிர்ச்சி, அதிர்ச்சியிலிருந்து விடுவித்தல் என்பதைத்தான் உளவியல் கூறுகின்றது. அன்பான அரவணைப்பின் மூலம் உள்ளப் பயத்தை நீக்கி, புதிய சூழலை மனதில் தோற்றுவிப்பதன் மூலம் இவ்வதிர்ச்சியிலிருந்து விடுவித்தலை மேற்கொள்ளலாம்.



சாமிமார் கடவுளின் பெயரைக் குறிப்பிட்டு அதிர்ச்சி மீது கொண்ட நம்பிக்கையை அகற்றி மாறாகக் கடவுள் மீது நம்பிக்கை கொள்ளவைக்கும் தந்திரத்தை கையாளுகின்றனர். உளவியல் ரீதியாக நோக்கும் போது மனித தன்னம்பிக்கையை மழுங்கடித்து பிறர் மீது அல்லது பிறவற்றின் மீது நம்பிக்கையைத் தோற்றுவித்தல் குறித்த நபரின் எதிர்கால வாழ்வைப் பாழடிக்கும் செயலாகும். ஒவ்வொரு மனிதருக்கும் தன்னம்பிக்கையை ஊட்டுவதன் மூலமே நாடு நன்மையடைகிறது. தனிமனிதனின் வாயை மூடி வைத்துவிட்டு, அவனது நடத்தைகளை அவதானித்துச் சொல்வதன் மூலம் ஒரு மனிதருக்குள் இன்னொரு மனிதர் இருப்பதாகக் காட்டி அதற்குச்சாட்டாக "கூடு விட்டுக் கூடுபாயும் ஆவி" என்ற கருத்தை சில இடங்களில் சில பச்சைத் திருடர்கள் ( பொய் கூறிப் பிழைப்பவர்கள்) பரப்பியுமிருந்தனர். மேலும், வாயை மூடி இருக்கும் போது குறித்த ஆணுக்குள் பெண்ணின் குரல் கேட்பதாகவும் பொய்ப்புரளியொன்றை அவிழ்த்து விட்டிருந்தனர்.

குறித்த நபரின் பெயர் இந்துக்களின் முழுமுதற் கடவுளின் பெயரைக் கொண்டிருந்தால் "சிவனும் சக்தியும்" போன்று வாழ்வு நடப்பதாக குறித்த நபரின் அந்தரங்கங்களையும் அப்பச்சைத் திருடர்கள் பரப்பியுமிருந்தனர். மக்களின் கணிப்பீட்டில் குறித்த நபரின் எதிரணியினர் மேற்கொண்ட சதியெனவும் தெரியவந்தது. முற்பிறப்பில் குறித்த நபர் செய்த ஊழ்வினைக்கு இப்பிறப்பில் பட்டுத் தெளிவதாகவும் இதனைத்தான் "கடவுள் சக்தி", "கடவுள் குறைபாடு" எனக் கூறி மக்கள் குறித்தநபரைக்கேலியும் செய்திருந்தனர். மேலே இதுபற்றிக் குறிப்பிடப்படாத ஒன்று, வாயை மூடிக்கொண்டு இருக்கும் போது "சிந்தித்தல், திட்டமிடுதல், மனதிற்குள் சொல்லிக் கொண்டிருத்தல்" போன்றவை குரல் மூலமாக வெளிப்படுமா?

மனிதக் குரல் குரல்வளையில் உள்ள குரற்பெட்டியின் அதிர்வின் மூலமே வெளிப்படுகின்றது. வெளிப்படும் போது வெளிவரும் காற்று பிறர் காதுக்குள் நுழைகின்றது. இதனால் குறித்த நபரின் குரல் பிறருக்குக் கேட்கலாம். பிறருக்குக் கேட்பதற்கு வாயைத் தவிர, "குரலைக் கொண்டு செல்லும் காற்று" வெளியேற வேறுவழி இல்லையே. மெஞ்ஞானத்தில் கடவுளின் அசரீரி என்பது விஞ்ஞானத்தில் பொய்யாகும். அதேவேளை நிரூபிக்கப்பட முடியாத ஒன்றாகும். மூக்கினூடகச் சுவாசம் நிகழ்வதால் குறித்த நபரின் காதுக்கு ஊடாகக் குரல் வெளியேறுமா? இக்கற்பனைக் கதைக்கு: விஞ்ஞான ஆசிரியர்கள், ENT (Eye,Nose,Tongue) விசேட மருத்துவர்கள், விஞ்ஞானத் துறை சார்ந்தவர்கள் முடிவைத் தரவேண்டும். அதாவது இவ்வினாவிற்கான பதிலை வழங்க வேண்டும்.


சுதந்திரப் போராட்டம் நிகழும் நாடுகளில் கூட மக்களின் போராட்ட உணர்வினை, போர் நடைபெறும் மண்ணில் போரினால் பாதிப்புற்றவர்களின் எழுச்சி கொண்ட "போர்ச் சூழலில் பங்கெடுக்கும்" உணர்வினைத் திசைதிருப்பி போராட் டங்களை மழுங்கடிக்க எதிரிகளினால் பாவிக்கப்படும் வதந்திகள் பல உருவா கலாம். எவை, எப்படி இருப்பினும் இந்த விஞ்ஞான உலகில் மூடநம்பிக்கைகள் பரவுவதும், தன்நம்பிக்கைளை மக்களிடமிருந்து பிரிக்கும் செயல்களும் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். ஏமாறுபவர்கள் தங்கள் ஏமாற்றத்தை எப்போது உணர்கிறார்களோ அப்போது அவர்கள் புத்திசாலியாவதோடு, மற்றவர்களும் ஏமாறாது. தங்கள் ஏமாற்றத்தை மற்றவர்களுக்கு எடுத்துரைத்து எல்லோரும் முன்னேற வழிகாட்டுதலே நம்மவரில் ஏற்படவேண்டிய மாற்றமாகும். இங்கு, கற்பனைகளை வீசிவிட்டு கருத்தைப் பொருட்படுத்துவோம்.

நவீனநாரதர்

# பன்முகம் - 17

# யாசீன் நானா





என் இளமைக்கால நினைவுகளை மீட்டுப்பார்க்கும் போது யாசீன் நானாவும் ஒருவராக என் மனக் கண்முன் வந்து நிற்பார்.

மன்னார் பட்டின சபைக்கு முன்னாலே 'வெலிக பேர்ணிசர்பலஸ்' எனும் மரத்தளபாடங்கள் விற்பனை செய்யும் பெரியதொரு விற்பனை நிலையம் இருந்தது. நான் அறியவே தகரக்கடையாக இருந்த அந்த நிறுவனம் வெகு விரைவில் மூன்று பகுதிகளை உள்ளடக்கிய அழகிய கட்டடமாக வளர்ந்து விட்டிருந்தது. அதன் உரிமையாளர்தான் யாசீன் நானா.

எட்டாம் வகுப்பின் பின்னர் எனது கல்வியைத் தொடர முடியாத அளவுக்கு வீட்டில் பொருளாதார நெருக்கடி எழுந்த கால கட்டத்தில் என்கல்விக்குக்கை கொடுத்ததில் அந்த நிறுவனத்துக்கும் பங்குண்டு.

வாராவாரம் சனி, ஞாயிறு நாள்களிலும், பாடசாலை விடுமுறை நாள்களிலும் அங்கு சென்று மரத்தளபாடங்களுக்கு அரத்தாள் போடுதல், வார்ணிஷ் பூசுதல் போன்ற வேலைகளைச் செய்வதுண்டு. அந்நாள்களில் நாளொன்றுக்கு மூன்று ரூபாய்கள் கூலி கிடைக்கும்.

யாசீன் நானா தனது சொந்த ஊரான வெலிகமவில் இருந்து கொண்டு அவர் மைத்துனர் மூலம் மன்னாரில் இருந்த கடையைகிளை நிறுவனமாக நடாத்திவந்தார். அவருக்கு வெலிகமவிலும் இதே போன்று கடை உண்டு என்று சொல்வார்கள். எப்போதாவது ஒரு முறைதான் மன்னாருக்கு வருவார்.

அவரை முதன்முதலில் நான் காணும் முன்னர் அவரை ஒரு பணக்காரன், பெரும் முதலாளி என்ற கருத்தை மட்டும் கொண்டிருந்த எனக்கு அவர் மீது ஒரு விதபயம் மட்டும் தான் இருந்தது. ஆனால் அவரை நேரடியாகக் கண்ட பின்னர் அவர்மீது ஏனோ எனக்கு அன்பு கலந்த மரியாதை டாம்பீகமற்ற, அமைதியான அவரது பேச்சும் செயலும் அவர்பால் என்னை இழுத்துவிட்டிருந்தன.

அப்பொழுதெல்லாம் பிடவைப் பொட்டணிகளை தலைச்சுமையாகக் கொண்டு கிராமம் கிராமமாகச் சென்று விற்பனை செய்துவரும் முஸ்லிம் வியாபாரிகள் மன்னாரில் அதிகம். அவர்களில் பெரும்பான்மையானவர்கள் வெலிகமையில் இருந்து வந்தவர்களே. அவர்கள் எல்லோரும் அந்தக் கடைக்கு வருவார்கள். நீண்ட நேரம் பேசிக் கொண்டிருப்பார்கள். அவர்களை விடவும் யாசீன்நானா மிகமிக எளிமையானவராகவும், புகைத்தல் போன்ற ஆடம்பரப்பழக்க வழக்கங்கள் எதுவுமே அற்றவராகவும் இருப்பார். அநேகமாக மற்றவர்களுக்குப் புத்திமதி சொல்லுவதையே கண்டிருக்கின்றேன்.

ஒருநாள் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் அவரோடு தனிமையில் பேசுவதற்குச் சந்தர்ப்பம்கிடைத்தது. தான் என்னோடு பேசிக் கொண்டிருந்தால் என் வேலையின் வேகம் குறையும், அதனால் நட்டம் அவருக்கே என்பதைக் கூட சிந்திக்காதவராக என்னோடு உரையாடினார்.

"வாழ்க்கையில முன்னேற வேண்டும் என்ற இலட்சியமும், கட்டுப்பாட்டுடன் கூடிய உழைப்பும் இருந்தால் நாம் முன்னேறிவிடலாம்"

"ஒரு காலத்தில நானும் இவர்களைப் போன்று தலையில் பொட்டணி சுமந்து கொண்டு கிராமம் கிராமமாகப் போய் புடவை வியாபாரம் செய்தவன் தான். ஒரேநாளில் பல மைல்கள் நடையாகச் சென்று வியாபாரம் செய்திருக்கிறன். அப்பொழுதெல் லாம் நான் ஒரு செயின் சிமோக்கர்"

"அந்த நாளிலில சின்ன தகரரின்னில நெவிக்கற் சிகரட் வரும். அது எப்பொழுதும் என்கைவசம் குறையாமல் இருக்கும். ஒரு நாள் இப்படித்தான் பலமைல்கள் நடந்து வியாபாரம் செய்தகளைப்பில் தாராக்குண்டு (தற்பொழுது தாராபுரம்)ச் சந்தியில் வந்து இருந்து கொண்டு சிகரட் புகைத்துக் கொண்டிருந்தன். புடவை வியாபாரம் செய்த பணமும் என்னிடம் இருந்தது. அந்தச்சந்தர்ப்பத்தில் ஒரு கணம் தான் என் வாழ்க்கையில் திருப்பத்தை ஏற்படுத்தியது."

"இந்த இடத்தில் நான் தனிமையாக இருக்கின்றேன். திடீரெனயாரும் வந்து என்னை அடித்துக் கொன்றுவிட்டு என்னிடமிருக்கும் பணத்தையும் எடுத்துச் சென்றால் என்ன ஆகும்? வாழ்க்கையில் இதுவரை எதனைச் சாதித்து விட்டேன். என்ன மிச்சத்தைக் கண்டேன்" என நினைத்தேன்.

"கையிலே புகைந்து கொண்டிருந்த சிகரட்டைப் பார்த்தேன். இவற்றினால் என்னபயன்? அற்பசுகத்துக்காக சிகரட்டைப் புகைத்து பணத்தை அழிக்கின்றேனே? எனது வாழ்க்கையே எத்துணை அற்பமானது?"

"இப்படி என்னுள் எழுந்த எண்ணம் அத்தோடு விடவில்லை. கையில் புகைந்து

**நாவண்ணன்**

கொண்டிருந்த சிகரட்டை அணைத்து எறிந்தேன். திடீரென என்மனதில் ஒருவைராக்கியம், சபதம் - இன்றுமுதல் சிகரட்பிடிக்கவே மாட்டேன் என்ற உறுதியுடன் சிகரட்ரின்னில் மீதம் இருந்த அத்தனை சிகரட்டுக்களையும் கையில் எடுத்து முறுக்குப் பிய்த்துக் கசக்கி ஏறிந்தேன். அதன் பின்னர் இன்றுவரை சிகரட் புகைத்ததே இல்லை."

அன்றைய சபதத்தின் பின்னால் நான் எடுத்துக் கொண்ட கடும்முயற்சி எனக்குக்கை கொடுத்தது. பொருளாதாரத்தில் வளர்ந்தேன். இப்பொழுது ஊரிலும், இங்கும் எனக்குக் கடைகள் இருக்கின்றன. நான் வசதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ்கின்றேன்" என்றார்.

இந்தச் சம்பவத்தை அவர் கூறி இன்று கிட்டத்தட்ட நாற்பது ஆண்டுகளாகிவிட்டன. யாசீன் நானா இப்பொழுது இருக்கிறாரோ இல்லையோ அதுவும் தெரியாது.ஆனால் அவர் என்னுடன் பகிர்ந்து கொண்ட அனுபவங்களும், கருத்துகளும் அவர் உருவமும் பசுமரத்து ஆணி போல் என்றும் பதிந்து நிற்கின்றன..

# ஊக்க மாத்திரை

# போட்டி



மனித முன்னேற்றத்திற்கு முக்கியமாக தேவைப்படுவது போட்டி மனப்பான்மையாகும். இது இல்லையெனில் மனிதன் இவ்வளவு தூரம் முன்னேறியிருக்க முடியாது. மனித நாகரீகத்தின் வளர்ச்சியே இந்தப் போட்டி மனப்பான்மையால் தான் சாத்தியப்பட்டுள்ளது. மனிதனின் தேவைகள் பெருகப் பெருக அதை அடைந்துவிடுவதில் ஒருவருக்கொருவர் போட்டியிட்டதனாலேயே உலகில் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் விருத்தியடைந்துள்ளது. சந்திரன், செவ்வாய், வியாழன் என்று கண்ணுக்கெட்டிய கோள்களையெல்லாம் எட்டித்தொட முனையவைத்துள்ளது. உலகத்தின் எந்த இடத்திலிருந்தாலும் அவர்களுடன் நினைத்த மாத்திரத்தில் தொடர்பு கொள்ளக்கூடிய வாய்ப்புகளை தொழில்நுட்பம் எமக்களித்துள்ளது. முன்னேற்றமடைந்த நாடுகளிலெல்லாம் அவர்கள் சகல துறைகளிலும் போட்டி போடுவதனாலேயே இவ்வளவு விரைவில் முன்னேற்றம் அடைந்துள்ளனர்.

மனிதர்களுக்கிடையேயான போட்டி நாட்டை முன்னேற்றும். நாடுகளுக்கிடையேயான போட்டி உலகை முன்னேற்றும். ஆகவே எமது மக்களும் எனது வீடு, எனது வேலை, என் உணவு என்று இருந்து விடாது ஒவ்வொரு நிமிஷமும் தனது ஆகக்கூடிய திறமைகளை எந்த வழியிலாவது வெளிப்படுத்த முயலவேண்டும். இந்த மனப்பான்மை நாட்டின் ஒவ்வொரு பிரஜையிலும் ஏற்படுமானால், ஏற்படுத்தி விட்டோமானால் எமது நாட்டை முன்னேற்றுவது வெகு சுலபமாகிவிடும். நாட்டில் எவ்வளவு இயற்கை வளங்கள் இருந்தாலும் அதனைப் பயன்படுத்திக் கொள்ளாவிடில் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடையப்போவதில்லை. மனிதன் தனது தனித்திறமைகளை வெளிப்படுத்த முனையும் போது நாட்டின் சகல வளங்களும் பயன்படத்தொடங்கும். இது மற்றவர்களையும் ஊக்குவிக்கும். சகலதுறைகளிலும் ஒரு வேகம் ஏற்படும் ஏனோதானே என்று இருப்பவர் விழித்துக்கொள்வர். எனவே சகல துறைகளிலும் போட்டியை ஏற்பாடு செய்வது மனிதனின் உச்சக்கட்ட திறமையை வெளிக்கொண்டுவரும் ஒவ்வொரு மனிதனின் உச்சக்கட்ட திறமை வெளிப்படும் போது எல்லாத் துறைகளும் விருத்தியடையும். பொருளாதாரம் பெருகும். நாடு முன்னேற்றமடையும்.

ஒரு மனிதனை முன்னேற்ற வேண்டுமென நினைத்தால் அவன் சிறு குழந்தையாக இருக்கும் போதே எந்த விஷயத்திலும் மற்றவர்களை முந்த வேண்டும் என்ற எண்ணத்தை மனதில் பதித்து விட வேண்டும்.

பொதுவாகவே மனிதர்களில் போட்டிமனப்பான்மை அடிமனதில் உள்ளது. அதை எல்லோரும் வெளிக்காட்டுவதில்லை. சிறுகுழந்தைகளில் நாம் இந்த மனப்பான்மையை ஊக்குவித்தோமானால் அவன் எதிர்காலத்தில் ஒரு தலைசிறந்த மனிதனாக, மாமனிதனாக உருவாவது திண்ணம். ஆனால் இன்னும் எம் நாட்டில் பிள்ளைகளின் உடலை வளர்ப்பதில் உள்ள அக்கறை அவர்களுடைய ஆளுமையை வளர்ப்பதில் காணப்படவில்லை. போட்டியின்றி இருப்பவர்கள் "நல்ல பிள்ளை" யென்று பட்டம் சூட்டி அவனை முன்னேறவிடாமல் தடுத்து விடுவதோடு. இதனைப் பார்த்த மற்றப் பிள்ளைகளும் அதுதான் நல்ல பழக்கம் என்று எண்ணி தங்களுடைய ஆளுமையை வெளிப்படுத்தப் பயந்து பின்வாங்கிவிடுகிறார்கள். இதனால் தங்கள் திறமையை வெளிப்படுத்த வாய்ப்பின்றி ஒரு சாதாரண வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

எனவே கற்றவர்கள் இதைப் புரிந்து கொண்டு சமூகத்தின் எல்லாமட்டங்களிலும் உள்ளவர்களை அவர்களுக்கு பொருத்தமான துறைகளில் போட்டியிட்டு அவர்களின் தனித்திறமையை வெளிப்படுத்த களமமைத்து கொடுக்க வேண்டும். பிள்ளைகளின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட பெற்றோர் இந்த ஊக்குவிப்புக்கு முன்னின்று உழைக்க வேண்டும். பிள்ளைகள் தங்கள் தனித்திறமைகளை வளர்த்துக் கொள்ள தடைக்கற்களாக பெற்றோரோ உறவுகளோ நிற்கக் கூடாது. இதை நாம் எதிர்கால சந்ததியினருக்குச் செய்யும் பெரும்பணியாக எண்ணி கரிசனையுடன் செயற்படவேண்டும். இது நம் நாட்டின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட ஒவ்வொரு பிரஜையின் கடமையுமாகும்.

ஒவ்வொரு மனிதனும் இந்தப்போட்டி மனப்பான்மையை வளர்ப்பதை தங்கள் தங்கள் வீட்டிலிருந்தே ஆரம்பிக்கலாம். அப்படிச் செய்வதானால் மனிதனின் அதிஉன்னத திறமை வெளிக்கொண்டுவரப்படும். இதுவே பழக்கப்பட்டுவிட்டால் என்ன தொழிலிலும் உச்சக்கட்ட திறமையை நாம் பெற்று நம் வீட்டை முன்னேற்றுவதுடன் நாட்டையும் ஏன் இந்த உலகத்தையே முன்னேற்றுபவர்களாக நாங்களே இருப்போம். அடிப்படைத் தேவைகளைக் கூடபூர்த்தி செய்ய முடியாது திண்டாடும் எம்மக்கள் ஒருவருக்கொருவர் போட்டி மனப்பான்மையோடு செயற்படும் போது அவர்களின் அதிஉன்னத திறமை வெளிப்பட்டு நாடும் நாமும் சிறக்க நாம் அனைவரும் முழுமூச்சுடன் செயற்படத் தொடங்குவோம்.

**இராஜசாந்தி**


சிறு அருவியும், பெரும் தாகத்தைத் தணிக்கக் கூடும். - ஆங்கிலப் பழமொழி.



# தியன்பியன்பூ – வும் ஆனையிறவும்...



ஒரு பிளட்டூன் படை அந்த முகாமில் இருந்த வேளை விடுதலைப் புலிகள் அதனை கைப்பற்ற வழி இருக்க வில்லை. ஒரு கொம்பனி இராணுவத்தினர் அங்கே இருந்தவேளை புலிகளால் அதனைக் கைப்பற்றமுடியவில்லை. ஒரு பிறிகேட்படை அங்கே காலூன்றிக் கொண்டிருந்தவேளை, இரண்டு இராணு வங்கள் போரிடுகின்றன என்று வெளிநாட்டு ஆய்வாளர்கள் கூறும் அளவுக்கு முற்று கைச் சமரிட்டும் இறுதி நேரத்தில் கைப்பற்ற முடியாமல் தவித்தோம். ஆனால் பரந்தன் வரை நீண்டு ஒரு டிவிசன் படை அங்கே பரந்திருந்த வேளை, 2டிவிசன் படையினர் பின்பலமாக குடாநாட்டுக்குள் இருந்த வேளை இறுதிவரை பின்புல படைகளு டனான தொடர்பு மார்க்கங்கள் திறந்திருந்த வேளையிலும் நாங்கள் பயிற்சி கொடுத்த படையினர் அங்கே இருக்கிறார்கள்



அவர்கள் ஒரு அங்குலம் கூட பின் நகரமாட்டார்கள் என்று அமெரிக்க ஜென ரல்கள் கித்தாய்ப்பாக பிரகடனம் செய்து கொண்டிருந்த வேளையிலும் அந்த முகாமை தேசியத்தலைவரின் நெறிப்படுத்த லில் நேரடியாகவே என்று சொல்லக் கூடிய முறையில் மரபு வழிச்சமர் புரிந்து கைப்பற் றினார்கள் புலிகள். பெரும் நாடுகளின் மரபுவழி இராணுவங்களைப் போல் கடல் வழி, தரைவழி படை நகர்த்தி, தரையி றக்கத்தை மேற்கொண்டு கிட்டத்தட்ட எதிரி பிராந்தியத்தின் மையம் என்று சொல்லக் கூடிய A9 வரை நகர்ந்து ஒரே இரவில் பாதையை குறுக்கறுத்து அரண்களை அமைத்தார்கள்.

கவசவாகனங்கள், சமர் டாங்கிகள், அகோர எறிகணை வீச்சுகள், வான் வழித்தாக்குதல்கள் சகிதமாக எதிரி மேற் கொண்ட எட்டுக்கு மேற்பட்ட முறியடிப்பு தாக்குதல்களை முறியடித்து, ஒரு அணி யினர் ஆதரவு வழங்க, கடற்படையின் மிதக்கும் கோட்டைகள் எனக் கூறப்படும் டோறாக்கள், வான் வழித்தாக்குதல்க ளுக்கு நடு விலும் துணிகரமாக நகர்ந்து வழங்கல்கள், படைநகர்த்தல்கள் ஆளிழப்புகளை வெளி யகற்றுதல் கடமைகளை மேற்கொண்ட கடற்புலிகள், கடலில் போலவே தரை வழிச்சமரிலும் தோள் கொடுக்க எமது விடு தலைப் போராட்ட வரலாற்றில் 17 வருடங் களாக அசைக்கமுடியாத இரும்புக் கோட்டையாக எழுந்துநின்ற அந்த 250 வருட அடக்கு முறையின் சின்னம், "பஸ்குலா" வீழ்ந்தது. ஆமாம் ஆனையிறவு தான் அந்தக் கோட்டை. 3000 விடுதலை வீரர்களின் உயிர்கள் கொடுக்கப்பட்டது. இறுதி 48 மணிநேர சமரில் 35 வீரர்களை களப்பலி கொடுத்தோம். இந்த வெற்றி யிலே வேங்கைகளுக்கும் எல்லைப் படை, சிறப்புஎல்லைப்படை என கை கொடுத்த மக்களுக்கும் பெரும் பங்குண்டு. ஆனால் இவ் வெற்றியை சாத்தியமாக்கிய புலிகளின் படையணிகளான கரும்புலிகள், கடற் புலிகள், தரைவழி படையணிகள் எல்லைப்படை என எல்லாப் படைகளும் அன்று களத்தில்நின்றன. இன்று பலராலும் ஆனையிறவுடன் ஒப்பிட்டுக் கூறப்படும் தியன் பியன்பூ- வின் கதை என்ன?

பிரெஞ்சு ஆக்கிரமிப்பு படைகள் "எதிரி பிராந்தியத் தினுள்ளான ஆட்சிப் பகுதி" என்று கூறக்கூடிய ENCLAVE STRATEGY முறையிலே வியட்னாம் பகுதியுள் முன்னேறி தியன்பியன் பூ முகாமையும் அதைச் சூழஏழு உபமுகாம்களையும் அமைத்துக் கொண்டு நிலை கொண்டிருந் தார்கள். இவர்களை எதிர் கொண்டவர் பெரும் தந்திரோபாய நிபுணர் எனக் கருதப்படும் ஜெனரல்வோநூ யென் கியாப். தன்னை இராணுவஅறிவு இல்லா தவர் என்று இகழ்ந்த பிரெஞ்சு, அமெரிக்க ஜெனரல்களுக்கு மரணஅடி கொடுத்தவர்.

தியன்பிபன்பூ-வானது சூழவர இருந்த உயரமான மலைப் பகுதிகளுக்கு நடுவே இருந்த பள்ளத்தாக்கு ஒன்றில் அமைந்திருந்தது. வடவியட்னாமின் 304, 308,312,316,351ம் டிவிசன்களை தாக்கு தலுக்கென நகர்த்திய கியாப் மிக இலகு வாகவே பிரதான படைகளுடன் இருந்த தரை வழித்தொடர்புகளை துண்டித்து விட் டார்.

1954 ஜனவரி 31ம் திகதியி லிருந்து தியன்பியன்பூ ஆட்டிலறித் தாக்குதலுக்கு உட்பட்டது. அரண்கள் அமைக்க பொருட்கள் இருக்கவில்லை. உயிர்வாழ்வதற்கு வான்வழி வழங்கல் களை நம்பியிருக்க வேண்டியிருந்தது.

மார்ச் 10 ம் திகதி ஓடுபாதையும் ஆட்லறி தாக்குதலுக்குட்பட்டது. நிலைமை மேலும் மோசமாகியது. கியாப்பின் வழமையான தந்திரோபாயப்படி வெளிக் காவல் முகாம் கைப்பற்றப்படுகின்றன.

மார்ச்11ம் திகதி கபிரியேல் முகாமும் மார்ச் 13ம் திகதி ஆன்மேரி, பியாட்ரிஸ் முகாம்களும்,


மார்ச் 30ம் திகதி டொமினிக் முகாமும், ஏப்பிரல் 01ம் திகதி ஹியூகுவென் முகாமும்,ஏப்பிரல் 02ம்திகதி இஸபெல் முகாமும், ஏப்பிரல் 03 ம் திகதி எலெய்ன் முகாமும் வீழ்ச்சியடைந்தன.

ஏப்பிரல் 4ம் திகதிவரை 2000பேரை இழந்து எஞ்சியயோர் பின் வாங்கி தியன் பியன்பூ வந்தனர்.

மார்ச் 14 ம்திகதி வந்து சேர்ந்த 3 பரா பட்டாலியன்களுடன் மொத்தம் 16000 பிரெஞ்சு வீரர்கள் தியன்பியன் பூ-வில் இருந்தனர். இவர்களை 50,000 ( மதிப்பீடு செய்யப்பட்ட தொகை) வியட்மிங் படைகள் சூழ்ந்திருந்தனர். தியன்பியன் பூன் வை சூழஇருந்த சரிவுகளில் 300க்கு மேற்பட்ட 105 மி.மீ பீரங்கிகளை கியாப் புத்திசாலித் தனமாக நிலைப்படுத்தியிருந்தார். அது வரை மனித அலை தாக்குதல் (HUMAN WAVE ATTACK)களை கைக்கொண்ட கியாப் அதைக் கைவிட்டு, சிக்கலான அகழி அமைப்பை பயன்படுத்தி, மேற்படி ஆட்டிலறிகளின் காப்போடு தனது படைகளை கிரமமான ஆக்கிரமிப்பு மூலோ பாயத்தைப் (STEADY ENCROACH-MENT STRATEGY) பயன்படுத்தி முன்நகர்த்தினார்.

பிரெஞ்சு வான்தாக்குதல்கள் பயனற்றுப் போயின. இவற்றுக்கு எதிராக சண்டையிட்ட வியட்னாமிய வான்கல எதிர்ப்பு தாக்குதல் அணிகளில் ஆகக் குறைந்தது 1 சீன றெஜிமென்றும் அடங்கி யிருந்தது. பிரஞ்சு வழங்கல் வான்கலங்கள், கிட்டத்தட்ட தங்கள் செயற்பாட்டு வீச்சின் எல்லையில் முற்றுகைக்குட்பட்டிருந்த வீரர் களுக்கு வழங்கல்களை கொண்டு வந்தன. 37 மி.மீ படைக்கலங்களை பயன்படுத்திய வான்கல எதிர்ப்பு அணியினர் மேற்படி வான்கலங் களைகிரமமாகச்சுட்டு வீழ்த்திக் கொண்டிருந்தனர். சமர் முடிந்தவேளை மொத்தமாக 64 வான்கலங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டிருந்தன. அத்தோடு 20-30% மான வழங்கல்கள் வியட்மிங் கை களில் வீழ்ந்தன.

ஏப்பிரல் 11,12ம் திகதி களில் வந்து சேர்ந்த இன்னொரு பரா பட்டாலியன் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட பல முறியடிப்புத் தாக்குதல்களில் அற்ப பலன்களே கிட்டின.




**அனபாயன்**

ஏப்பிரல் 22ம் திகதி பருவகால மழை ஆரம்பித்தது. (அந்த பகுதிகளின் வருடாந்த மழை வீழ்ச்சி 152 மி.மீ ஆகும்.) காவலரண்களில் நீர் நிறைந்தது. நீரை வெளியேற்றும் வசதிகள் இருக்கவில்லை வழங்கலும் மோசமடைந்தது.

மே 1ம் திகதி எல்லாப் பக்கங் களிலும் இருந்து ஒரே நேரத்தில் வியட்மிங் படைகள் தாக்குதலை ஆரம்பித்தன. அவற்றுக்கு இடையிலும் மேலு மொருபரா பட்டாலியன் அங்கே தரையிறங்கியது. எனினும் வியட்மிங்குகளின் தாக்குதலுக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் நிலைகள் ஒவ்வொன்றாக வீழ ஆரம்பித்தன.

55 நாள் முற்றுகைக்குப் பின் மே 5ம் திகதி பிரெஞ்சு ஜென ரல் கிறிஸ்ரியண்டி காஸ் றீஸ்சும் (GEN.CHRISTIAN DE CAST RIES) அவரது வீரர்கள் 11000 பேரும் சரணடைந்தனர். இவர்களுள் பிரெஞ்சு கூலிப்படையினர் உள்ளிட்ட 7 பரா பட்டாலியன்கள், 4வட ஆபிரிக்க பட்டாலியன்கள், 4பிரெஞ்சு கூலிப்படை காலாட் படை பட்டாலியன்கள் 2 ராங் பட்டாலியன்கள்,4 ஆட்லறி குழுக்கள், 1 பொறியியல் பட்டாலியன், 1ராங் கொம்பனி, 1ட்ரக் கொம்பனி ஆகியன அடங்கி யிருந்தன.

6 மாதப் போரில் 7184 பிரெஞ்சு வீரர்கள் கொல்லப்பட்டிருந்தனர். வியட்னாமிய இழப்புகள் 20,000 என மதிப்பிடப் பட்டுள்ளது. இதற்கு 2 மாதத்தின் பின் ஜெனிவாவில் சரணாகதி ஒப்பந்தம் கைச் சாத்தாகியது. இப்பொழுது இந்த இரண்டு சமர்களையும் சீர் தூக்கிப் பார்த்தீர்களாயின் அவை இரண் டையும் ஒப்பி டுவது எவ்வளவு பொருத்த மற்றது என்பது புரிந்து போகும்.



ஆதாரம்
WAR & PEACE

# தொடரும் மோதல்கள்; பதட்டம் எப்போது தணியும்?



அண்மைக்காலமாக பரபரப்பாக இடம் பெற்றுவரும், கொடூரச் செயல்களான மோதல்கள், கொலைகள், கடத்தல்கள், கைக்குண்டு வீச்சுக்கள் மற்றும் தாக்குதல்கள் என்பன புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு மாறாகவே மேற்கொள்ளப்படும் செயல் என்பது ஒரு புறம் இருக்க; இந்த தீய செயல்களை யார் செய்கின்றார்கள்? எதற்காக செய்கின்றார்கள்? இதற்கு பின்னணியில் யார் இருக்கின்றார்கள் என்பது பற்றித் தெளிவாக அவதானித்து, இந்த வகையான செயல்களை முற்றுமுழுதாக இல்லாமல் செய்வதே சமாதானத்தின் அடிவேராக அமையும் என்பதை கவனித்து அக்கறைகொள்ள வேண்டியதே இப்போதைய மிக அவசியமானதும் முக்கியமானதுமான விடயமாகவே இருக்கின்றது.

இப்படியான செயல்களில் ஒன்று புதுவருடப் பிறப்பன்று மட்டக்களப்பு ஆரையம்பதியில் நடைபெற்றுள்ளது. விசேட அதிரடிப்படையினருடன் கூட்டுச் சேர்ந்து செயற்பட்டு வரும் தேசவிரோதக்குழுவான வரதன் குழுநடத்திய கைக்குண்டுத் தாக்குதலில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இச் சம்பவம் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டது என்று அக்குழுவால் புலிகள் மீது குற்றம் சுமத்தப்பட்டது. ஆனால் விடுதலைப்புலிகள், இச்சம்பவத்திற்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென்று தெரிவித்துள்ளனர். இதிலிருந்து உண்மை நிலை என்னவென்று விளங்கிக் கொள்ளவேண்டும்.

இதே போன்று இன்னுமோர் சம்பவம் மூதூர் கடற்கரைச் சேனைப் பகுதியில் இரு முஸ்லிம் இளைஞர்கள் கடத்திச் செல்லப்பட்டுள்ளதைச் சாட்டாகவைத்துக்கொண்டு தற்போது பெரும் ஆர்ப்பாட்டத்தையும், பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

இரு இனங்களுக்கிடையிலான மோதலைத் தூண்டி அவற்றின் பயனாக அரசியலில் சுயலாபம் தேடும் இன வெறியர்கள் அண்மையில் மூதூரில் தமது கைவரிசைகளைக் காட்டத் தொடங்கியுள்ளனர்.

**க.ஜெயசீலன்**

உண்மையிலேயே இது முஸ்லிம் காங்கிரஸிற்கும் ஐ.தே கட்சியினருக்கும் ஏற்பட்ட முரண்பாடுகளை அடுத்து, இனங்களுக்கிடையிலான மோதலை மறைமுகமாக ஏற்படுத்தி, அதில் அப்பாவி மக்களின் உயிர்களை பலி கொடுத்து, அதற்குப் பதிலாக அரசியலில் லாபம் தேடி, தாம்தான் முஸ்லிம் மக்களின் கதாநாயகர்கள்- ஏகபிரதிநிதிகள் என்று தம்மை இனங்காட்டிக் கொள்ள விரும்புகின்றார்கள் போலும் எண்ணத்தோன்றுகின்றது.

தற்போது மூதூரில் மையங் கொண்டிருக்கும் இனவிரோத புயலை சாதகமாகப் பயன்படுத்தி, வேறு சில குழுக்கள்,அமைதிச் சூழலை குழப்ப இன்னும் பல்வேறுபட்ட வகையிலான நடவடிக்கைகளில் இறங்கலாம்.

இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கை இப்போது தமிழ்- முஸ்லிம் மக்களிடையேயான பெரும் மோதலையே தோற்றுவிக்க வழிதோன்றியுள்ளது.

ஆனால் கடத்தல் விவகாரத்திற்கும், இம் மோதல்களுக்கும் எவ்விததொடர்பும் இல்லை. இது தமிழ்-முஸ்லிம் இனங்களுக்கிடையிலான குழப்பத்தையும், பதற்றத்தையும் ஏற்படுத்தி, அரசியல் கட்சிகளுக் கிடையிலான மாற்றத்தைக் கொண்டு வந்து அரசியலில் ஆதாயம் தேடமுனையும் சக்திகளின் திட்டமிட்ட செயலே இதுவாகும்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக விடுதலைப்புலிகள் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையீடு செய்தபோது; விடுதலைப் புலிகளுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கில் சில குழுக்கள் இயங்கிவருவதாகவும், சமாதானத்தை முழுமையாக ஏற்படுத்தும் நோக்கில் நாங்கள் இதயசுத்தியுடன் செயற்பட்டு வரும் இந்த காலகட்டத்தில் புலிகளுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கில் இத்தீய சக்திகள் செயற்பட்டு வருவதை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு உடனடியாக தடுத்துநிறுத்த வேண்டும். இவ்வாறான குழுக்கள் இருப்பதால் தான் தொடர்ந்தும் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறுகின்றன என்பதை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அறிந்து கொள்ள வேண்டும் என்று அம்முறையீட்டில் வலியுறுத்தியுள்ளனர். இதிலிருந்து ஒன்றை நாம் தெளிவாகவே விளங்கிக் கொள்ள வேண்டும். இது தேச விரோத குழுக்களின் திட்டமிட்ட செயல் என்று.



ஆகவே இந்த வகையிலான சம்பவங்கள் தொடர்பாக விடுதலைப்புலிகள் தெரிவித்து வரும் எதிர்ப்புகள், கண்டனங்கள், பொறுமை மற்றும் செயற்பாடுகள் என்பவற்றோடு ஒப்பிடும் போது புலிகள் இயக்கம் சமாதானத்தில் அக்கறையுடனும், இதயசுத்தியுடனும் இருக்கிறார்கள். அவர்களின் இலக்கு சமாதானம் என்பதிலும் சிறிதளவும் சந்தேகமில்லை.

விடுதலைப் புலிகள் அப்படி யுத்த நிறுத்தத்தை மீறும் இவ்வகையிலான சிறு,சிறு செயல்களில் ஈடுபட்டு சமாதானத்தில் இருந்து தம்மை விலத்திக் கொள்ள நினைத்திருந்தால் சில மாதங்களுக்கு முன்பு சந்திரிகாவின் தலைமையில் செயற்பட்டு வரும் கடற்படையின் அடாவடித்தனத்தாலும், அட்டூழியத்தாலும்புலிகள் மீது தாக்குதல்களை மேற்கொண்டு போராளிகளின் உயிரிழப்புக்களையும், பெரும் இழப்புகளையும் சந்தித்த விடுதலைப்புலிகள் அப்போது பொறுமை காத்து, எத்தனையோ சம்பவங்களிலிருந்து விலகிச் சென்று, தமது முழு ஆதரவையும் வழங்கி சமாதானத்தின் விரும்பிகளாக செயற்படுவதாகவும் நிரூபித்துள்ளனர்.

எனவே கண்காணிப்புக் குழுவும் சரி, வெளியுலகமும் சரி இதிலிருந்து ஒன்றைத் தெளிவாக விளங்கிக் கொள்ளவேண்டும். இந்தவகையிலான செயல்களை சமாதானத்தை விரும்பாத சில இனவெறியர்களின் திட்டமிட்டசெயல் என்பதை இப்படியான இச் சிறு அடாவடித்தனங்களைச் செய்து வரும் இச்சக்திகள், அவதானிகள் கருதுவருபோல் இனிவரும் காலங்களில் பெரும் அடாவடித்தனங்களில் ஈடுபட்டு சமாதானத்தை சீர்குலைக்கமாட்டார்கள் என்பதிலும், இந்த வகையிலான சம்பவங்களை செய்துவிட்டு புலிகள் மீது குற்றம் சுமத்தும் இக்குழுக்கள் மீது எவ்வளவு காலத்திற்கு பொறுமை காப்பது?

ஆகையினால் வன்முறைச் செயல்களில் ஈடுபடுவதன் மூலம் தமிழ்-முஸ்லிம் இன மக்களுக்கிடையிலான நல்லுறவை பாதிப்படையச் செய்து, தமிழ்-முஸ்லிம் மக்களை வேறுபடுத்தி, அவர்கள் பிரிந்து செல்வதன் மூலம் சமாதானத்தை குழப்பிவிடலாம் என்று எண்ணுகின்றனர் போல் எண்ணத் தோன்றுகின்றது.

அநேகமாக இந்த மாதிரியான சம்பவங்கள் மூவின மக்களும் வாழும் கிழக்கு மாகாணத்தில்தான் கூடுதலாக இடம்பெற்றுவருகின்றது. ஏனெனில் அங்குதான் சந்திரிகாவின் தலைமையில் இயங்கும் பொ.ஜ. முன்னணியின் பின்னணியில் செயற்படும் தேசவிரோதிகள் மற்றும் புலனாய்வுப் பிரிவினரின் ஊடுருவல்களும் தாக்குதல்களும் அதிகமாக இருக்கின்றது.

சமாதானத்தை விரும்பாத இன வெறியர்கள் இப்படியான கொடூரச் செயல்களைச் செய்து விட்டு பின்னர் விடுதலைப்புலிகள் மீது குற்றம் சுமத்துகின்றனர். இப்படிக் குற்றம் சுமத்துவதன் மூலம், சர்வதேச அரங்கில் விடுதலைப் புலிகளுக்கு இருக்கும் அங்கீகாரத்தை இல்லாமல் செய்வதோடு, சர்வதேசநாடுகளின் கவனிப்பை திசை திருப்புவதோடு மட்டுமல்லாமல்- விடுதலைப்புலிகளை குற்றவாளிகளாக மாற்றி, சமாதானப் பாதையில் இருந்து விலகிச் செல்ல செய்வதே நோக்கமாக இருக்கலாம்.



இத்தகைய செயல்களை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும், சம்பந்தப்பட்ட தரப்பினரும் இதனை அவதானித்து, இந்த செயல்களின் பின்னணியிலிருந்து யார் செயற்பட்டு வருகின்றார்கள். எத்தகைய நோக்கத்திற்காக இப்படியான ஈனச் செயல்களைச் செய்கின்றார்கள் என்பதை கண்டறிந்து, சமாதானத்தை விரும்பாத இந்த தீய சக்திகளை அகற்றி இல்லாமல் செய்வதே சமாதானத்தின் முன்னேற்றத்திற்கு அடிப்படையான ஒரு முக்கிய விடயமாக இருப்பதோடு, இனிமேலும் வரும் பெரும் பிரச்சினைகளைத் தடுப்பதன் மூலமே சமாதானத்தின் எதிர்கால பயன் குறித்து நம்பிக்கை கொள்ளலாம்.

**கிழக்கு மாகாணம் இப்போது ஒரு பரீட்சைக் களமாக அரசியல் கட்சிகளால் பயன்படுத்தப் படுகின்றதோ என்ற சந்தேகம் எல்லா மக்களின் மனங்களிலும் எழத்தொடங்கியுள்ளது.**

தன்னை அடக்கி வாழ்வதே, தலையாய 'ஜீஹத்' (புனிதப் போர்) - முகம்மது நபிகள்.

# நேர்நோக்கு

## பொ.ஐ.மு.வின் ஆராய்ச்சி

தற்போது நடைபெற்று வரும் சமாதானப்பேச்சுவார்த்தைகள் குறித்து பொதுசன ஐக்கிய முன்னணி உள்ளூராட்சிச்சபை மட்டத்தில் ஆராய்ந்து வருகிறதாம். இப்பேச்சுவார்த்தைக்கு உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களின் ஆதரவு என்ன நிலையில் இருக்கிறது. அதாவது அவர்களின் மனோநிலை எவ்வாறு இருக்கிறது என்பது குறித்து பொதுசன ஐக்கிய முன்னணி ஆராய்கிறது எனக்கொள்ளலாம்.

ஆனால் இது சமாதான முயற்சிகளுக்கு ஆதரவான செயற்பாடாக நிச்சயமாக இருக்காது. ஏனெனில் பொதுசன ஐக்கிய முன்னணியும்சரி சனாதிபதி சந்திரிகாவும்சரி சமாதான முயற்சிகளைக் குழப்பி தாம் ஆட்சிபீடம் ஏறும் கனவிலேயே இருக்கின்றனர் என்பதில் ஐயமெதுவுமில்லை.

அவர்கள் உலகிற்குச் சமாதானமும் உள்ளூரில் யுத்தமும் என்ற கொள்கையுடனேயே செயற்பட்டுவருகின்றனர். அதில் என்றுமே மாற்றமில்லை.

ஆனால் இப்போது அது குறித்து உள்ளூராட்சி மட்டத்தில் ஆராய்ச்சிகள் தொடங்கப்பட்டுள்ளதற்குகாரணம் தற்போது சில கருத்துக்கணிப்புகள் சமாதான முயற்சியில் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையில் சரிவு ஏற்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டுவதாகும். இன்று ஆட்சியிலுள்ள ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை எவ்வேளையிலும் கலைத்துவிடக் கூடிய அதிகாரம் சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கவிடமிருந்தும் அவர் அவ்வாறு நடந்து கொள்ள முடியாமைக்கான காரணம் வெளிப்படையானதாகும். அதனை அவர் அண்மையில் இந்தியாவில் வெளிப்படுத்தியுமுள்ளார்.

அதாவது ரணில் விக்கிரமசிங்கவுடனும் ஐக்கிய தேசிய முன்னணியுடனானதுமான உறவு நிலை அச்சமூட்டும் வகையில் அமைந்துள்ள போதும் அந்த அரசாங்கத்தைக்கலைக்கும் எண்ணம் தனக்கு இல்லை என அவர் கூறியிருக்கிறார்.

அவ்வாறு இன்றைய அரசாங்கதைக் கலைக்க முன் அரசியல் சூழ்நிலை குறித்து கவனம் செலுத்த வேண்டும் என சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியிருக்கிறார். எனவே ஐக்கிய தேசியமுன்னணி அரசாங்கத்தைக் கலைப்பதற்கான அரசியல் சூழ்நிலை இருக்கிறதா என்பதை உள்ளூராட்சிமட்டத்தில் ஆராய்வதே பொதுசன ஐக்கிய முன்னணியின் இந்த நடவடிக்கையின் நோக்கம் என்ன என்பது வெளிப்படுகிறது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தியாவுக்கும் பங்களாதேசுக்கும் விஜயம் செய்து திரும்பியிருக்கிறார். இந்த விஜயங்களை முடித்துக் கொண்டு நாடு திரும்பியதும் முக்கிய சில முடிவுகளை எடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இப்போது அவர் கொழும்பு திரும்பியுள்ள நிலையில் அவர்கள் குறிப்பிட்ட முக்கிய முடிவுகள் எடுக்கப்படுமா? அல்லது தொடர்ந்தும் சரியான அரசியல் சூழ்நிலைக்கு சந்திரிகா காத்திருக்க வேண்டிவருமா? என்பதை உள்ளூராட்சி மட்டத்தில் எடுத்த தரவுகள் முடிவு செய்யலாம்.

ஆனால் தற்போது சமாதான முயற்சிகள் சென்றுகொண்டிருக்கும் திசைமக்கள் மத்தியில் சமாதானம் குறித்த ஐயப்பாட்டை ஏற்படுத்துகிறது. சமாதானத்துக்கு எதிரானதும் யுத்த நிறுத்தத்தை மீறும்வகையிலானதுமாக அண்மைக் காலத்தில் விடுதலைப்புலிகள் மீது அரசபடைகள் மேற்கொண்டு வரும் தாக்குதல்கள் புறந்தள்ளிவிடக் கூடியவையல்ல. ஆனால் புலிகள் பொறுமை காப்பதால் சமாதானம் காப்பாற்றப்பட்டுவருகிறது. அரசாங்கப்படைகள் சனாதிபதி சந்திரிகாவின் கட்டுப்பாட்டில் இருப்பதால் இவ்வாறான அசம்பாவிதங்கள் ஏற்படுவதாக எடுத்துக் கொண்டாலும் இச்சம்பவங்களுக்கு அரசாங்கம் சப்பைக்கட்டு கட்டுவதும், அவை நடைபெறாது தடுக்க மாற்றுவழிகளை அரசாங்கம் தேடாதிருப்பதும் மக்கள் மத்தியில் சமாதானம் குறித்த நம்பிக்கையை பலம் குன்றச் செய்திருப்பது உண்மையே.

அதேவேளை அரசியல் ரீதியாக ஆறுசுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்றிருப்பினும் பேச்சுவார்த்தைகளில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் நடைமுறைப்படுத்தப்படாமை அவை மீறப்படுகின்றமை போன்றவை பேச்சுவார்த்தைகள் குறித்த நம்பிக்கையை சிதறடிக்கும் வகையில் அமைந்து வருகின்றமை கண்கூடு.

அதாவது மக்களின் இயல்பு வாழ்க்கை தொடர்பாக ஒப்பந்தத்தில் கூறப்பட்ட பல விடயங்கள் அமுல் செய்யப்படாமை அவற்றிலே பிணக்குகள் ஏற்பட்டபோது பேச்சுவார்த்தை மேசையில் தீர்வு காணப்பட்டபோதும் அவை நடைமுறைப்படுத்தப்படாமை என்பன சாதாரண விடயங்களல்ல.

இதேவேளை இந்தச் சமாதான முயற்சிகளின் விளைவாக கிடைக்கவிருக்கும் தமிழர் பிரதேசத்தின் புனர்நிர்மாணத்திற்கான நிதி உதவி பெறும் விடயத்தில், பேச்சுவார்த்தை மேசையில் ஒப்புக்கொள்ளப்பட்டதற்கு மாறாக வாஷிங்டனில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழரின் ஏகபிரதிநிதிகளான விடுதலைப் புலிகள் புறக்கணிக்கப்பட்டமை ஒரு பாரதூரமான விடயமாகும். இது தமிழ் மக்களின் பேச்சுவார்த்தை குறித்த நம்பிக்கையை பெரிதும் சிதைத்திருக்கிறது

இவ்வாறு பேச்சுவார்த்தைகள் சமாதான முயற்சிகள் பல வீனமடைந்து செல்வது பொதுசன ஐக்கிய முன்னணி உட்பட இனவாத சக்திகள் அனைத்துக்கும் மகிழ்வூட்டுவதாகும். உண்மையில் சனாதிபதி எதிர்பார்க்கும் அரசியல் சூழ்நிலையும் அதுதான் என்பதில் சந்தேகிக்க எதுவுமில்லை. அரசாங்கமும் அந்தச் சூழ்நிலை நோக்கியே செல்கின்றது எனலாம்.

**வேலவன்**

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன்பின் உளவுச் செய்மதிகளைத் தயாரித்து விண்ணில் விடும் திட்டத்தை ஜப்பான் நடைமுறைப்படுத்தியது. மார்ச்சு2003 இல் ஜப்பானுக்குச் சொந்தமான இரு வேவுச் செய்திகள் விண்ணில் வலம் வரத் தொடங்கியுள்ளன. தோக்கியோ பல்பலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானப் பேராசிரியர் தக்காஷி இனோகுச்சி, கோரிய தீபகற்பத்தின் வடக்கு, தெற்கு பகுதிகள் ஒன்றிணைந்தால் ஜப்பான் தனது இராணுவபலத்தை இன்னும் கூடுதலாக்க வேண்டும் என்று கருதுகிறார். சீனா மூலம் ஆபத்து இல்லை என்றாலும் பலத்தோடு இருந்தால் அதற்குரிய மதிப்பும் மரியாதையும் கட்டாயம் கிடைக்கும் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். சீனாவுக்குப் போட்டி நாடாக ஜப்பானை நிறுத்துவது அமெரிக்காவின் அடிப்படைத் திட்டம்.

உலக அரங்கில் தனது அடையாளத்தை மீண்டும் பதிக்க வேண்டும் என்ற ஆர்வத்திற்குப் பொருத்தமான தேசிய எழுச்சி ஜப்பானியப் பொதுமக்கள் மத்தியில் காணப்படுகின்றது. சோம்பிக் கிடந்தது போதும் என்ற மனோநிலை தோன்றியுள்ளது. மிக அண்மைக்கால ஜப்பானில் வலதுசாரிக் கொள்கைகளும் அவற்றிற்கு செயல்வடிவம் கொடுக்கும் அரசியல்வாதிகளும் மேலெழுந்துள்ளனர். 1999இல் பிரதமர் பதவி வகித்த கீசோ ஒபுச்சி தேசியவாதிகளின் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்தார். இவர் புகுத்திய சட்ட மூலமான திருத்தங்கள் 'உலக அரங்கில் ஜப்பானின் அடையாளத்தை நிலைநாட்டும் திட்டத்தின் வெற்றி' என்று வர்ணிக்கப்படுகின்றன.

பிரதமர் கீசோ ஒபுச்சி நிறைவேற்றிய சட்டங்கள் பற்றிப் பார்ப்போம்:

01)இரண்டாம் உலகப் போரின் படுதோல்விக்குப் பின்பு ஜப்பான் கைவிட்ட தனது ஹினோ மாறு எனப்படும் தேசியக் கொடியையும், கிமிகாயோ என்ற தேசிய கீதத்தையும் சட்டபூர்வமாக்கியது.

02) அமைதியை முதன்மைப்படுத்தும் அரசியல் சாசனத்தின் வலுவைக் குறைத்தது,

03) ஜப்பானிய இராணுவத்திற்கும் காவல்துறைக்கும் கூடுதல் அதிகாரங்களைச் சட்டத்தின் மூலம் கொடுத்தது.

04) அரசியல் சாசனத்தின் சரத்து 21ஐ, புலனாய்வுத்துறையினருக்கு ஒட்டுக்கேட்கும் உரிமையை வழங்கி, வலுவிழக்கச் செய்தது.

முன்னாள் தோக்கியோ நகர ஆளுநர் ஷின்தாரோ இஷிகாராவும் மலேசியப் பிரதமர் மகாதீர் முகம்மதுவும் இணைந்து வெளியிட்ட 'ஆசியாவின் குரல்' என்ற 1995 நூலில் ஜப்பானியத் தேசியம் ஒரு அத்தியாவசியத் தேவை என்று வாதிடப்பட்டுள்ளது. 1941 இல் மலேசியா ஜப்பானியப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டது. இருப்பினும் மலேசிய வெளியுறவுக் கொள்கை ஆராய்ச்சி மையத்தின் கூற்றுப்படி ஜப்பானியத் தேசியத்தை நிராகரிக்க இயலாது. ஜப்பானியத் தேசியம் இரண்டாம் உலகப் போரில் விட்ட தவறை இம்முறைவிடத் தயாரில்லை. அமெரிக்காவுடன் இணைந்து உலக ஆதிக்கத்தில் பங்கெடுக்க அது விரும்புகின்றது.

9/11 நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து, பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டங்களை ஜப்பான் நிறைவேற்றியுள்ளது. படையினருக்கு மேலும் கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.ஜப்பானின் பாதுகாப்பை உறுதிசெய்யும நோக்கில் ஆயுதம் பாவிக்கும் உரித்தை வெளிப்படையாக வழங்கும் சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது. முதலாம் வளைகுடாப் போருக்குக் காசோலை அனுப்பிய ஜப்பான் இரண்டாம் வளைகுடாப் போர் தொடங்கு முன்பே டிசெம்பர் 2002 இல் ஒரு போர்க்கப்பல் அணியை வளைகுடாவுக்கு அனுப்பியுள்ளது. இந்த அணி அமெரிக்காவுடன் இணைந்து போரிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அது மாத்திரமல்ல ஜனவரி 2003 இல் அமெரிக்க செனேற்சபை உறுப்பினர் மெக்கேயின் வெளியுறவு சம்பந்தமான பேருரை ஆற்றும்போது "தனது பாதுகாப்புத் தேவைகளுக்காக ஜப்பான் தனக்குச் சொந்தமான அணு ஆயுதங்களைத் தயாரிக்க வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

நன்கொடைகளும், கடனுதவிகளும் வழங்குவதையே தனது வெளியுறவுக் கொள்கையாகக் கொண்டுள்ள ஜப்பான் இராணுவ ரீதியாகவும், இராசதந்திர ரீதியாகவும் பிற நாடுகளின் விவகாரங்களில் தலையிடும் போக்கை நடை முறைப்படுத்தத் தொடங்கியுள்ளது. இது தெற்கு ஆசியப் புவிசார் அரசியலில் மிகப் பெரியதொரு மாற்றமாகக் கணிப்பிடப்படுகின்றது. நன்கொடை வழங்குவதோடு நிறுத்திக்கொள், இலங்கை விவகாரங்களில் அதற்கு மேல் தலையிடாதே என்று இந்தியா ஜப்பானை பார்த்துக் கூறுகின்றது. அதை ஜப்பான் அசட்டை செய்வதாக இல்லை. சர்வதேச அரங்கில் தனக்கென இடத்தேடும் ஜப்பான் எப்படித்தான் இந்தியாவுக்குச் செவிசாய்க்கும் ▲▲

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –15



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

### படத்திற்கு மெருகூட்டுங்கள் –15

.................................................................

.................................................................

.................................................................

.................................................................


பெயர் : .................................................

முகவரி : .................................................

.................................................

**ஈழநாதம்**
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் 14



**மு.உமாநந்தினி,**
**சிவலோக வாசம் -கேணியடி,**
**ஆடியபாதம் வீதி,**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

### பரிசுக்குரிய வரிகள்

**இவை சிந்துவெளி அகழ்வில்கிடைத்ததல்ல - நேற்று**
**ஊர்பிடித்த பகை மண்ணில் பு(வி)தைத்தவை!**
**மானிட உரிமை பாடுவோர் இதை வந்துபார்க்கட்டும்**
**முடிந்தால் எம் உறவுகளை இனங்காண உதவுங்கள்!**

### பாராட்டுக்குரிய வரிகள்

ஊர் இழந்து, ஒருநேர கஞ்சிக்காய்
வளவுத்தேங்காய் பறிக்கச் சென்ற
எனது அப்பாவின் தலையும்
இதில் ஒன்று.

க. ராகுலா.
55ஆம் கட்டை,
கிளிநொச்சி.

இது சமாதான காலமாம் - சுக வாழ்விற்கு
வழிசமைக்க பல பேர்வருவாராம் - என்
மகன்(ள்) வாழ்விற்கு ஒளிகொடுக்க
எனைக் கொடுப்போர் யாரோ...?

V.கவி,
புதிய மதியரசி நகைமாடம்,
முல்லைவீதி, தர்மபுரம்.

காணாமல் போனாரே அன்று
கண்முன்னே இருக்குது எலும்புகள் இன்று
அப்பாவாய் இருக்குமோ என்று
ஏங்கி வாடுதே பிள்ளையின் நெஞ்சு

ஒளியன்,
முள்ளியவளை.
முல்லைத்தீவு.

அம்மணியின், சாதனையால் - எம்
அன்புச் செல்வங்களே - உமை நாம்
மலக்கிடங்குகளிலும் - மண் குழிகளிலும்
மண்டை ஓடுகளாய்த் தானே மீட்க முடிந்தது.

செ. நேசன்.
சோதனை நிலையம்.
புளியங்குளம்.

பலர் பார்த்து மகிழ்வதற்காக வைக்கப்பட்டிருக்கும்
மீயூசியத்துப் பொம்மைகள் அல்ல இவை
மண்ணிற்குள் மண்ணாக மரணித்துப் போன
திராவிடத்தின் வரலாற்று எச்சங்கள் அவை.

வளர் சிவஞானம்,
230,சில்வாவீதி,
வட்டக்கச்சி.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்**
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.
வழங்குகின்றது.






# நினைவு வணக்கம்

அன்னைபூபதியின் 15ம் ஆண்டு நினைவு வணக்கம் யேர்மனி வூப்பெற்றால் நகரில் வெகுசிறப்பாக நடைபெற்றது. 19.04.2003 மாலை 17.00 மணிக்கு ஆரம்பமாகிய நிகழ்வுகள் இரவு 22.00 மணிக்கு நிறைவு பெற்றது, அகவணக்கம், சுடர்வணக்கம், மலர் வணக்கத்தைத் தொடர்ந்து எழுச்சிநிகழ்வுகள் ஆரம்பமாகின, 500க்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு அன்னை பூபதியை நினைவு கூர்ந்தனர். இந்நிகழ்வில் யேர்மனி தமிழீழம் இசைக்குழுவால் இசையமைத்து, யேர்மனி வாழ் கலைஞர்கள் பாடி தாயகத்தில் வெளியாகிய கடற்கரும்புலிகள் பாகம் 5 இசைத்தட்டு யேர்மனியில் வெளியிடப்பட்டது. ஈகைச் சுடரை 19.04.93அன்று தவளைப்பாய்ச்சலில் மாவீரரான 2ம் லெப் தூயவன் என்றழைக்கப்படும் கந்தசாமி ஜெயரூபனின் சகோதரி, திருமதி ஜெயந்தி ஓம்பிரகாஸ் ஏற்றினார். எழுச்சி நிகழ்வுகளாக, நாட்டியநாடகம், நடனம், மெல்லிசை, வாத்திய இசை, நாடகம் என்பன நடைபெற்றன.

# SARS



தடிமனை ஏற்படுத்தும் கொறொனா வைரஸ் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு புதிய வைரஸின் தோற்றத்துடன் ஆரம்பமான 'சார்ஸ்' (SARS)என்னும் உயிர் கொல்லி நோய் இப்பொழுது சீனாவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. சீனாவின் குவாங்டொங் மாநிலத்தில் கடந்த வருட இறுதியில் ஆரம்பித்த இத்தொற்று சரியான முறையில் தெரியப்படுத்த தவறியமையால் பெரும் தாக்கத்தின் பின் கண்டறியப்பட்டு இப்பொழுது உலக சுகாதார ஸ்தாபனம் இதனை கட்டுப்படுத்தும் நடவடிக் கையில் இறங்கியுள்ளது.

சீனாவின் பெருஞ்சுவரில் உல்லாசப் பிரயாணியாக உலாவரும் மூதாட்டி ஒருவர் சாஸின் தாக்கத்திலிருந்து தன்னைப்பாதுகாக்க முகத்தை மூடிக் கொண்டு செல்வதைக்காணலாம்.




இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.